
November 2022

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

13ம் ஆண்டில்




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# இதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2022

சுவடி — 12
ஓலை — 9

## உள்ளே...

பொறுத்தார் ஆள்கிறார்!

உடும்புப்பிடியில் இரும்புத்திரை!

குட்டக்குட்ட நிமிர்!

தமிழே தமிழே

சேரமான் கனவு

தல வலம்

சிறுகதை

தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோக யாகம்!

மருத்துவ தமிழ்

உரையால் உயர்வோம்!



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

## வணக்கம் பல

இங்கிலாந்து மண்ணுக்குப் புதிய மன்னர் அரியணை ஏறியிருக்கும் சமயத்தில், அந்நாட்டுக்கு ஒரு புதிய பிரதமரும் கிடைத்திருக்கிறார். இது நல்லதொரு தொடக்கத்தை வழங்க வேண்டும் என்பதுதான் மக்கள் பிரதிநிதிகளின் குரலாக இருக்கிறது.

தனியொரு மனிதன் தன்னுடைய வாழ்வில் நிகழ்த்துகின்ற செயல்களும், எடுக்கின்ற முடிவுகளும் தன் வாழ்க்கைக்கு மட்டுமின்றி மக்களின் பொது வாழ்க்கைக்கும் நன்மை பயப்பதாக அமைந்துவிட்டால் அது வரலாற்றில் நிலைத்து விடும்!

தன்னுடைய செயல்களாலும் திட்டங்களாலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு பிரதமர், சரிந்து கிடக்கும் பிரிட்டனின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி, மக்கள் பணியில் சிறந்த தலைவராக முன்னிறுத்திக் கொள்வதற்கு கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி மக்களுக்குப் பலன்தரக் கூடியவற்றைச் செய்ய அவருக்கு வாழ்த்துக்களை முன்வைக்கின்றோம்!

சீனத்தில் அதிபர் பதவியில் மிகுந்த பெரும்பான்மை பலத்தோடு அமர்ந்திருக்கிறார் மீண்டும் அதே அதிபர்! சீனாவின் ஆதிக்கம் உலக அரங்கில் அதிகமாக இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை! அதிபருக்கு இருக்கக்கூடிய வானளாவிய அதிகாரங்கள் சீனாவை உலக அரங்கில் பெருமை தரக்கூடிய நாடாக மாற்ற வேண்டுமே அல்லாது தூற்றுவதாக அமைந்துவிடக் கூடாது. நன்மையைச் செய்தால் உலகம் வரவேற்கும்!

உலகின் இருபுறமும் இரண்டு உயர் பதவிகளில் வந்தமர்ந்திருக்கும் இந்த இருவரது செயல்பாடுகளையும் உலகம் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறது, நன்மை நடக்கும் என்று நம்புவோமாக!

மங்கைய ராகப் பிறப்பதற்கே — நல்ல மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!' என்ற கவிமணியின் வரிகளுக்கு முக்கால் நூற்றாண்டு ஓடிவிட்ட பின்னும், இந்த நவீன யுகத்திலும், தலிபான்களின் ஆட்சியின் மூலம் பெண்களின் கல்வி தடை செய்யப்படுகிறது என்பது குறித்த நல்ல பல ஆக்கங்களோடும் கதை, கவிதை, கட்டுரை என வழமை போல மலர்கின்ற நமது 'அய் தமிழ்' இதழை வரவேற்று வாசியுங்கள்!... நேசியுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# பொறுத்தார்

### சரித்திர நாயகன் ரிஷி சுனக்!

பிரிட்டனை ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக ரிஷி சுனக் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் அந்த நாட்டின் பிரதமராகத் தேர்வாகி இருக்கிறார்.

கன்சர்வேடிவ் தலைவர் பதவிக்கான தேர்தல் போட்டியிலிருந்து பென்னி மார்டன்ட் விலகியதைத் தொடர்ந்து, ரிஷி சுனக் கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் முதன்முறையாக பிரிட்டன் பிரதமராகிறார் என்கிற வரலாற்றை ரிஷி சுனக் படைத்துள்ளார்.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. தனக்கு 128 எம்.பி.க்களின் ஆதரவு உள்ளதாகக் கூறி கட்சித் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதாக ரிஷி சுனக் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

ரிஷி சுனக் கடந்த 2009—இல் இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தியின் மகள் அக்ஷதா மூர்த்தியைத் திருமணம் செய்துகொண்டார். 2020—இல் போரிஸ் ஜான்சன் தலைமையிலான அரசில் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கரோனா நெருக்கடிக்கு மத்தியில் நிதித் துறையைத் திறமையாகக் கையாண்டதால், போரிஸ் ஜான்சனுக்குப் பிறகு அடுத்த பிரதமர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றார் ரிஷி சுனக்.

போரிஸ் ஜான்சன் ராஜிநாமாவுக்குப் பிறகு, கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவிக்கு லிஸ் டிரஸுக்கு எதிராகப் போட்டியிட்டார். இதில் லிஸ் டிரஸ் வெற்றி பெற்று பிரிட்டன் பிரதமரானார்.

கடந்த கோடை காலத்தில் பிரதமர் பதவிக்கான போட்டியில் முதலாவது முறையாக களம் கண்ட ரிஷி சூனக் முதன்மையாக ஒரு பிரச்னையில் கவனம் செலுத்தினார்: பிரிட்டனின் மோசம்

- Sunak was born in 1980, in the port city of Southampton
- His parents had immigrated to the UK from East Africa in the 1960s
- He attended Winchester College, a private school, then studied philosophy, politics and economics at Oxford
- He worked for investment bank Goldmach Sachs
- In 2009, he married fashion designer Akshata Murthy, the daughter of Indian billionaire N R Narayana Murthy
- Since 2015, he has been a Conservative MP
- In 2020, he was appointed chancellor of the exchequer before quitting in July 2022
- Months later, on October 25, he became the UK's prime minister



# ஆள்கிறார்!

அடைந்து வரும் பொருளாதாரம் — அதை சீர்படுத்துவதற்கு தீர்வு என்பதே அந்தத் திட்டம்.

அந்த போட்டியின் போது சூனக் பிபிசியிடம் பேசுகையில், "பொய்யான வாக்குறுதியில் வெற்றி பெறுவதை விட" டோரி தலைமைப் போட்டியில் தோல்வியடைவேன் என்று கூறியிருந்தார்.

சூனக் வசம் வந்தது. 2020ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் ஆபத்தில் உள்ள மக்களுக்கு உதவ "எதை வேண்டுமானாலும்" செய்வதாக அவர் உறுதியளித்தார் — மேலும் £350 பில்லியன் மதிப்புள்ள திட்டத்தை அவர் வெளியிட்டார் — அவரது தனிப்பட்ட கருத்துக்கணிப்பு மதிப்பீடுகள் பரவலான கவனத்தை ஈர்த்தன.



லிஸ் டிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு, நிதிச் சந்தைகளை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் கிட்டத்தட்ட அனைத்து முன்மொழியப்பட்ட வரிக் குறைப்புகளும் திரும்பப் பெறப்பட்டன.

2020ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரிஷி சூனக் நிதியமைச்சர் ஆனார். அதற்கு சில நாட்களிலேயே பிரிட்டனில் கொரோனா பாதிப்பு தீவிரம் காரணமாக பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டிய முக்கிய பொறுப்பு ரிஷி

ஆனால் பிரிட்டன் தொடர்ந்து மோசமான பொருளாதார நிலையால் பாதிக்கப்பட்டு வந்தது. மேலும் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் டௌனிங் ஸ்ட்ரீட்டில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் கொரோனா பொதுமுடக்க விதிகளை மீறியதற்காக காவல்துறையினரால் அபராதம் விதிக்கப்பட்ட நடவடிக்கையை ரிஷி சூனக் சமாளிக்க வேண்டி இருந்தது.

கடந்த ஏப்ரலில் சில பழமைவாத விமர்சகர்கள், போராடும் குடும்பங்கள் எதிர்கொள்ளும்




வாழ்க்கைச் செலவு அழுத்தத்தின் அளவை கோடீஸ்வர அமைச்சர் புரிந்து கொண்டாரா என்று கேள்வி எழுப்பினர்.

அந்த மாதத்தில், ரிஷி சூனக் மற்றும் அவரது குடும்பத்தினரின் நிதிகள் தீவிர ஆய்வுக்கு உட்பட்டன, அவருடைய மனைவி அக்ஷதா மூர்த்தியின் வரி விவகாரங்கள் சர்ச்சை ஆக்கப்பட்டன.

பின்னர் அவர் தனது கணவர் மீதான அரசியல் அழுத்தத்தைத் தணிக்க, தமது வெளிநாட்டு வருமானத்திற்கு உள்நாட்டு வரியை செலுத்தத் தொடங்குவதாக அறிவித்தார். தொழிலாளர் கட்சி இந்த நிதி முறைகள் குறித்து பல கேள்விகளை முன்வைத்தது. 2020ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள் மற்றும் கேமன் தீவுகளில் உள்ள வரி புகலிட அறக்கட்டளைகளின் பயனாளியாக அவர் பட்டியலிடப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் ரிஷி சூனக்குக்கு தொடர்பு இருப்பதாக இன்டிபென்டன்ட் நாளிதழ் கூறியது. அந்த தகவல்களை ஏற்கப்போவதில்லை என்று ரிஷி சூனக்கின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

குடும்பப் பின்னணி

ரிஷி சூனக்கின் பெற்றோர் கிழக்கு ஆஃப்ரிக்காவில் இருந்து இங்கிலாந்துக்கு வந்தவர்கள். இருவரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். அவரது தந்தை தற்போதைய கென்யாவில் பிறந்து வளர்ந்தார், அதே நேரத்தில் அவரது தாயார் தங்கனிகாவில் (பின்னர் தான்சானியாவின் ஒரு பகுதியாக மாறியது) பிறந்தார்.

இவரது தாத்தாக்கள் இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் பிறந்தவர்கள் மற்றும் கிழக்கு ஆஃப்ரிக்காவில் இருந்து 1960களில் தங்கள் குடும்பங்களுடன் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தனர்.

ரிஷி சூனக், 1980இல் சௌத்தாம்டனில் பிறந்தார். அங்கு அவரது தந்தை பொது மருத்துவராக இருந்தார். இவரது தாயார் சொந்தமாக மருந்தகத்தை நடத்தி வந்தார்.வின்செஸ்டர் கல்லூரியில் பயின்ற இவர் பின்னர் தத்துவம், அரசியல் மற்றும் பொருளாதாரம் படிக்க ஆக்ஸ்போர்டு சென்றார்.

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ படிக்கும் போது, இந்திய கோடீஸ்வரரும், ஐடி சேவை நிறுவனமான இன்ஃபோசிஸின் இணை நிறுவனருமான நாராயணமூர்த்தியின் மகளான அக்ஷதா மூர்த்தியைச் சந்தித்தார் ரிஷி சூனக். பிறகு இந்த ஜோடி திருமணம் செய்து கொண்டது. இந்த தம்பதிக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

பிரதமர் பதவிக்கான தமது முந்தைய தலைமை

பிரசாரத்தின் போது, காலநிலை மாற்றத்தின் பின்னணியை குறிப்பிடும்போது, அவர் தனது மகள்களை அடிக்கடி குறிப்பிட்டார்.

பிபிசி தொலைக்காட்சி விவாதத்தின் போது




பருவநிலை மாற்றம் குறித்த கேள்விக்கு பதிலளித்த சூனக், “எனது வீட்டில் நிபுணர்களாக இருக்கும் எனது இரண்டு இளம் மகள்களிடமிருந்து ஆலோசனை பெற்றேன்” என்றார்.

2001 முதல் 2004ஆம் ஆண்டு வரை, சூனக் கோல்ட்மேன் சாக்ஸ் என்ற நிறுவனத்தின் நிதி ஆய்வாளராக இருந்தார். பின்னர் இரண்டு ஹெட்ஜ் முதலீட்டு நிறுவனங்களில் அவர் பங்குதாரராக இருந்தார்.

பணக்கார நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக கருதப்படும் ரிஷி சூனக், தமது சொத்து மதிப்பு என்ன என்பதை பகிரங்கமாக இதுவரை தெரிவிக்கவில்லை.

## அரசியல் பயணம்

2015 முதல் அவர் யார்க்ஷயரில் உள்ள ரிச்மண்டின் கன்சர்வேடிவ் எம்.பி.யாக இருந்து வருகிறார், மேலும் தெரீசா மே அரசாங்கத்தில் இளைய அமைச்சராக இருந்தார். தெரீசா மேவுக்குப் பிறகு பிரதமரான போரிஸ் ஜான்சன் அமைச்சரவையில் ரிஷி சூனக், நிதியமைச்சராக இருந்தார்.

2020ஆம் ஆண்டு பிப்ரவரியில் நிதியமைச்சராக பதவி உயர்வு பெற்ற ரிஷி, போரிஸ் ஜான்சனின் தீவிர ஆதரவாளராக இருந்தார், ஆனால் பொருளாதார சீர்படுத்தும் நடவடிக்கையில் தமது சொந்த அணுகுமுறையை நம்பிய அவர், பிரதமரின் அணுகுமுறைக்கும் தமது அணுகுமுறைக்கும் இடையிலான “அடிப்படை” வேறானது என்று கூறி தமது பதவியை ராஜிநாமா செய்தார்.

போரிஸ் ஜான்சன் பதவி விலகிய பிறகு நடந்த பிரதமர் பதவிக்கான போட்டியில் டோரி தலைமைப் பிரசாரத்தின் போது அவரது பிரெக்சிட் சொல்லாட்சி வெளிப்பட்டது, ஆனால் இந்த முறை அது சூனக்கிற்கு எதிராகத் திரும்பியது.

பிரிட்டன் பிரதமராகும் முதலாவது ‘பிரிட்டிஷ் ஆசியர்’ என்ற வகையில் ரிஷி சூனக் வரலாறு படைத்திருக்கிறார்

பிரிட்டன் பிரதமராகும் முதலாவது பிரிட்டிஷ் ஆசியராக ரிஷி சூனக் வரலாறு படைத்துள்ளார். அவர் புதிய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக வாக்களித்து தேர்வான பிறகு இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் அரசி இரண்டாம் எலிசபெத்தின் பவள விழா

கொண்டாட்டங்களுக்கான கிரேட் அய்டன் கிராம விழாவை சூனக் அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். வெளிநாட்டில் நடக்கும் யுக்ரேன் போர் காரணமாக உள்நாட்டில் தங்களுடைய வாழ்க்கைச் செலவை சமாளிக்க பலர் போராடுகிறார்கள். சார்லஸின் சொத்து மதிப்பினை விட இரு மடங்கு அதிகம் என்றும் கூறப்படுகின்றது. மூன்றாம் சார்லஸ் மன்னரின் மற்றும் கமிலாவின் சொத்து மதிப்பானது 300 மில்லியன் பவுண்டுகள் முதல் 350 மில்லியன் பவுண்டுகள் வரையில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




இத்தகைய சூழலில் அரசாங்கத்தில் நிலவிய குழப்பமான இரண்டு மாதங்களுக்குப் பிறகு, புதிய பிரதமர் ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்துவார் என்று பலர் நம்புகிறார்கள்.

ரிஷி சூனக், கன்சர்வேட்டிவ் கட்சிக்குழு தலைமைக்கான பிரசாரத்தின் போது, தேல்ஸ் பாதுகாப்பு அமைப்பிற்குச் சென்றார் அங்கு யுக்ரேனுக்கு வழங்கப்பட்டதைப் போன்ற, டேங்க் எதிர்ப்பு லாஞ்சரைப் பார்வையிட்டார்.

இந்த முன்னேற்றங்களுக்குப் பிறகு ஏழு வாரங்களில் மூன்றாவது கன்சர்வேடிவ் பிரதமராகிறார் ரிஷி சூனக். அத்துடன் பிரிட்டனின் முதல் பிரதமராகும் பிரிட்டிஷ் ஆசிரியர் ஆகவும் அவர் வரலாறு படைத்திருக்கிறார்.


ரிஷி சுனக் மற்றும் அக்ஷதா மூர்த்தியின் நிகர சொத்து மதிப்பானது, இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸினை விட அதிகம் என்றும் கூறப்படுகின்றது. ரிஷி சுனக் மற்றும் அக்ஷதா மூர்த்தி தம்பதிகளின் சொத்து மதிப்பு 730,000,00 பவுண்டாகும். இது இங்கிலாந்து மன்னர் மூன்றாம்

உச்சத்தில் உள்ள பணவீக்கம், உயரும் வட்டி விகிதங்களால் இங்கிலாந்து பொருளாதாரம் பெரும் சவாலை எதிர்கொள்ளலாம். உயர்ந்து வரும் எரிபொருள் விலை, நாணயச் சந்தைகளில் டாலருக்கு எதிரான பவுண்டு மதிப்பு சரிவு, மொத்தத்தில் சரிவு பாதையில் சென்று கொண்டுள்ள இங்கிலாந்து பொருளாதாரத்தினை மீட்பதே சுனக்கிற்கு பெரும் சவாலாக இருக்கும்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக், இங்கிலாந்தின் 57—வது பிரதமராக பதவியேற்றுள்ளார். இங்கிலாந்தின் முதல் இந்து பிரதமர், வெள்ளையினத்தை சாராத முதல் பிரதமர், முதல் இந்திய வம்சாவளி பிரதமர் உள்ளிட்ட பல்வேறு பெருமைகளை ரிஷி சுனக் பெற்றுள்ளார். இன்போசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தியின் மருமகனான ரிஷி, இளம் வயதில் (42) பிரதமராகி, கடந்த 200 ஆண்டுகளில் இல்லாத சாதனையை படைத்துள்ளார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்





# சொல்றாங்க... சொல்றாங்க...



"பறவை விடுவிக்கப்பட்டது'!"

**எலான் மஸ்க்**

(ட்விட்டர் சுதந்திரமாக செயல்படுவது இருக்கட்டும். பொறுப்போடு செயல்படுமா?



"தீவிரவாதிகளின் முக்கிய ஆயுதங்களாக சமூக ஊடகங்கள் உள்ளன"

**வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்**


(இப்படிச் சொல்லி சொல்லித்தான் நாட்டில் உரிமைக்குரல்கள் அடக்கப்படுகின்றன.)



"ஆன்லைன் ரம்மி தடை மசோதா இன்னும் எனது பரிசீலனையில் உள்ளது"

**தமிழ்நாடு ஆளுநர் ரவி**

(ட(ர)ம்மி ஆட்டம் ரொம்பதான் ஓவரா போய்க்கிட்டு இருக்கு!)



"வளமான எதிர்காலத்துக்கு நாட்டை வழிநடத்துவேன். அரசியலைத் தாண்டி மக்கள் நலனுக்கு முன்னுரிமை அளிப்பேன்!"

**ரிஷி சுணக்**

(அடடா! இப்படிக் கேட்பதும், அதன் செயல்வடிவைக் காண்பதும்தான் இப்போது இங்கிலாந்து மக்களின் தேவையாக இருக்கிறது.)

# உடும்புப்பிடியில்

## ஷி ஜின்பிங்: சீனாவின் வீழ்த்த முடியாத தலைவர்

சமீபத்திய தசாப்தங்களின் வலுவான சீனத் தலைவராக ஷி ஜின்பிங் உருவெடுப்பார் என சிலர் கணித்திருந்த நிலையில், தற்போது மூன்றாவது முறையாக ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார். சீனாவின் புரட்சிகர தலைவர் ஒருவரின் மகன் என்பதைத் தவிர அவர் கடந்த சந்தேகத்திற்கு இடமற்ற மற்றும் நிகரற்ற அதிகாரம் கொண்ட தலைவராக ஷி ஜின்பிங் உருவெடுத்தார். இது எப்படி நடந்தது?

### துப்பாக்கிக் குழல்

'அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலுக்கு வெளியே வளர்கிறது' என்பது கம்யூனிஸ்ட் சீனாவின் நிறுவனத் தந்தையாக அறியப்படும் மா சேதுங்கின் பிரபலமான வாசகம். 1949இல் சீன





தசாப்தத்தில் பெரிய அளவில் அறியப்படவில்லை. சீன கம்யூனிஸ்ட் கட்சியில் ஓய்விற்குப் பிறகும் தலைவர்கள் ஆதிக்கம் கொண்டவர்களாக இருப்பதால், கட்சிக்குள் அதிகாரம் பெறுவது மிகக் கடினம். ஆனால், ஷி ஜின்பிங்கிற்கு அவரது குடும்பப் பின்புலம் உதவியது.

“இந்த எழுச்சிக்கு முன்னதாக அனைவருடனும் சமரசம் செய்து கொள்ளக் கூடிய தலைவராகவே ஷி ஜின்பிங் கருதப்பட்டார்,” என்கிறார் பாஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சீன மேல்மட்ட அரசியலில் நிபுணத்துவம் பெற்ற ஜோசஃப் ஃபியூஸ்மித். ஆனால், அடுத்த பத்து ஆண்டுகளில் மக்கள் குடியரசை தோற்றுவித்த பிறகு, பிஎல்ஏ எனப்படும் மக்கள் விடுதலை ராணுவத்தை கட்சியே கட்டுப்படுத்தும் என்பதை மா சேதுங் உறுதி செய்தார். அப்போது முதல், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரே மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவர் பொறுப்பிற்கு உடனடியாக வந்ததில் தனது முன்னவரான ஹு ஜிண்டாவோவைவிட ஷி ஜின்பிங் அதிர்ஷ்டசாலி. ராணுவத்தினுள் இருந்த எதிர்ப்பைக் களைய அவர் நேரத்தை வீணடிக்கவில்லை.

# இரும்புத்திரை

கிரேஸ் சோய் , சில்வியா சாங்

*2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மத்திய ராணுவ ஆணையத்தின் முன்னாள் துணைத் தலைவர் ஷு ஹைகா மற்றும் மக்கள் விடுதலை ராணுவத்தின் முன்னாள் ஜெனரல் ஹு பாக்ஸாங் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது அதிர்ச்சிகரமான அத்தியாயம் தொடங்கியது. "ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானபோது அவர்கள் இருவருமே ஒய்வு பெற்றவர்கள். ஆனால், ஷி ஜின்பிங் அவர்களைக் குறிவைத்தது, சீன முன்னாள் தலைவர் ஜியாங் ஜெமின் மக்கள்*




விடுதலை ராணுவத்தில் கொண்டிருந்த நீடித்த செல்வாக்கைக் குறைத்தது" என்கிறார் பென்டகன் நிதியுதவியில் செயல்பட்டுவரும் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோயல் வுத்னோ. இது ஷி ஜின்பிங்கை எதிர்க்கும் யாரும் தப்பிக்க முடியாது என்று தற்போது இருக்கும் ராணுவ அதிகாரிகளுக்கு வலுவான எச்சரிக்கையைக் கொடுத்ததாகவும் அவர் கூறுகிறார்.

2015ஆம் ஆண்டு ராணுவத்தின் கட்டமைப்பை ஜின்பிங் மாற்றியமைத்தார். ஊழியர்கள், அரசியல், தளவாடங்கள் மற்றும் ஆயுதங்கள் என்று இருந்த நான்கு ராணுவ தலைமையங்களை ஒழித்து, அவற்றை 15 சிறிய முகமைகளாக மாற்றினார்."இந்தப் புதிய அமைப்பு, ராணுவத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு மத்திய ராணுவ ஆணையம் நேரடியாக உத்தரவுகள் வழங்க அனுமதித்தது. நிதித்தணிக்கையாளர்கள் கூட இவர்களிடேமே நேரடியாக தொடர்புவைத்திருக்க வேண்டும்" என்கிறார் ஜோயல் வுத்னோ. இவை அனைத்திற்கும் அப்பால், இது முழுமையாக ஷி ஜின்பிங்கிற்கு விஸ்வாசமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. நாட்டின் அதிகாரபூர்வ ராணுவ நாளேடான மக்கள் விடுதலை ராணுவ நாளிதழ், மத்திய ராணுவ ஆணையம் அனைத்து அதிகாரமும் கொண்டது என்பதை அழுத்தமாகக் கூறும் வகையில் கடந்த மாதம் கட்டுரை

வெளியிட்டது. மக்கள் விடுதலை ராணுவத்தின் மூத்த தலைவர்களுக்கு ஆதரவு பெருகி, பின்னாளில் அவர்கள் ஜின்பிங்கிற்கு எதிராக திரும்பிவிடும் அமைப்பு ரீதியாக பொறுமையாக முன்னேறினார்" என்று யூரேசியா குழுமத்தின் மூத்த சீன ஆய்வாளர் நீல் தாமஸ் கூறுகிறார். ஜின்பிங்கின் வளர்ச்சியை



போக்கைத் தடுப்பதற்கு இந்தக் கட்டுரை உதவும் என்கிறார் மூத்த சர்வதேச பாதுகாப்பு ஆராய்ச்சியாளர் திமோதி ஹீத். கட்சிக்கு விஸ்வாசம் என்பதற்கு கட்சியையும், குறிப்பாக ஜின்பிங்கையும் ஆட்சியில் வைத்திருக்க மக்கள் விடுதலை ராணுவம் அனைத்து உத்தரவுகளையும் பின்பற்ற வேண்டும் என்று பொருள்.

## விஸ்வாசத்திற்கே முதலிடம்

நாட்டின் ராணுவத்தை தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்த பிறகு, உள்நாட்டு பாதுகாப்பு விஷயங்கள் குறித்து ஜின்பிங் கவனம் செலுத்த ஆரம்பித்தார். ஜின்பிங் ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளில் முன்னாள் உள்நாட்டுப் பாதுகாப்புத் தலைவர் சோ யோங்காங்கை ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்ததை அதிகாரிகள் உறுதிசெய்கின்றனர். இவர் ஜின்பிங்கிற்கு போட்டியாக இருந்த போ ஷிலையுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். அதிசக்திவாய்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பான பொலிட்பீரோ நிலைக்குழுவின் உறுப்பினர்கள், குற்றவியல் தண்டனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற சொல்லப்படாத விதிக்கு மாறாக இருந்த இந்த விசாரணை அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

"இரக்கமற்ற புத்திசாலித்தனமிக்க அரசியல்வாதியாக மாறியுள்ள ஷி ஜின்பிங், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பாக, ஆதரித்த கம்யூனிஸ்ட் மூத்த தலைவர்களே அவரது வேகம் மற்றும் கைப்பற்றிய அதிகார அளவைக் கண்டு வியந்திருக்கலாம். ஜின்பிங்கின் ஊழலுக்கு எதிரான பிரசாரம், அவரது அரசியல் போட்டியாளர்கள் மற்றும் கட்சிக்குள் இருந்த பிற அணிகளைக் களைய உதவியதாக அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த தசாப்தத்தில் 4.7 மில்லியனுக்கும் அதிகமானோர் ஊழல் தடுப்பு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டுள்ளனர். தனது வளர்ச்சிக்கு ஆதரவளித்த பாதுகாப்பு அதிகாரிகள் பலரை ஜின்பிங் கடந்த இரண்டு ஆண்டுகளில் நீக்கியுள்ளதாகக் கூறுகிறார் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானி விக்டர் ஷிஹ். தற்போது பாதுகாப்பு முகமைகள் கிட்டத்தட்ட ஜின்பிங்குடன் கடந்த காலங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் மற்றும் அவரின் நம்பிக்கைக்குரியவர்களைக் கொண்டு இயங்குவதாகவும் அவர் கூறுகிறார்.

பெய்ஜிங், ஷாங்காய், சோங்கிங் உட்பட பல முக்கிய நகரங்களின் கட்சி செயலாளர் போன்ற முக்கிய பிராந்திய பதவிகளிலும் ஜின்பிங் தன்னுடைய விசுவாசிகளை நியமித்துள்ளார். "இந்தப் பதவிகள் முக்கியமானவை. ஏனெனில் மில்லியன் கணக்கான மக்களிடம் மத்திய உத்தரவுகளை விளக்குவதும் செயல்படுத்துவதும் அவர்களது பொறுப்பு" என்கிறார் தாமஸ்."மொத்தமுள்ள 31 மாகாண




என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

"ஜின்பிங்கின் சிந்தனை கட்சியிலும் நாட்டிலும் அவரது அதிகாரத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய ஆளுமை வழிபாட்டின் ஒரு பகுதியான இது, ஜின்பிங்கை மாவோவுடன் மட்டுமல்லாமல் கடந்த காலத்தின் புகழ்பெற்ற மற்றும் வெற்றிகரமான சீன பேரரசர்களுடன் இணைக்கிறது," என்கிறார் ஹாங்காங் பாப்டிஸ்ட் பல்கலைக்கழக அரசியல் அறிவியல் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஜீன்—பியர் கபெஸ்டன். புகழ்பெற்ற பீக்கிங் பல்கலைக்கழகம் மற்றும் சிங்குவா பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஜின்பிங்கின் பெயரில் ஆராய்ச்சி மையங்களை அமைத்துள்ளதாக ஹாங்காங் செய்தித்தாள் மிங் பாவ் கூறுகிறது. தேசிய பாடத்திட்டத்தில் ஜின்பிங் சிந்தனையை ஊக்குவிக்கும் திட்டத்தை கடந்த ஆகஸ்ட் மாதம் கல்வி அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

கட்சிச் செயலாளர்களில் குறைந்தது 24 பேர், ஜின்பிங்கின் அரசியல் கூட்டாளிகள், அவரது குடும்பத்தை நன்கு அறிந்தவர்கள், அவருடன் படித்தவர்கள், அவருக்குக் கீழ் பணிபுரிந்தவர்கள் அல்லது அவருக்கு நெருங்கிய ஒருவருக்காக வேலை செய்தவர்கள்" என்றும் அவர் கூறுகிறார்.

இதற்கிடையே, மாகாண நிலைக் குழுக்களில் உள்ள 281 உறுப்பினர்களில் ஏறக்குறைய அனைவரும் ஜின்பிங்கினால் வளர்ச்சி அடைந்தவர்கள் என்பது விக்டோரியா பல்கலைக்கழகத்தின் அரசியல் பேராசிரியரான வு குவோகுவாங் தொகுத்த தரவுகள் கூறுகின்றன. தனி அடையாளத்தை உருவாக்குதல். புதிய சகாப்தத்திற்கான சீனப் பண்புகளுடன் கூடிய சோசலிசம் பற்றிய ஷி ஜின்பிங் சிந்தனை சீனாவின் அரசியலமைப்பில் கடந்த 2018ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டது.

இது உச்சரிப்பதற்கு கடினமாக இருக்கலாம். ஆனால், தன்னுடைய பெயரில் சித்தாந்தத்தை உருவாக்கியது அவரது பாரம்பரியத்தை வலுப்படுத்தியது.

ஜின்பிங்கிற்கு முன்னதாக மாவோ மட்டுமே இதைச் செய்தார். சீனாவின் நவீனமயமாக்கலின் சிற்பி என்று அழைக்கப்படும் டெங் சியாவோபிங்கூட அவரது பெயரில் ஒரு கோட்பாட்டை மட்டுமே கொண்டிருந்தார். ஜின்பிங்கின் முன்னவர்களான ஜியாங் ஜெமின் மற்றும் ஹூ ஜிண்டாவோ ஆகிய இருவரும் தங்களது பெயரில் கோட்பாடோ சிந்தனையோ கொண்டிருந்ததில்லை. ஜின்பிங்கின் சிந்தனை என்ன என்பது விவாதத்திற்குரியது. ஆனால், அது முக்கியமில்லை. இது அதிகார நகர்வு

கடந்த 2019ஆம் ஆண்டு ஜின்பிங்கிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள், நாட்டை வலுப்படுத்துங்கள் எனப் பொருள் கொள்ளும் வகையில் Xuexi Qiangguo என்ற மொபைல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தச் செயலியில் ஷி ஜின்பிங்கின் சிந்தனை தொடர்பான வினாடி வினாக்களும் உள்ளன. தான் சரியான அரசியல் சித்தாந்தம் கொண்டிருப்பதாகவும் அதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஜின்பிங் நினைப்பதாக கொலம்பியா பல்கலைக்கழக அரசியல் அறிவியல் பேராசிரியர் ஆண்ட்ரூ நாதன் கூறுகிறார். "மாவோ கொள்கை நிலைப்பாட்டை எடுக்கும்போதெல்லாம் அதை அனைவரும் பின்பற்ற வேண்டியிருக்கும். அதைத்தான் தற்போது ஜின்பிங்கும் செய்கிறார்" என்கிறார் ஆண்ட்ரூ நாதன்.

மூன்றாவது முறையாக அதிகாரம் வழங்கப்பட்டதும் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் மற்றும் மிகப்பெரிய ராணுவப் படைகளுக்கு ஷி ஜின்பிங் தன்னுடைய தலைமையைத் தொடர்வார்.தன்னுடைய மூன்றாவது ஐந்தாண்டு காலத்தில் அவர் சீனாவை இன்னும் எதேச்சதிகார அரசியல் நிலைப்பாட்டை நோக்கி தள்ளக்கூடும் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஷி ஜின்பிங் தலைமையில் சீனா சர்வாதிகார திசையில் நகர்வதாகக் கூறுகிறார் லண்டன் பல்கலைக்கழகத்தின் ஓரியண்டல்

மற்றும் ஆப்ரிக்க ஆய்வுப் பள்ளியின் பேராசிரியர் ஸ்டீவ் சாங். "மாவோ தலைமையிலான சீனா ஒரு சர்வாதிகார அமைப்பாக இருந்தது. நாம் இன்னும் அந்த நிலையை அடையவில்லை. ஆனால், அந்தத் திசையை நோக்கிச் செல்கிறோம்" என்றும் அவர் கூறுகிறார்.



சமீபத்திய தசாப்தங்களில் சீனாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டிருந்தாலும், கொரொனா பொதுமுடக்கம், விலைவாசி அதிகரிப்பு மற்றும் சொத்து நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக தற்போது கடும் நெருக்கடிகளை சீனா எதிர்கொள்கிறது. யுக்ரேன் போரினால் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தநிலை பற்றிய வளர்ந்து வரும் அச்சங்களும் சீனாவின் நம்பிக்கையை சேதப்படுத்தியுள்ளன.

சீன தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் மற்றும் நல்ல வேலைகளை வழங்குவதில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் சட்டப்பூர்வமான தன்மையில் தேக்கம் இருப்பதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே அடுத்த ஐந்து ஆண்டுகளில் மோசமான பொருளாதார செயல்திறன் ஷி ஜின்பிங்குக்கு கடும் அரசியல் சிக்கலை ஏற்படுத்தலாம். கொரோனா ஒழிப்பு. உலகின் பெரும்பகுதி இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ள நிலையில், சீன அதிகாரிகள் கடுமையான முடக்கம், சோதனைகள் மற்றும் நீண்ட தனிமைப்படுத்தல்களுடன் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தனது கொரோனா கொள்கையைச் சிதைக்கும், சந்தேகிக்கும் அல்லது மறுக்கும் எந்தவொரு வார்த்தை மற்றும் செயல்களுக்கு எதிராக உறுதியுடன் போராடுவேன் என ஷி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

சீன மக்கள் குடியரசின் நூற்றாண்டு விழா 2049ஆம் ஆண்டில் கொண்டாடப்பட இருக்கும் நிலையில், அதற்குள் தைவானுடனான மறு ஒருங்கிணைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஷி ஜின்பிங் கூறியுள்ளார். சீனா தைவானை கைப்பற்றினால் மேற்கு பசிபிக் பெருங்கடல் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பகுதிகளில் அமெரிக்காவின் பலம் குறையும் என்று பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர். 'முதல் தீவு சங்கிலி' என அறியப்படும் தொகுப்பில் ஒரு பகுதியாக இருக்கும் தைவான், மேற்குலக நாடுகளின் வியூக வகுப்பில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளது. பல தசாபதங்களாக அமெரிக்காவுடன் இணைந்துள்ள பல பகுதிகளும் இதன் ஒருபகுதியாக உள்ளன.

ஷி ஜின்பிங் தற்போது வகிக்கும் பதவிகள்

- பொதுச் செயலாளர் என்ற முறையில் அவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக உள்ளார்.
- அதிபர் என்ற முறையில் அவர் சீனாவின் தலைவர்.
- சீனாவின் மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவராக அவர் நாட்டின் ஆயுதப் படைகளுக்கு தலைமை தாங்குகிறார்.

அவர் சீனாவின் உயர்ந்த தலைவர் என்றும் குறிப்பிடப்படுகிறார்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡ്ലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा




*பண்பாட்டைக் காக்கும் பண்டிகைகள்!*

பணியின் காரணமாகப் புலம்பெயர்ந்து வாழும் பலருக்கும் பண்டிகைக் காலம் என்பது சொந்த ஊருக்குச் சென்றாக வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கிவிடுகிறது. பிறந்த ஊருக்குச் சென்று தன் மக்களோடு கொண்டாடும் மகிழ்வுக்குத்தானே உழைப்பு, சம்பாத்தியம் எல்லாம் என்கிற உணர்வு அவர்களைப் பிடித்து உந்தவே செய்கின்றது.

சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் வந்து குடியேறிப் பல்வேறு பணிகளைச் செய்கிற பலரும் சொந்த ஊருக்குத் திரும்புகிற நிலையில் ஒருவித அமைதித் தனிமை அங்கே குடிகொண்டு விடுகிறது. ரயில் நிலையங்களும், பேருந்து நிலையங்களும் திடீரென்று திருவிழாக் கோலங்கொண்டு விடுகின்றன.

எத்தனை நெரிசலிலும் நின்று நெடுநேரம் காத்திருந்து பயணித்துச் சொந்த ஊருக்குச் சென்று சேருகின்றபோது அத்தனை களைப்பையும் மாற்றி உற்சாகம் ஊட்டுகிற உறவுகள் வரவேற்க வந்துவிடுகின்றன. வயிற்றுப்பாட்டுக்கான வாழ்க்கைப்பாடுகளை அமைத்துக் கொண்டு வெவ்வேறு நகரங்களில் சென்று பணியாற்றுகிற அனைவரும் ஒன்றுசேருகிறபோது ஏற்படும் மகிழ்வு ஒன்றுக்காகத்தான் இத்தனை பாடுகளும்.

ஒருவருக்கொருவர் கண்டுகொள்ளவும் உரையாடிக் கொள்ளவும், கைப்பேசி முதலான தொலைத்தொடர்பு சாதனங்கள் துணைபுரிந்தாலும் நேருறக் கண்டு கொண்டாடி மகிழ்வதற்கு, பண்டிகைக் காலம்தான் உற்ற துணை. அதிலும் உறவுகளுக்குள் நேர்ந்திருக்கும் நல்லது கெட்டதுகளுக்குச் செல்ல முடியாதவர்கள், இந்தப் பண்டிகைக் காலத்தையே பெரிதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இனிப்புக்களோடு மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொள்ளுகிறார்கள்.

கடந்த காலத்தில், கரோனா நோய்த்தொற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் முற்றிலும் தவிர்ந்த நிலையில் இவ்வாண்டு தீபாவளி அமைந்ததில் பலருக்கும் மகிழ்ச்சி. பொதுமுடக்கத்தின் காரணமாக நிலைகுலைந்து போயிருந்த தொழில்கள், பணிகள் வாழ்க்கைப் போக்கை முற்றிலும் மாற்றிப் போட்டபிறகு, மெல்லத் தலையெடுத்து மீண்டுவரும் காலத்தில், இந்தத் தீபாவளி வந்தது.

வாழ்க்கைத் தேவைக்காக நகரங்களில் வசித்து வந்த மக்கள் தங்களின் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கு முக்கியமான காரணம், தமிழகத்து நகரங்களில் கொண்டாடப்படும் தீபாவளியை விடவும் கிராமங்களில் கொண்டாடப்படும் தீபாவளிக்குச் சில தனித்தன்மைகள் இருப்பதுதான்.



# தமிழே

கிருங்கை சேதுபதி

இதற்குச் சமயரீதியான காரண காரியங்கள் கடந்து சமூக ரீதியிலான காரணங்களைக் கிராமத்துப் பெரியவர்கள் சொல்வதுண்டு. 'ஒருமுறை பண்டிகை கொண்டாடாமல் நின்றுவிட்டால் மூன்று முறை நின்று போகும்' என்றொரு நம்பிக்கை நிலவுவது ஒருபுறம் இருக்க, ஒருவரை விடுத்து மற்றவர்கள் கொண்டாடும் பண்டிகையாக இல்லாமல் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டாடுகிற ஒருமைப்பாடுமிக்க மனிதநேயப் பண்டிகையாகவும் இது அமைந்திருப்பது முக்கியக் காரணம்.

பொதுவாக, உழவுத் தொழிலையே உயிர்த்தொழிலாகக் கொண்டிருக்கும் கிராமங்களில் நடைபெறும் ஒவ்வொரு மாதப் பண்டிகையும் வாழ்வியல் சார்ந்து அமைகின்றது. சித்திரை முதல்நாள் 'பொன்னேர்' பூட்டுதலில் தொடங்கும் வேளாண் தொழில், ஆடிப்பட்டம் தேடி விதைத்தலில் உயிர்ப்புறுகிறது. புரட்டாசி மாத ஆயுதபூசையின்போது, தொழில் சார்ந்த அனைத்துக் கருவிகளும் கவனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. உழவுக்கும், அதற்கு உதவியான தொழில்களுக்கும் உறுதுணை புரியும் கருவிகள் தெய்விகத் தன்மையனவாய் கருதப்படுகின்றன. அவை உரியவண்ணம் பராமரித்துப் பேணிப் போற்றப்படுகின்றன.

புறக்கருவிகளை விடவும் மனிதவுயிர்களுக்கு அகக்கருவியாக விளங்கும் உடலைப் பண்படுத்தச் சமயத்தை முன்னிறுத்திப் பல்வேறு விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நோன்பு நோற்பதன் வாயிலாக உணர்ச்சிகள் பண்படுத்தப்படுகின்றன. பண்பாட்டு ரீதியாக, அசைவ உணவைப் புரட்டாசி மாதம் முழுக்கத் தவிர்த்துவிடுகிற குடும்பங்கள் பல. இராமாயணம் படித்தும்



கேட்டும் போற்றியும் கொண்டாடி, பட்டாபிஷேக நாளில் அன்னதான நிகழ்வையும் கடைப்பிடிப்பது இன்றளவும் நடைமுறையில் உண்டு.




வெவ்வேறு தாயர் வயிற்றில் பிறந்தவர்களாயினும் இராம லக்குவர்கள் உடன்பிறந்தவர்களைக் காட்டிலும் ஒற்றுமையாக இருந்து, விட்டுக் கொடுத்து வாழ்ந்த சிறப்பை, இராமாயணம் எடுத்துரைக்கிறது. வானம் பார்த்த பூமியில் அப்போதுதான் பருவமழை பெய்யத் தொடங்கும். கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளில் இருந்து வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதில் கடும் போட்டி நிலவும்.

நாற்றங்காலில் வளர்ந்து நிற்கும் நெல் நாற்றுகளை முற்றுமுன்னர்ப் பறித்து நட்டாக வேண்டிய கட்டாயம். வரப்புத் தகராறு காரணமாய் வரும் வாய்த்தகராறு, கைகலப்பில் போய் முடிந்து கொலை வழக்கு வரை வளர்ந்து நீதிமன்றம் நோக்கிப் போக வைத்துவிடும். இந்த வம்பு வழக்கெல்லாம் இல்லாமல் ஒற்றுமையாய், உள்ளூர் மனிதர்கள் நின்று வாழ நெறிகாட்டும் கதையாக இராமாகாதை அக்காலத்தில் உதவியது.

பகலெல்லாம் வயலில் பணிகள். இரவில் இராமாயணம் படிப்பதும் கேட்பதும் அவர்களுக்குப் பயனுள்ள பொழுதுபோக்காய் அமைந்தது. யாவரும் உடன்பிறந்தவர்களாய் வாழும் பெற்றியை வாழ்வியல் நெறிமுறையாகக் கற்றுக் கொள்ள இந்தச் சடங்கு பெரிதும் உதவியது. புரட்டாசி மாதச் சனிக்கிழமைகளில் இறைத் திருநாமங்களை இசைத்துப் பாடும் பஜனை மடங்கள் இன்னும் சில கிராமங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. காந்தியடிகளின் காலத்து 'ரகுபதி ராகவ ராஜராம்' பாடல் இப்போதும் சேர்ந்திசையாக ஒலிக்கிறது.

பிறந்தநாள், திருமண நாள், வீட்டு வைபவங்கள் போன்ற காரணங்களால் புத்தாடைகள் எடுத்து உடுத்தினாலும், பட்சணங்கள் செய்து விருந்து படைத்தாலும் கிடைக்காத ஒரு நிறைவை இந்தத் தீபாவளிப் பண்டிகை உண்டாக்கிவிடுகிறது.

சம்பந்தப் பட்ட குடும்பங்களுக்கு மட்டுமே சந்தோஷம் கொடுக்கக்கூடிய அந்தக் கொண்டாட்டத்தில், நிறக்கச் சிறக்கத் தெரியாத தனித்தன்மை தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுப் புத்தாடை எடுத்து உடுத்துவதில் இருக்கிறது. பட்சணங்கள் செய்து படைத்து உண்பதில் கிடைக்கிறது. ஒருவர் விடாமல், ஒட்டுமொத்தமாக ஊரே திரண்டு ஒரேநாளில் புத்தாடை அணிவதிலும் பலகாரங்கள் செய்து பகிர்ந்து உண்பதிலும் ஒற்றுமை உணர்வும் ஒருமித்த மகிழ்வும் தோன்றத்தான் செய்கின்றன.

அம்மியையும் பறக்க வைக்கும் ஆடிக்காற்று தேடிக் கொண்டுவரும் மேகங்கள் நின்று மழைபொழியும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில், இயற்கையின் தட்ப வெப்பம் மாற்றம் கண்டுவிடும்.



VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



கோடை வெம்மை முற்றிலும் மாறி, குளிர்மிகும் காலத்திற்கேற்ப, உடலையும் உணர்வையும் தயார் செய்ய இந்தப் பண்டிகை துணைபுரிந்துவிடுகிறது.

அதுமட்டுமல்ல, பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடிய அக்காலங்களில், வந்த தீபாவளிப் பண்டிகைகள் வறுமைக்கும் பசிக்கும் மாற்றுத் தேடிக் கொடுக்கிற மகத்துவம் வாய்ந்ததாய் அமைந்தன.

வறுமையை எதிர்கொள்ள, உழைப்பை மட்டுமே முதன்மைப்படுத்தி இயங்கிய ஏழைத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் ஒன்றன் கூறாடை உடுப்பவர்களாகவே இருந்த காலம் அது. அந்திச் சூரியன் மறைவதற்குள் சென்று குளத்திலோ, கண்மாயிலோ குளித்து, உடுத்தியிருக்கும் ஆடையை ஒரு பக்கம் நனைத்துத் துவைத்து, மறையும் சூரியக் கதிர்கள் படுகிற திசையில் விரித்துக் காயவைத்து மறுபக்கத்தை அதுபோல் துவைத்து உலர வைப்பது வழக்கம்.

ஈர உடையின் ஒருநுனியைப் பெருஞ்செடி அல்லது குறுமரக் கிளையில் கட்டிவிட்டு. மறுபகுதியில் உடல் மறைத்து வெயில் பார்த்து நிற்கும் பெண் தொழிலாளர்களைக் கிராம வாழ்க்கையில் கண்டதை மறக்க முடியுமா? அதைவிடவும், வீடு திரும்புவதற்குள் மழைவந்துவிட்டால் அது மீளவும் நனைந்து போகும் அவலம். ‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு’ என்பது பழமொழி. அது காயும் வரைக்கும் கட்டுவதற்கு ஏதும் இல்லாத நிலையில், மழைக்காலத்தை எதிர்கொள்ளவும், மாற்றுத் துணி தேடிக்கொள்ளவும் இந்தப்



பண்டிகையே உற்ற துணை. மறு தீபாவளி வரும் வரைக்கும் இந்தப் புத்தாடை தான் பலருக்கும் பயனாடை. பேதங்கள் இல்லாமல் அனைவரும்

ஆவளித் திருநாள், இருண்ட வாழ்வில் இவ்வாறு நம்பிக்கைச் சுடரை ஏற்றிவைத்து விடைபெறுகிறது. ஒளிதரும் விளக்குகளை விடவும் வெடிபட



ஒன்றுபோலவே புதிதாய் உடுத்திக் கொள்வதும் உடையவர்கள் இல்லாதவர்களுக்கு உதவுவதும் நடைமுறை. உடை குறித்த நிலைமை இவ்வாறு இருக்க, உணவு குறித்த நிலைப்பாடு இன்னும் மோசம். பட்டினியை மட்டுமே பகிர்ந்துண்ணும் குடும்பங்களுக்கு, 'நெல்லுச்சோறே' அரிதான காலத்தில் பட்சணங்களுக்கு ஏது வழி?

இப்போதிருக்கும் சிற்றுண்டி விடுதிகளோ, பெரிய உணவு விடுதிகளோ இல்லாத அக்காலத்தில், பல்வேறு பட்சணங்களைச் செய்வதும் உண்பதும் அரிதான நிலை. வயிற்றுப் பசியோடு நாவின் சுவைக்கும் நல்லவை தேடிக் கொடுக்க, இந்தப் பண்டிகை ஒரு வாய்ப்பு. கடன் பட்டேனும் இந்தப் பண்டிகையைக் கொண்டாட வேண்டி,அவரவர் இல்லங்களில் செய்துகொள்வதும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து அளித்துப் பெற்றுக் கொள்வதும் நடைமுறையில் அமைந்துவிட்டது.

வாய்க்கு ருசியாய்ப் பட்சணங்களைச் செய்து, போதும் போதும் என்கிற அளவிற்குத் திகட்டும் வரை தின்று மனநிறைவு கொள்ள இதுவொரு வாய்ப்பு. தனியொரு மனிதர் பட்டினி கிடக்கப் பார்க்காத பண்பை இந்தப் பண்டிகை நிலைநிறுத்திப் பார்க்கிறது.

பின்னால் பிறக்கப்போகும் கார்த்திகைத் தீபத் திருநாளை முன்னால் கொண்டு எழுந்த தீப

முழக்கும் பட்டாசுகளும் மத்தாப்புகளும் எழுப்புகிற வண்ணப் பேரொளியில் சுடர்கிற இந்தத் தீபாவளி, வேளாண் தொழிலே ஓங்கியிருந்த காலங்களில் விளைச்சல் சரியாக அமைந்துவிட்டால், இன்பம் தரும் தீபாவளி.

மழை வளம் மிகுந்தோ குறைந்தோ பஞ்சம் ஏற்பட்டுவிட்டால், அந்த வருடத் தீபாவளிக்கு, 'வட பய தீபாவளி' என்று நம் மக்கள் பெயர் சூட்டிவிடுவார்கள். ஆனாலும், கடன்பட்டேனும் இந்தப் பண்டிகைக்கான கடமைகளைச் செய்வதில் தலைநின்றுவிடுவார்கள் குடும்பத் தலைவர்கள். ஈடுகட்டத்தான் தைபிறக்கப் போகிறதே. வயலில் விளைத்த அனைத்தையும் இல்லம் கொண்டு வந்து சேர்க்க, 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்' என்கிற நம்பிக்கை அவர்களின் வாழ்க்கையையும் வாக்கையும் காப்பாற்றித் தந்தது.

வசதி வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், வாகனப் பயணங்களில் நெருக்கடி மிகுந்தாலும், பிறந்த ஊருக்குச் சென்று திரும்புகிற உற்சாக உணர்வு இருக்கிறதே, அது அடுத்த தீபாவளி வருகிற வரைக்கும் அணையாது இருக்கும். ஏனெனில் பண்பாட்டு விழுமியங்களின் வேர்களுக்கு நீர் பாய்ச்சும் வேலையை, இந்தப் பண்டிகைகள் செய்துவிடுகின்றன.


# குட்டக்குட்ட

## ஆப்கானிஸ்தானில் பெண்களுக்காக ரகசியமாக நடத்தப்படும் பள்ளிகள்

பள்ளிக்கூடம் செல்லாமல் ஓடி ஒளியும் குழந்தைகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால், ஒரு பள்ளிக்கூடமே ஒளிந்திருப்பதை கேள்விப்பட்டதுண்டா? தாலிபன்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் ஆப்கானிஸ்தானில் பெண்குழந்தைகளுக்காக நடைபெறும் ரகசிய பள்ளிக்கூடம் எப்படி இயங்குகிறது?

“இதைச் செய்வதில் இருக்கும் அபாயங்கள் எங்களுக்கு தெரியும். அதுகுறித்த கவலையும் உண்டு. ஆனால், பெண்களின் கல்விக்காக எவ்வளவு ஆபத்தையும் சந்திக்கலாம்“ என்று பேசத்தொடங்குகிறார் அந்த பள்ளியை நடத்தும் ஒரே ஒரு ஆசிரியர்.

நாடு முழுக்க இருக்கும் அனைத்து மேல்நிலைப்பள்ளிகளையும் பூட்டி தாலிபன்கள் உத்தரவிட்டுள்ளனர்.



ஆப்கானிஸ்தானில், குடியிருப்பு பகுதிக்குள் ஒளிந்திருக்கும் இந்த இடம் ஒரு ரகசிய பள்ளிக்கூடம். தாலிபன்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அளவில் சிறிய அதேசமயம் சக்திவாய்ந்த நடவடிக்கை இது.

இங்கு சுமார் 10க்கும் மேற்பட்ட பதின்பருவ பெண்கள் கல்வி பயில்கின்றனர். நாம் சென்றபோது அவர்கள் கணக்குப்பாடம் படித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் நாம் சென்ற பள்ளியில், நம்மைக் கவரும்படியாக சில அம்சங்கள் இருந்தன. குறிப்பாக, வழக்கமான பள்ளிகளைப் போலவே மேஜைகளெல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்தபடி, “சமூகத்துக்காக எங்களால் எவ்வளவு செய்யமுடியுமோ அதைச் செய்வோம். அதற்காக என்னை கைது செய்தாலும் அடித்தாலும் தாங்கிக்கொள்ளலாம்“ என்கிறார் அந்த பெண் ஆசிரியர்.

கடந்த மார்ச் மாதம், பெண்களின் பள்ளிகள்

# நிமிர்!

திறக்கப்பட தயாராக இருந்தன. மாணவிகள் பள்ளிக்கு வரத்தொடங்கிய சில மணி நேரங்களிலேயே தாலிபன் தலைமை அவர்களது கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தி ஒரு அறிவிப்பை வெளியிட்டது.

இந்த ரகசியப் பள்ளியில் படிக்கும் மாணவிகள் உள்ளிட்ட பல பதின்பருவப் பெண்குழந்தைகளுக்கு இந்த வலி இன்னும் மாறவில்லை.

நிருபமா சுப்ரமணியன்

இந்த வரிசையில் 15 வயது சிறுமி ஒருவர் நம்மிடம் பேசியபோது “துணிவுடன் இருங்கள். நீங்கள் துணிவுடன் இருந்தால் யாரும் தடுக்க முடியாது” என்று ஆப்கானிஸ்தானில் வாழும் ஒட்டுமொத்த சிறுமிகளுக்கும் ஒரு செய்தியை கூறினார்.



## துணிவு இருந்தால் யாரும் தடுக்க முடியாது

இந்த தற்காலிக வகுப்பின் மாணவி ஒருவர் நம்மிடம் பேசும்போது, “2 மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் பள்ளிகள் திறக்கப்படவில்லை. இது என்னை மேலும் மேலும் வருத்தப்படுத்துகிறது” என்று கண்ணீரை தடுக்கும் விதமாக தன் முகத்தை கைகளால் மறைத்தபடியே பேசினார்,

தாலிபன்களின் முடிவை எதிர்க்கும் மனநிலை அவர்களிடம் இருந்தது.

ஏற்கனவே நாடு முழுக்க பள்ளிகள் பாலின வாரியாக பிரிக்கப்பட்டுள்ளது ஏன் என்பது யாருக்கும் விளங்கவில்லை. இந்த நிலையில், முதலில் சரியான “இஸ்லாமிய சூழலை” உருவாக்க வேண்டும் என்று தாலிபன்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்களுக்கான பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என்று தாலிபன் அதிகாரிகள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தாலும், பெண் கல்வி தங்களுக்கு ஒரு ‘மிக முக்கியமான’ பிரச்னை

என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். 1990களில் முன்பு தாலிபான்களின் ஆட்சி நடைபெற்றபோது, `பாதுகாப்பு காரணங்கள்` என்று கூறி பெண் குழந்தைகள் பள்ளி செல்வது அப்பட்டமாக தடுக்கப்பட்டது.

1996 முதல் 2001 வரையிலான முதல் தாலிபான் ஆட்சியின் போது நான்காம் வகுப்பிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திய முப்பது வயதுடைய பெண், இந்த ஆண்டு மார்ச் மாதம் 8 வகுப்பு தொடங்கிய ஆனால் இப்போது பள்ளியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ள அவரது மகள் உட்பட பல்வேறு வயதுடைய பெண்கள் 26 பேர் இந்த மறைமுகப் பள்ளியில் உள்ளனர். இவர்களில் கனவுகளை சிதைப்பது மற்றும் தாலிபான்களின் ஆட்சியின் கீழ் பெண்கள் மற்றும் சிறுமிகள் வாழ்வது என்ன என்பதை நேரடியாக அறிந்த இரண்டு தலைமுறை பெண்கள் உள்ளனர்.

ஒரு வெள்ளிக்கிழமை, வாராந்திர விடுமுறையில், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குழு, அவர்களின் குழந்தைகளுடன் (அவர்கள் அனைவரும் சிறுமிகள்) ஒரு உணவகத்தில் ஒரு நீண்ட மேஜையைச் சுற்றி அமர்ந்திருக்கிறார்கள். ஒரு வருட தாலிபான் ஆட்சியால் நடுத்தர வர்க்க, படித்த ஆப்கானிஸ்தான் பெண்களின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை டேபிளைச் சுற்றி வரும் அறிமுக படலம் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது.

“நாங்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்படி வெளியே வந்திருக்கிறோம்ஞ் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு. இது அனைவருக்கும், குறிப்பாக சிறுமிகளுக்கு மனச்சோர்வடைந்த காலம். அவர்களால் இனி பள்ளிக்கு செல்ல முடியாது,” என்கிறார் நூரிஸ்தான், நங்கர்ஹர், பக்தியா, கஜினி மற்றும் குனார் மாகாணங்களில் ஆப்கானிஸ்தானின் திட்டங்களைக் கொண்ட ஒரு சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பணிபுரியும் மருத்துவர் நாடியா ஷோகுரி.



“நான் களப்பணியை மேற்பார்வையிட பயணம் செய்ய வேண்டும். நான் செய்யும் வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் இப்போது பிரச்சனை என்னவென்றால், மஹ்ரம் இல்லாமல் தொலைதூர இடங்களுக்கு செல்ல முடியாது. நான் என் கணவரை அழைத்துச் செல்கிறேன். ஆனால் அவருக்கு சொந்த வேலை இருப்பதால் எப்போதும் என்னுடன் வருவது பிடிக்காது. அதனால்தான் இப்போது நான் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே செல்கிறேன், ”என்று நாடியா கூறுகிறார்.

பத்துக்கும் மேற்பட்ட மாகாணங்களில் பெண்கள் இடைநிலைக் கல்விக்கான அணுகலைக் கொண்டுள்ளனர், காபூல் மற்றும் பிற மாகாணங்களில் “தற்காலிக இடைநிறுத்தம்” உள்ளது என்று அவர் கூறுகிறார்.

“43 ஆண்டுகளாக இடைவிடாத மற்றும் தொடர்ச்சியான வன்முறை மற்றும் மோதல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை கடந்து வந்த உலகின் ஒரே நாடு இதுதான். கலாச்சார மற்றும் பட்ஜெட் கட்டுப்பாடுகள் உள்ளன, பின்னர் வளங்கள், உள்கட்டமைப்பு, ஆசிரியர்கள், புத்தகங்கள் பற்றாக்குறை உள்ளது. ஆனால், இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் மிகவும் கடினமாக உழைத்து வருகிறது,” என்கிறார் பால்கி. “எங்கள் கொள்கையானது அனைத்து ஆப்கானிய


குடிமக்களுக்கும் பாலின வேறுபாடு இல்லாமல் கல்வியாகும்," என்றும் பால்கி கூறுகிறார்.

சர்வதேச சமூகம் "உண்மையாக" ஆப்கானிஸ்தானுக்கு உதவ விரும்பினால், அது "இந்தப் பிரச்சினையை ஆயுதமாக்கக் கூடாது, மேலும் ஆப்கானிஸ்தானுக்கு அவர்கள் உதவுவதற்குத் திறந்திருக்கும் பகுதிகளில் மிக எளிதாக உதவ முடியும்" என்று பால்கி கூறுகிறார். பின்னர், எஞ்சியிருக்கும் பிரச்சனைகளை (கல்வியில்) தீர்க்க அரசாங்கம் தொடர்ந்து பணிபுரியும் போது, "ஆப்கானிஸ்தான் மீதான பொருளாதார தடைகள், சொத்துக்கள் முடக்கம் மற்றும் தடுப்புப்பட்டியல் போன்ற சில மனிதாபிமானமற்ற செயல்களுக்கு தார்மீக நியாயங்களைக் கண்டறிய முயற்சிப்பதற்குப் பதிலாக, அதற்கு உதவுங்கள். எனவே இரு தரப்பிலும் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது," என்று பால்கி கூறுகிறார்.

தாலிபான்கள் இஸ்லாத்தின் விளக்கத்தை சவால் செய்யக்கூடிய அதிகாரம் பெற்ற, படித்த பெண்களுக்கு பாதுகாப்பற்றவர்கள் என்ற கருத்தை நிராகரித்த பால்கி, "ஆப்கானிஸ்தானின் பெண்கள் முஸ்லீம்கள், அவர்கள் எங்கள் நம்பிக்கைகளை சவால் செய்யவில்லை. மனித சமூகங்களின் வெவ்வேறு சட்டங்களைப் பற்றி மக்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஆனால் நாளின் முடிவில், அந்தச் சட்டங்களை இயற்றுவது அரசாங்கம் தான்," என்று கூறினார்.

ஆப்கானிஸ்தானில் பல தசாப்தகால போரினால் பேரழிவிற்குள்ளான, பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி, குறிப்பாக சிறுமிகளின் கல்வி, கடந்த ஆண்டு தாலிபான்கள் பொறுப்பேற்றதற்கு முன்பே ஆபத்தான நிலையில் இருந்தது. 2002 மற்றும் 2020 க்கு இடையில், நாடு கல்வியில் சிறிய முன்னேற்றம் கண்டது, ஆனால் வெளிநாட்டு படைகளுக்கும் தாலிபான்களுக்கும் இடையிலான போரினால் அந்த முயற்சி தடைபட்டது.

ஒரு பெண் சமூக ஆர்வலர் அமெரிக்கா தனது நாட்டு மக்கள் மீது விளையாடிய "பெரிய விளையாட்டு" பற்றி கடுமையாக விமர்சித்தார். "அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் அமைதியை விரும்பவில்லை, அதனால்தான் அவர்கள் நாட்டை மோசமான மக்களிடம் ஒப்படைத்தனர். வன்முறை ஆப்கானிஸ்தானை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அனுமதிக்கிறது," என்று அவர் கூறுகிறார். "அனைவரும் ஒரு பகுதியை விரும்பும் இடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, ஆப்கானிஸ்தான் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் அவர்கள் தங்களைத் தாங்களே எடுத்துக்கொண்டு புதிதாகத் தொடங்கும்போது, மீண்டும் தாக்கப்படுகிறார்கள்," என்று அவர் கூறினார்.




பல குண்டுவெடிப்புகளை அனுபவித்த காபூலில் உள்ள மற்றொரு மறைமுகப் பள்ளியில், தாலிபான்கள் பொறுப்பேற்றபோது 11 ஆம் வகுப்பில் இருந்த 16 வயது சிறுமி, டாக்டராகும் தனது கனவுகளை விட்டுவிட்டதாக கூறுகிறார்; அவள் இப்போது தன் அக்கம்பக்கத்தில் உள்ள பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கிறாள். அவரது மாணவர்கள் பலர் 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை படிக்கின்றனர், மேலும் அவர்கள் பள்ளி நேரத்திற்குப் பிறகு அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வருகிறார்கள். அந்தப் பெண், கடந்த ஆண்டு வரை தான் அணிந்திருந்த பள்ளிச் சீருடையைக் காட்டுகிறாள் — கருப்பு டூனிக் மற்றும் கால்சட்டை, வெள்ளை தாவணியுடன்.

அவளுடைய மாணவர்களில் ஒருவர் இந்த ஆண்டு 8 ஆம் வகுப்பு படித்திருப்பார். “மார்ச் 23 அன்று பள்ளிக்குச் சென்றபோது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம் (பள்ளிக் கல்வி ஆண்டு மார்ச் முதல் ஜனவரி வரை). ஆனால் நான் சென்றடைந்ததும், பள்ளித் தலைவர் எங்களை வீட்டிற்கு செல்லச் சொன்னார். என் தோழி ஒருவர் கூட அவள் பர்தா அணிந்து பள்ளிக்கு வரத் தயாராக இருப்பதாகச் சொன்னாள், சிலர் அழுது கொண்டிருந்தார்கள்,” என்று அந்தப் பெண் கூறுகிறார். “அன்றைய தினம் என்னுடைய மிகப்பெரிய பயம், நான் படிப்பறிவில்லாதவனாக ஆகிவிடுவேனோ என்பதுதான். நான் வளரும்போது ஒரு செவிலியராக இருக்க விரும்புகிறேன், நான் படித்து கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திற்குச் செல்லாத வரை அது நடக்காது” என்றும் அந்த பெண் கூறுகிறார்.

அமெரிக்காவால் கொம்பு சீவி வளர்க்கப்பட்ட தலிபான்கள், ஆட்சியில் அமர்ந்த பிறகு அந்த நாட்டுக்கு எதிராக திரும்பினர். தலிபான்களின் ஆசி பெற்ற அல்—காய்தா தீவிரவாதிகள் கடந்த 2001 செப்டம்பர் 11—ம் தேதி அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தினர். இதில் 3,000 பேர் உயிரிழந்தனர். 6,000—க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.இதற்கு பதிலடியாக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்து தலிபான்களின் ஆட்சியை அகற்றியது. பல்வேறு திருப்பங்களுக்குப் பிறகு கடந்த ஆண்டு ஆகஸ்டில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறின. இதைத் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்களின் ஓராண்டு ஆட்சியில் அடிப்படைவாதம் தலைதூக்கி, பெண்களின் உரிமைகள் முழுமையாகப் பறிக்கப்பட்டுள்ளன.

புர்கா அணியாமல் வெளியே செல்லும் பெண்களின் தலை துண்டிக்கப்படுகிறது. நெயில் பாலிஷ் செய்தால் விரல்கள் வெட்டப்படுகின்றன. வேறு ஆண்களுடன் பேசினால் பொது இடத்தில் பெண்கள் கல்லெறிந்து கொல்லப்படுகின்றனர். முந்தைய ஆட்சியில் அலுவலக பணிக்குச் சென்ற பெண்கள் இப்போது வீடுகளில் முடங்கி கிடக்கின்றனர்.இந்த சூழலில் கடந்த மார்ச் மாதம் 5—ம் வகுப்புக்கு மேல் மாணவிகள் கல்வி பயில தடை விதித்தனர். இதன்படி மகளிருக்கான நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன.

எனினும், பெண் கல்வியில் அக்கறை கொண்ட சில பள்ளி நிர்வாகங்கள், மாணவிகள் தொடர்ந்து கல்வி பயில சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளன. இதன்படி பள்ளியின் ரகசிய இடங்களில் மாணவிகளுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைத் தடுக்க தலிபான் வீரர்கள் நாடு முழுவதும் திடீர் ஆய்வு செய்துவருகின்றனர். அவர்கள் பள்ளிகள்தோறும் சென்று பருவ வயது சிறுமிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றி வருகின்றனர்.

இதுகுறித்து காந்தஹார் நகரை சேர்ந்த மாணவி ரஷியா (14) கூறும்போது, “நான் படித்த பள்ளியில் தலிபான்கள் அண்மையில் சோதனை நடத்தினர். அப்போது 13 வயதுக்கு மேற்பட்ட மாணவிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். இதனால் சுமார் 30 லட்சம் மாணவிகள் கல்வி பயிலும் வாய்ப்பை இழந்துள்ளனர்” என்றார்.அமெரிக்க சிறப்பு பிரதிநிதி ரினா அம்ரி கூறும்போது, “ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் பாதி பேர் பெண்கள். தலிபான்களின் ஆட்சியில் அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டுள்ளது, சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கிறது. 5—ம் வகுப்புக்கு மேல் சிறுமிகள் கல்வி கற்கக்கூடாது என்று கூறுவது எந்த வகையில் நியாயம்“ என்று கேள்வி எழுப்பினார்.ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா. சிறப்பு பிரதிநிதி ரிச்சர்ட் பென்னட் நேற்று கூறும்போது, “தலிபான்கள் ஆட்சியில் பெண்கள் மீது பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. தலிபான்களின் முந்தைய ஆட்சியைவிட இப்போது நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆப்கன் பெண்களுக்கு எதிரான அநீதியை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும். அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க வேண்டும்” என்றார்.

## தலிபான்களுக்கு சவால் விடும் ஹசாரா பெண்கள்

ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் 10% பேர் ஹசாரா பழங்குடிகள் ஆவர். இவர்கள் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள். சன்னி பிரிவைச் சேர்ந்த தலிபான் ஆட்சியாளர்கள், ஹசாரா பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளை புறக்கணித்து வருகின்றனர். இதனால் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை.

எனினும் ஹசாரா பழங்குடி மக்கள், பெண் கல்விக்கு முன்னுரிமை அளித்து வருகின்றனர். அவர்கள் சார்பில் பல்வேறு இடங்களில் மகளிருக்கான பள்ளி, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் நடத்தப்படுகின்றன. இதில் சன்னி பிரிவு மாணவிகளும் படிக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் 30—ம் தேதி தலைநகர் காபூலில் ஹசாரா பழங்குடிகள் நடத்தும் பள்ளியை குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 43 மாணவிகள் உட்பட 53 பேர் உயிரிழந்தனர். ஹசாரா பெண்கள் கல்வி கற்பதை தடுக்கவே தலிபான்கள் இந்த வெடிகுண்டு தாக்குதலை

நடத்தியதாகக் கூறப்படுகிறது.

எனினும் அச்சுறுத்துல்களுக்கு அஞ்சாமல் ஹசாரா மக்கள், மகளிர் கல்வி நிறுவனங்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்த கல்வி நிலையங்களுக்கு பல கி.மீ. தொலைவில் இருந்து ஹசாரா மாணவிகள் மோட்டார் சைக்கிள்களில் பள்ளிகளுக்கு செல்கின்றனர். தலிபான்களுக்கு சவால் விடுக்கும் ஹசாரா பழங்குடி மாணவிகளுக்கு சர்வதேச அளவில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.




சீக்ரெட் ஸ்கூல் திரைச்சீலை உதவியுடன் மாணவர்களை தனியாக பிரித்து உட்கார வேண்டும் என்றும், பெண் பிள்ளைகளுக்கு ஆசிரியைகள் தான் பாடம் நடத்துவர் என்றும் உத்தரவிட்டனர். அதேபோல, மகளிர் மேம்பாட்டுத்துறையில் கூட பெண்கள் வேலைபார்க்கத் தடை விதிக்கப்பட்டது.. பல்கலைக் கழகங்களில் பெண்கள் பணியாற்ற கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்துவிட்டனர்.. ஆட்சிக்கு வந்து இத்தனை மாதங்கள் ஆனபோதிலும், இன்னும் பள்ளிகள் திறக்கப்படவில்லை.. பெண் குழந்தைகளால் பள்ளிக்கு ஒருவருடமாகவே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ரகசிய பள்ளிகள் ரகசிய பள்ளிகள் ஒரு வருடமாகவே, பிள்ளைகள் வீட்டிலேயே முடங்கியுள்ளனர்.

இப்படிப்பட்ட சூழலில்தான், ஒரு பெண், குழந்தைகளுக்கு பாடம் நடத்த முன்வந்தார்.. அந்த பெண் பெயர் சோடா நஜந்த்.. காபூலை சேர்ந்தவர்.. பிள்ளைகள் வறுமையால் படிக்க முடியாமல் அவதிப்பட்டு வருவதை எண்ணி வேதனைப்பட்ட சோடா, அவர்களுக்கு இலவச பாடம் நடத்த முன்வந்தார். அதுவும் தெருவில் வியாபாரம் செய்து வரும் குழந்தைகளுக்கு பாடங்களை கற்று கொடுக்கவே முதலில் தொடங்கினார்.. இந்த பெண் உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆவார்.. தெருவில் வியாபாரம் செய்து வரும் பிள்ளைகளை, காபூல் பூங்காவிற்கு அழைத்து சென்று, அங்கு உட்கார வைத்து பாடம் சொல்லி தந்து வருகிறார்.. கிட்டத்தட்ட 3 மணி நேரம் பாடம் நடத்துகிறார். கடந்த ஒரு வருட மாத காலமாகவே இந்த முயற்சியை இந்த பெண் எடுத்து வருகிறார்..

கல்வியை நோக்கி அடியெடுத்து வைத்து கொண்டிருந்த பெண்களுக்கு, உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதும், கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளதும், மீளா துயரில் ஆழ்த்தி வருகிறது. இப்படி பெண் குழந்தைகள் பள்ளிக்கு செல்ல தடை விதித்து, அவர்களுக்கு கல்வி அளிக்க மறுத்து வருவதற்கு ஐநா கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது... 7 வயது முதல் 12 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் முடிவடைந்துவிட்டது.. நங்காகர், பர்வான் மாகாணங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள், இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு “ஓராண்டு இருண்ட காலம்“ என்ற தலைப்பில் கடிதம் ஒன்றையும் எழுதி உள்ளனர்.

இந்நிலையில்தான், அதிர்ந்துபோன ஐநா ஆப்கனை கண்டித்துள்ளது.. ஆப்கானிஸ்தானுக்கான ஐநா தூதர் மார்கஸ் பொட்செல் இதை பற்றி சொல்லும்போது, “தலிபான் தலைமையிலான அரசு 7 முதல் 12 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுப்பது வெட்கக்கேடானது... இது போன்ற அடிப்படை சுதந்திரம் பறிக்கப்படுவது பாதுகாப்பின்மை, வறுமை உள்ளிட்ட பொருளாதார சிக்கல்களை மேலும் தீவிரப்படுத்தும். அதனால், பெண் குழந்தைகளை பள்ளி செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

கதையில் இதுவரை நடந்தது...

கொற்றவன்

அடர்ந்த மரங்களுக்கிடையே மையப்புள்ளியாய் மறைந்திருந்த அந்தக் கொற்றவை ஆலயம் அமைதியில் ஆழ்ந்திருந்தது!

நேரம் நடுநிசியைத் தாண்டியிருந்தது!

திடீரென ஆலமரத்துக் கிளியொன்று பெருங்குரலெடுத்து கத்தியது!

அந்தக் குரலோசயில் கோயிலே குலுங்கியது போன்ற உணர்வில், வில்லவன் துள்ளி எழும்பி அமர்ந்தான். தலை கிறுகிறுவென்று சுழற்றியடித்தது. விரிந்த அவனது மார்பு மேலும்கீழும் ஏறி இறங்கியது.

என்ன சத்தம் இது? யாரோ பெருங்குரலெடுத்து சிரித்தது போலல்லவா இருந்தது! விருட்டெனத் திரும்பிக் கருவறையை நோக்கினான். சிரித்தது இந்தக் காளிதானோ?

சட்டென எதோ நினைவு வந்தவனாய் சுற்றுமுற்றும் கண்களை அலைய விட்டான்!

எங்கே அவள்? தன் நெஞ்சத்தில் மஞ்சம் கொண்டிருந்த அந்த செந்தாமரை நிறத்தவள் எங்கே? அவன் மனம் ஆவலாய் அலைபாய்ந்தது. கணநேரத் தடுமாற்றமும், தலைச்சுற்றலும் நீங்கியபோதுதான் தெளிவு பிறந்து, தான் கனவுலகில் இருந்து கண் விழித்திருக்கிறோம் இருக்கிறோம் என்பதும் புரிந்தது.

முசிறி துறைமுகத்திலிருந்து ஐந்து நாழிகை தூரத்தில் இருக்கும் ஆழிசூழ் மண்டபத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தான்.

அவன் விழித்திருக்கும் வேளை வரை கடற்கொள்ளையர் வரவில்லை!

கண்ணயர்ந்த வேளையிலோ கனவில் ஒரு தேவதை வந்திருக்கிறாள்!

வில்லவன் இதழ்களில் குறுநகை படர்ந்தது.

தூரத்தில் முசிறி துறைமுகத்தில் வெளிச்சப் புள்ளிகள் கண் கவரும் அழகுடன் தெரிந்தது.

வெண்பட்டென விரிந்து கிடக்கும் மணல்வெளியில் வில்லவன் தனியனாய் நடந்தான். கடலோடும் பரதவர் இன்னமும் கண்விழித்தெழாததால், கடற்கரை வெறிச்சோடிக் கிடந்தது. சேரநாட்டுக் கலங்கரைத் தூண்மீது ஏற்றிவைத்த தீபம், இன்னொரு தங்கநிலவுபோல தொலைதூரத்தில் தெரிந்தது.

வில்லவன் மனதில் அவன் கண்ட கனவு விரிந்தது.


தன் மார்பில் முகம் புதைத்தபடி கிடந்த அந்தத் தேவதையின் குரல்!... ஆகா!... என்ன மென்மை!... மயிலிறகால் வருடும் இன்பம்!... தேன் மதுவைக்

குழைத்து பருகும் இன்பம்!... மண்ணகத்தில் இருப்பதையே மறக்கடிக்கச் செய்து விண்ணகத்தில் வலம்வரும் மயக்கத்தைத் தரும் இன்பம்!...

அழகின் ஒட்டுமொத்த இலக்கணம் எல்லாம் தன்னகத்தே இருக்கின்றன என்பதைச் செப்பும் அந்தச் செம்பொன் மேனியாளின் குரல், குழலையும் யாழையும் மிஞ்சும் மகோன்னத குரல்!.. மயக்கும் மந்திரக் குரலில் ஒலித்த அந்த வார்த்தைஞ்

"அகாபித்தே... போரீத்தே!..."

ஆம்!... அந்த வார்த்தை இன்னமும் செவிகளில் ஒலிக்கிறதே... அந்தத் தேவதை ஓதிய மந்திரத்தின் பொருள் என்ன? எந்த மொழி அது? சேர நாட்டில் புழங்கும் யவன வணிகர்களின் மொழியா? இதுவரை தான் கேளாத அந்த வார்த்தையின் பொருள் என்ன?



அவனது சிந்தனை அந்தத் தேவதையின் மந்திர மொழியிலேயே மையம் கொண்டிருந்தாலும் கண்கள் குடாக்கடலையும் வெள்ளை மணல் பரப்பையும் அவ்வப்போது அளந்தபடியே இருந்தது.

வில்லவனின் நடையில் அவ்வப்போது குறுக்கிட்டன பெரிய ஆமைகள். கரையில் குழிப்பறித்து முட்டையிட்டுவிட்டு அலைகடல் புகுந்தபடி இருந்தன. அவற்றுக்கு இடையூறு ஏற்படாமல் நடந்தவன் மனதில், அந்தக் கனவு திரும்பத் திரும்ப ஓடியபடியே இருந்தது.

அந்தப் பெண்ணின் முகம் தனக்கு மிகவும் பழக்கப்பட்ட முகமாக அல்லவா இருக்கிறது! நன்றாகப் பார்த்துப் பழக்கப்பட்ட முகம்!... யார் அவள்?

"அகாபித்தே... போரீத்தே!..."

அந்த வார்த்தையின் பொருள் என்ன? ஏன் இந்த வார்த்தை மீண்டும் மீண்டும் என்னுள் ஓடுகிறது? கனவில் வந்தவள் எதையோ சொல்ல முற்பட்டாளே...

கரையில் வந்து மோதும் அலைகளுக்குப் போட்டியாக அவன் மனதில் எழுந்த எண்ண அலைகள் பெருத்த வினாக்குறியாக வந்து மோதின.

இரவு நேர ஆழியின் மீது ஆங்காங்கே நின்றிருந்த நாவாய்களில் ஏற்றப்பட்டிருந்த தீப்பந்தங்கள், வானத்து விண்மீன்கள் கடலில் விழுந்து பொன்னொளியாய் மின்னுவது போலிருந்தது.


முசிறித் துறைமுகத்தின் பரபரப்புகளில் கொஞ் சமும் சிக்கிக் கொள்ளாமல், சற்றேதூரமாய் சிறிது மேட்டுப்பாங்கான பகுதியில் அமைந்திருந்தது எழில் வாய்ந்தவொரு குடில். அதன் சாளரத்தின் வழியே துறைமுக அழகை ரசித்தபடி நின்றிருந்தார் சேர நாட்டின் பெரும்புலவர் பரணர்.

முப்பெரும் வேந்தர்களாலும் பெரிதும் போற்றப்படக் கூடிய உன்னத நிலையிலும், சகப் புலவர்களும் கொண்டாடும் பண்பிலும், தரணி போற்றும் குணக்குன்றாய் விளங்குபவர் பாவலர் பரணர்!

அவரது தமிழ் கேட்க அரசர்கள் பலரும் தங்கள் அவைக்கு வரும்படி அவருக்கு அடிக்கடி ஓலை அனுப்புவதால், முசிறி மக்களும் வணிகர்களும் பரணரிடத்தில் தனி மரியாதையும் அன்பும்

வைத்திருந்தார்கள்.

முசிறித் துறைமுகம் போலவே அயல் தேசத்தாரிடமும் பரணரின் பெரும்புகழ் ஒளிவீசிக் கொண்டிருந்தாலும், அப்புகழ் தரும் போதையோ, தமிழ் கற்ற கர்வமோ இல்லாது காட்சிக்கு மிக எளியராய் இனியராய் வலம் வருவதுவே அவரது வழக்கம்.




சாளரத்தின் வழியே பார்வையைப் படரவிட்ட பரணர், துறைமுக அழகில் மனதைத் தொலைத்திருந்தார்.

இத்துறைமுகத்துக்கு இணையான துறைமுகம் எங்கேனும் இருக்குமோ? காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி வெகுவாகப் புகழ்கிறார்கள். அதற்கு எவ்வகையிலும் சளைத்ததல்ல முசிறி! புகாருக்கு ஈடு கொடுக்க முசிறியால்தானே முடியும்!

அல்லும் பகலும் அயராது இயங்கும் இத்துறைமுக நகர், தரணியெல்லாம் புகழ் பரப்பி, பகையரசன் நடுங்கும் படைபலமிக்க சேரமாமன்னன் செங்குட்டுவனின் மணிமுடிக்கு வைரமென அணிசேர்க்கிறது.

ஒருபுறம் சேரநாடெங்கும் குவியும் உப்பையும், மிளகையும், முத்தையும், மணியையும் மூட்டை மூட்டையாக ஏற்றியபடி முசிறியை வந்தடைகின்ற உள்ளூர்க் கலங்கள்...

வரிசைக்கட்டி நிற்கின்ற படையணியின் எதிர்வரிசையைப் போல பொன்னையும் தேறலையும் தேக்கிக் கொண்டு நிற்கின்ற யவனக் கலங்கள்...

இன்னொருபுறம் வண்ணவண்ண விலையுயர்ந்த அழகிய ஆடைகளையும் கலைநயமிக்க பளிங்கு மட்பாண்டங்களையும் தாங்கியபடி சீனத்து நாவாய்கள்...

இரவென்றும் பகலென்றும் பாராது இயங்கிக்கொண்டிருக்கிற துறைமுகப் பணியாளர்களும் வணிகர்களும்...

பாதுகாப்புப் பணியில் கையில் வேலேந்தித் திரியும் காவலர்கள்...

அனைவரையும் மகிழ்விக்கும்படி ஆங்காங்கே ஆடிப்பாடியபடி குதூகலிக்கும் கலைக்குழுவினர்...

கண்டுகளித்து மகிழும் உள்ளூர் மற்றும் வெளியூர் பார்வையாளர்கள்... இப்படியாக முசிறித் துறைமுகம் எந்நேரமும் பரபரப்பும் சுறுசுறுப்பும், பளபளப்பும் கிளுகிளுப்புமாக இருந்து வருவது சேரநாட்டின் பெரும்புகழுக்கு சிறந்ததொரு சான்று!

புலவர் பரணருக்கு மிகப் பெருமிதமாக இருந்தது. துறைமுகத்தைக் கண்டு மகிழும்படியாகவும், இங்கே தமிழ்பரப்பும் தொண்டாற்றும்படியாகவும் தனக்கொரு பாடசாலை ஏற்படுத்திக் தந்திருக்கும் மாமன்னன் செங்குட்டுவனின் கொடையுள்ளம், இந்த முசிறித் துறைமுகத்தையும் விஞ்சுகின்ற

பொறையுடையதன்றோ!

முசிறியின் அழகில் மூழ்கியிருந்த புலவருக்குள் தமிழ் முகிழ்த்தது.

குதிரைகள் இரண்டும் அந்த மணற்குன்றை வந்தடைந்து நின்றன. வீரர்கள் இருவரும் சுற்றிலும் பார்வையைப் படர விட்டனர்.

"தித்தா, என்ன இது? இங்கே ஒருவரையும் காணோமே!..."

சுற்றிப் பார்ப்போம்"

ஆலயத்துள் கையில் சூலமேந்தி ஆவேசமாய் நின்றிருந்தாள் கொற்றவை.

தொங்கும் நந்தாவிளக்கின் ஒளியில் கொற்றவையைப் பார்த்தபடி பணிவுடன் அமர்ந்திருந்தாள் வில்லவனால் காப்பாற்றப்பட்ட யவனப் பெண்.

அவளது மடியில் தலைவைத்து படுத்துக்



கிடந்தாள் பேரழகுப் பதுமையென இன்னொரு யவனப் பெண். அவள் முகத்தில் தெய்வீகக் களை பொலிந்தது. நந்தா விளக்கின் ஒளியில் தங்கச்சிலையென கிடந்தவளை கண்ணிமைக்கவும் மறந்து வெறித்தான் வில்லவன்.

நடப்பதெல்லாம் கனவுதானோ என்ற ஐயம் அடிக்கடி அவனை ஆட்டுவித்தது.

கனவில் தன்னிடம் கட்டுண்டுக் காதலாகிக் கசந்துருகியது இதே யவனப் பேரழகிதான்! இப்போது இங்கே வெட்டுண்ட வாழைப்போல கிடக்கிறாள்.

இதென்ன கனவுக்குள் கனவா? நனவாகி வரும் கனவா? இதற்குமுன் ஒருபோதும் தான் கண்டிராத இந்தப் பொன்னெழில் பூம்பாவையைத் தெள்ளத் தெளிவாக கனவில் கண்டது எப்படி?

"பரணர் இங்கே பெரும் சண்டை நடந்துக் கொண்டிருப்பதாக அல்லவா கூறினார்! அதற்கான அடையாளமே இங்கு இல்லையே..." என்றான் செழியன்.

"சண்டை நடந்தது உண்மையாக இருக்குமானால், அடையாளங்கள் இல்லாமல் இருக்காது! இந்த இருளில் அது தென்படாவிட்டாலும், விடிந்தபின் அது தெரிந்துவிடும்!"

"சண்டையிடும் இருவரில் ஒருவர் செத்து விழுவது நிச்சயம் என்றார். இங்கே அடிதடிக்கான அடிச்சுவடே இல்லையே! செழியா, எனக்கென்னவோ பரணர் தூக்கக் கலக்கத்தில் ஏதோ கனவு கண்டிருக்கிறாரோ எனத் தோன்றுகிறது!"

"அதற்குள் பரணரைப் பற்றி அப்படியொரு முடிவுக்கு வராதே! சரி வா, குன்றை முழுவதுமாகச்

சேரநாட்டில் இல்லாத பேரழகிகளா? ஆனால் தன் கனவில் கண்டதோ இந்த கிரேக்கத்து கிறக்கத்தை அல்லவா? இவளுக்கும் தனக்கும் எப்பிறவியின் தொடர்போ? இப்பிறவியில் இவளைக் கண்டடைய வேண்டியிருப்பதால்தானே, இவள் முகம் பளிச்சென தன் மனத்திரையில் தோன்றியிருக்கிறது!

அவளை இறுகக் கட்டிக்கொண்டு தழுவ வேண்டும்போல உள்ளம் துடியாய்த் துடித்தது. மனதை இழுத்துப் பிடித்து நிலைநிறுத்தினான்.

இப்படியொரு பேரழகுப் பெட்டகம், என் மார்பில் கிடந்து தழுவும் அக்கனவு நனவாகுமா? ஏன் ஆகாது?

உறக்கத்தில் வருகிற கனவுகள் விழித்ததும், மறந்து போய்விடக் கூடும்! ஆனால் விழித்திருக்கையில் வருகிற கனவுகளோ உள்ளத்தை உயர்த்தி, உடலை இயக்கி உணர்வைப் பெருக்கி உன்னதம் காட்டி விடும்! அக்கனவுகளே வாழ்வின் இலக்காகவும் அமைந்து, வாழ்வையே இயக்கும் மந்திரமாகவும் மாறிவிடும்!

கனவுலகம் தருகின்ற அமரவாழ்வுக்கு இணையாக நனவுலகம் இல்லைதான்! அதனால்தானே சித்தர்களும் முனிவர்களும் சிந்தையைப் பரம்பொருளில் வைத்து தியானித்து அமர்கிறார்கள். நனவுலகில் இருந்தே கனவுலகில் சஞ்சரிக்கிறார்கள் விழித்திருக்கும் போதே கனவு காண்கிறார்கள்! அங்குதான் அவர்களுக்கு அருளுலகம் இருப்பதாக நம்புகிறார்கள்.

அறிவுலக மேதைகள் எல்லாம் கனவுலகின் அரசர்கள்தான்! முதலில் கனவுகளின் வழியே அவர்கள் அனைத்தையும் கண்டடைந்து, பின்னர் அக்கனவுக்காகவே செயற்பட்டு நனவுலகில் அற்புதங்கள் நிகழ்த்துகிறார்கள்!

ஆமாம்! கனவுகளின் வலிமையைக் காட்டுகிற நிகழ்வுகளைக் கதை கதையாகக் கேட்டிருக்கிறோமே! இப்போது நடப்பதும் மாட்சிமை பொருந்திய அக்கனவுக்கு சாட்சிதானே! இல்லாவிட்டால் கனவில் வந்த இக்காரிகை தன் கண்ணெதிரே எப்படிக் கிடைப்பாள்? கனவுக்கும் நமது ஆழ்மனதுக்கும், அதையொட்டி நடக்கும் நிகழ்வுகளுக்கும் மிகப் பெரிய இணைப்புச் சங்கிலி இருக்கத்தான் செய்கிறது என்று முன்னோர்கள் சொல்லி வைத்ததெல்லாம் உண்மைதான் என்பதை வில்லவன் இப்போது திடமாக நம்பினான்.

ஆம்! உண்மைதான்! அதனைத்தான் இந்த யவனப் பொற்பாவை தனக்கு மெய்ப்பிக்க வந்திருக்கிறாள்! வில்லவன் திடமாக நம்பினான்.

“வீரரே!...” அமர்ந்திருந்த அப்பெண் மெதுவாய்க் குரல் கொடுத்தாள்.

அந்தக் கணத்தில்தான் தாலியாவின் மடியில் கிடந்த பொற்சிலைக்கு நினைவு திரும்பத் தொடங்கியது. வில்லவனின் இதயத்துடிப்பு எகிறியது. தலையைப் பிடித்தபடி இப்படியும் அப்படியுமாய் அசைந்தவள், மெதுவாக விழிகளைத் திறந்தாள்.

தன் விழிகளில் விழுந்த வில்லவனின் உருவத்தைக் கண்டதும், துள்ளி எழுந்து அமர்ந்தாள் அந்த அழகுப் பெட்டகம்!

வில்லவனைப் பார்த்து விரிந்த அந்த வேல்விழியாளின் விழிகளில் தெரிந்த விந்தையில், வில்லவன் விழிகளும் வியப்பால் விரிந்தன!

காதலனைத் தழுவ ஓடிவரும் கட்டழகுக் காரிகையாய், மணக்கும் மலர்களை அள்ளிக் கொண்டு வரும் பேரியாறு, காதலன் கூடும்போது நாணத்தில் சிணுங்கிச் சிரிக்கும் மங்கையென கலகலவெனும் ஓசையுடன் ஆழியில் கலக்கும் காட்சி, காண்பவர் வியக்கும்படி ரம்மியமானக் காட்சியாக இருந்தது.

பேரியாற்றங்கரையோரம் அமைந்திருந்த ஏராளமான மலர்க் கடைகளும், காய்கனி அங்காடிகளும், கரையோர வனப்பை மேலும் வனப்படுத்திக் காட்டின.

குவியல் குவியலாக குவிக்கப்பட்டிருந்த ஒரு பழக்கடையை நெருங்கிய பரணரைச் சற்றுதூரத்திலேயே கண்டுவிட்ட கடைப் பெரியவர் பெரியான் குரல்கொடுத்து அழைத்தார்.


“வாரும் பரணரே! வாரும்! விடிந்ததும் விடியாததுமாக கிளம்பிவிட்டீர்களா?” என்றபடி தோளில் கிடந்த துண்டை எடுத்து பஞ்சுபோல் நரைத்த மயிர்கற்றைகளில் புதைந்திருந்த தன் முகத்தைத்துடைத்துக்கொண்டார். வயோதிகத்தின் மொத்த சாயலுடன் சற்றே கூன்விழுந்தவராக இருந்தார் பெரியான்.

“கல்விச்சாலை என்னை அழைக்கிறதய்யா...” என்றபடியே பெரியானின் கடையருகே வந்து நின்றார் பரணர். கடைக்குள்ளே அடுப்பு கனன்றபடி இருந்தது. அதிலுள்ள பானையிலிருந்து கமகமவென வாசனை நாசியைத் துளைத்தது.

“அதற்குத்தான் இன்னமும் நேரம் நிறைய இருக்கிறதே! வந்து சற்று அமர்ந்து, குளிருக்கு இதமாக சூடாகச் சுக்குத் தண்ணீர் அருந்தும்.”

“நான் மாட்டேன் என்றாலும் விடவா போகிறீர்?”

“இந்தச் சுக்குநீர் அருந்தாவிட்டால் தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது எனப் புலம்புவதும் இதே நாக்குத்தானே!”



“சரி சரி, காலையிலேயே வம்பளக்காமல் வேலையைப் பாருமய்யா!” பரணர் பொய்யாகக் கோபித்தபடி அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

“உமக்கு ஒரு வாய் சுக்குத் தண்ணீர் கொடுப்பதில் ஒருவித மகிழ்ச்சியென்றால், உம்மிடம் வம்பளப்பதில் இன்னொருவிதமான மகிழ்ச்சி!”

பெரியானின் பின்னே சலசலவென ஓடும் பேரியாற்றில் தெரிந்த காட்சியின்மீது பரணரின் பார்வை நிலைக்குத்தியதில், அவரது பார்வையும் சிந்தையும் அக்காட்சியிலேயே ஒன்றியிருந்தது.

தூரத்தில் ஆற்றைக் கடந்து பரணரின் பாடசாலை அருகே யாரோ சிலர் கரையேறுவது தெரிந்தது.

இந்த அதிகாலை நேரத்தில் தன் பாடசாலையின் பின்புற ஆற்றங்கரை வழியாக உள்ளே நுழைகிறார்களே... யார் அவர்கள்?

பின்புறத்தின் வழியாக நுழைகிறார்கள் என்றால் அவர்களின் நோக்கம் சரியானதாக இருக்காது! ஏதோ தவறு நடக்கப் போகிறது!

பரணரின் பார்வை அங்கே கரையேறுபவர்களின் மீதே சில கணங்கள் பதிந்தது. மரங்கள் அடர்ந்த பகுதியில் யாருமறியாமல் இந்த நேரத்தில் நுழைகிறார்கள் என்றால், கல்விச்சாலையில் ஏதோ தனக்குத் தெரியாமல் நடக்கிறது!

மாணவர்கள் மீது தனது கவனம் குறைந்து விட்டதா? அல்லது அவர்களின் மீது அளவுகடந்த நம்பிக்கையை வைத்துவிட்டதால் அத்துமீறுகிறார்களா? பரணருக்குள் கேள்வி எழுந்தது.

சட்டென பரணருக்கு வேறுவிதமான சிந்தனை துளிர்த்தது. தன்னை நம்பி சேரமான் செங்குட்டுவன் பெரும் பொறுப்பை ஒப்படைத்திருப்பது இவர்களுக்குத் தெரிந்திருக்குமோ?

அப்படியானால் ஆபத்து நெருங்கிவிட்டது. பரணரின் உள்ளம் பதைபதைத்தது.

“பெரியான், நான் உடனே கிளம்பவேண்டும்.” அங்கிருந்து வேகமாய்க் கிளம்பத் துடித்த பரணரின் கரத்தைப் பற்றினார் பெரியான்.

“என்னவாயிற்று? ஏன் இந்த பதைபதைப்பு?” என்றவரிடமிருந்து தன் கரத்தை விடுவித்து, அவரது தோளில் தட்டிக் கொடுத்த பரணர், “கவலை வேண்டாம்! விரைவில் வந்து சொல்கிறேன்.” என்றபடி விரைந்தார்.

ஓட்டமும் நடையுமாக பரணர் செல்லும் திசையையும், அவர் பேரியாற்றில் பார்த்த திசையையும் மாறிமாறிப் பார்த்த பெரியான் வினாக்குறியுடன் நின்றார்.

பரணரின் படபடப்பு அவருக்கு புதிதாகவும், புதிராகவும் இருந்தது.

(கனவு தொடரும்...)

# நுழைய முடியாத நகரம்

நுழைய முடியாத
இந்த நகரத்தின் மழைச் சாலையில்
ஒரு பறவை கத்திக் கொண்டிருக்கிறது.

தனித்து விடப்பட்டிருக்கும்
இந்தப் பறவையின் சிறகுகளை அமைதிப் படுத்த
பூச்சிகளின் கொடுக்குகளால்
தைக்கப்பட்ட பூவிதழ்கள்
தன் முனகல்களை மறந்தபடி
வீசத்துவங்குகிறது தன் வாசத்தை.

வேதனைகளால் நிரம்பிய
ஒரு பைத்தியக்காரனின் நகர்வலம்
அங்கு மௌனத்தின் அடர்த்தியைக்
குறைக்கிறது.

சோடியம் விளக்கொன்றின் கீழ் நிற்கும்
சிறு மிருகம்
சொல்லப்படாத கதையொன்றை...
தன் வாலை அசைத்துச் சொல்லிச்
செல்கிறது.

தனித்துக் கிடந்த ஒற்றைப் புல் ஒன்று
ஒளிர்கிறது ஈரத்துளியில்...
எதிரொலிக்கும் பிம்பங்களுடன்
இரவை உடைக்கும் பிரயாசையோடு.

விடையில்லாத புதிர்களால் நிறைந்த
இந்நகரத்தின் இரவை...
குளத்து நிலவை வெறித்தபடி....
துரத்திக் கொண்டிருக்கிறது சிறு மீன்
ஒன்று.

உதிரும் சூரியனையும்...
உதிரும் நிலவையும்...
எல்லாத் திசைகளிலும் பொறுக்கியபடி...

இந்தக் கணத்தில் நுழைகிறேன்
யாரும் வெறுக்கும் அந்த நகரத்திற்குள்

ரமேஷலாம்

# குளம்

குளமென ஆடுகிறது
மதியம்.
வெயில் குழந்தை
ஆழ்ந்து தூங்குகிறது அதனுள்.
குழந்தையை அணைத்தபடி
உறங்குமவள் முகத்தில்
அன்னையின் கனிவு.
அகம் விழித்துறங்கும்
அவள் கனவில்
அந்தியின் அசைவு
பிள்ளை விழித்துமுனகும்
வண்ணக் குழைவு.
ஆயிரம் மென்முலைகளென

அவள் பொங்குகிறாள்.
ஒரு முலை நுனியை
கொத்திப் போகிறது
சிறு பறவை.

ஆனந்தகுமார்

# அன்புள்ள காக்கைக்கு....

அன்புள்ள காக்கைக்கு....
மனிதனை புறக்கணித்து
மாற்றுக்கிரகம் தேடு;
இல்லையேல்,
இரண்டாம் இனமாய்
தெரிந்தே பலியாவாய்,
மூன்றாம் இனமாய்
முன்னேற்பாட்டுடன்
முறிபடுவாய்...

கவனியுங்கள்;
கவனியுங்கள்...
கறைகொடியுடைய
வீட்டில் மறந்தும்
தரையிறங்காதே..,
இறங்கினால் இனக்கலவரம்..!?
கொக்கிற்கும் உங்களுக்கும்..!
பறந்து விடு..
உயிரைத்தின்று
உற்சவம் நடத்தும்
பெருவிழா காண்பதெப்படி..?
கற்பித்தாலும் கற்பிப்பான்..
பறந்து விடு..

நீதி கேட்டு வீதியில் பறந்தால்
சாலை தேடி சட்டம் வரும்..,
வீடு தேடி தடியடி வரும்..
பின், சிட்டைப்போல்பட்டுப்போவாய்..
பறந்து விடு..
உன் பாட்டன் பறந்த
வீதியில்லை;
பரிவாய் பார்க்க
நாதியில்லை; —பின்,
பாதுகாப்புப்பெட்டகத்தில்
பக்குவமாய் படமாவாய்...!
பறந்து விடு..

மூழ்கி குளிக்க ஓடையில்லை;
குளித்து அமர
மரங்களும் இல்லை.,
கோவில் கோபுரங்கள் கூட
அரசியல் அலுவலகமாய்....!
பறந்து விடு..
நீ கல் போட்ட
பானையும் இல்லை;
கல் விழுந்த
தண்ணீரும் இல்லை;
கள்ளச்சாராயம் கூட
பாலித்தீன் பைகளில்...!
பானைத்தேடி பறந்து விடு..

எங்கள் ஆறாம் அறிவை
உங்கள் வலப்பக்க
மூளைக்குள்
வலுக்கட்டாயமாய் திணிப்போம்..!
பின், உங்களுக்குள்ளும்
உளவாளி செய்வோம்...!
உங்களையும்
மதம் பிரிப்போம்..!!
பறந்து விடு..

நாளடைவில்
உங்கள் கூடுகளுக்கெல்லாம்
வரி விதிப்போம்.,
வாதாடினால்,
விசாரணைக்கு
கைதும் செய்வோம்.,
இரண்டு தலைமுறைக்கு
இழுத்தடித்து
தள்ளாடும் வயதில்
தள்ளுபடியும் செய்வோம்..
பறந்து விடு..

முடிந்தவரை
சொல்லி விட்டேன்..
உங்கள் முடிவையும்
சொல்லி விட்டேன்..
சொல்லியதால்,
என் கவிதைக்கு
எழுத்தடங்கு உத்தரவும் வரும்..!

ம்ம்..... உங்கள் உலகத்தை
கண்டறிய
புறப்படுங்கள் சீக்கிரம்.....

வானடங்கு உத்தரவும்
வரப்போகிறதாம்...!

**க.ஷர்மா**

## 'ரஜிஷாவின் ராசி!



## ராஜயோகமான ராசிதான்!

தீபாவளியை முன்னிட்டு வெளியான 'சர்தார்' படத்தின் வெற்றியை தொடர்ந்து இரண்டாம் பாகம் உருவாக உள்ளதாக நடிகர் கார்த்தி அறிவித்துள்ளார். 'சர்தார்' படத்தில் ராஷிகண்ணா, ரஜிஷா விஜயன், லைலா உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்ற நிலையில், ரஜிஷா விஜயன் அடுத்தடுத்த படங்களில் வாய்ப்பு பெற்று வருகிறார். ஆழமான நடிப்பை வெளிப்படுத்தும் திறமை மிகுந்த இவர், தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளப் படங்களிலும் கவனம் செலுத்துவதால், பிறமொழிப் படங்களும் அவரை நாடி வந்தவண்ணம் இருக்கின்றன.

## ஹீரோவாகும் இயக்குநர்!



## இரண்டிலும் ஜெயிக்கட்டும்!

ஜெயம் ரவியின் 'கோமாளி' படத்தை இயக்கிய பிரதீப் ரங்கநாதன் அடுத்ததாக லவ் டுடே என்ற படத்தை எழுதி தயாரித்து இயக்கி ஹீரோவாகவும் நடித்துள்ளார். யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் ஏற்கனவே வெளியாகி வரவேற்பை பெற்ற இப்படத்தில் இவானா நாயகியாக நடிக்க சத்யராஜ், யோகி பாபு முக்கிய வேடம் ஏற்றுள்ள இப்படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கு இயக்குநர் வம்சி இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்துள்ள வாரிசு திரைப்படத்திலிருந்து தீபாவளியை முன்னிட்டு புதிய போஸ்டர் வெளியாகியுள்ளது. காரணம் ‘வாரிசு’ பொங்கலுக்கு வெளியாவதை உறுதிசெய்துள்ளதால், இந்த போஸ்டர் விஜய் ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக பிரபாஸின் ஆதிபுருஷ் பொங்கலுக்கு வெளியாவதால் வாரிசு பட ரிலீஸ் தள்ளிவைக்கப்படும் என்று கூறப்பட்ட தகவலை வெறும் வதந்தி என வாரிசு பட போஸ்டர் நிருபித்துள்ளது.



## ‘வாரிசு’க்கு ரசிகர்கள் உற்சாகம்!

## ஐஸ்வர்யா நடிப்பின் அதிசயம்!

## போஸ்டர் தந்த பூஸ்டர்?

இயக்குனர் ஆர். கண்ணன் இயக்கத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ், ராகுல் ரவீந்திரன் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்கும் குடும்ப திரைப்படம் ‘தி கிரேட் இந்தியன் கிச்சன்.’ இப்படத்திற்கு இசை, ஜெர்ரி சில்வேர்ஸ்டெர் வின்சென்ட். எவருடன் எந்தப் பாத்திரத்தில் நடித்தாலும், அசத்தலான நடிப்பில் தன் முத்திரையைப் பதிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் இப்படத்தின் மூலம் தேசிய விருது பெறுவார் எனக் கணிக்கிறது கோடம்பாக்கம்.

## திறமைக்கு என்றுமே பெருமை!

# தல வலம்

## திருவஹீந்திரபுரம்

புவனகிரி செயபாலன்

'**வை**யமேழும் உண்டு ஆலிலைவைகிய மாயவன் அடியவர்க்கு
மெய்யனாகிய தெய்வநாயகனிடம் மெய்தகு வரைச்சால்
மொய்கொள் மாதவிச் செண்பகம் முயங்கிய முல்லையங்கொடியாட
செய்ய தாமரை செழும்பனை திகழ்தரு திருவஹீந்தரபுரமே!..' —என திருமங்கையாழ்வாரும், 'நின் வடிவழகி மறவாதார் பிறவாதாரே' என வேதாந்த தேசிகரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளியுள்ள 108 வைணவ திவ்ய தேசங்களில் இது, 72—வது தலமாகும். நடுநாட்டுத் திருப்பதி இரண்டில் திருவஹீந்திரபுரம் ஒன்று. மற்றொன்று திருக்கோயிலூர். புராண பிரசித்தி பெற்ற இந்த திவ்ய தேசம், கலியானாலும் வேதாந்த தேசிகராலும் பாடப்பெற்றது.

ஆதிசேஷனால் உண்டாக்கப் பெற்றதால், இந்த ஊர் திருவஹீந்திரபுரம் என்று பெயர் பெற்றது. அயீந்திரன் என்று அழைக்கப்படும் திரு அனந்தாழ்வான் பூஜித்ததால் அயிந்திரபுரம் என்றும் அழைக்கப்பட்டது. இத்தல மகிமையைப் பற்றி ஸ்காந்த புராணம், பிரம்மாண்ட புராணம், பிருஹந்திரதீயம் கூறுகிறது.

இத்தலத்துக்கு கிழக்கே வங்காள விரிகுடாக்கடல், தெற்கே வெங்கடாம் பேட்டை, மேற்கே திருவதிகை, வடக்கே சிங்கர்கோயில் எல்லைகளாக இருந்தன என்று புராணங்களில் சொல்லப்படுகிறது. சம்சாரப்



பெருங்கடலில் இருந்து மீட்க மருத்துவராக இருக்கும் பகவான் தேவநாத பெருமாள் இங்கு நித்தியாவாசம் செய்து வருவதால், இந்த மலை அன்றுமுதல் ஔஷதாசலம் என்று பெயர் பெற்றது. உலகம் அனைத்தையும் படைத்த பிரம்மா ஒரு சமயம், தன்னைப் படைத்த முழுமுதல் கடவுளான ஸ்ரீமன் நாராயணனை, தவம் செய்து காண விரும்பினான். தமிழ்நாட்டின் கிழக்கு கடலோரத்தில் நறுமணம் வீசும் ஒரு சிறிய மலையை கண்டான். அந்த இடத்தில் நாராயணன் குறித்து தவம் செய்ய பிரம்மாவுக்குக் காட்சி அளித்தார்.

பிரம்மா தாங்கள் (விஷ்ணு) இங்கேயே தங்கி பக்தர்களை அனுக்கிரமம் செய்ய வேண்டும் என வேண்ட, 'இந்த மலையிலேயே தாம் நித்தியவாசம் செய்து சேவை சாற்றுகிறேன்!' என்று சொல்லி மறைந்தார்.

சம்சாரமாகிய பெருங்கடலில் ஈடுபட்டு துன்பப்படும் பக்தர்களுக்கு பகவான் மருந்தாக இருந்து தினமும் நித்தியவாசம் செய்து வருவதால், இந்த மலை ஔஷதாசலம் என்ற பெயர் பெற்றது.

கருடனால் கொண்டுவரப்பட்ட கெடில நதிக்கும் ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையினை இலங்கைக்கு கொண்டு செல்கையில் சஞ்சீவி மலையின் ஒரு பகுதி விழுந்து உருவாகிய ஔஷதாசலம் என வழங்கும் ஔஷத மலைக்கு இடையில் அமைந்துள்ளது இத்திருத்தலம்.

கோயில் — மூலவர்

ஐந்து நிலை கொண்ட ராஜகோபுரம் 60 அடி உயரத்தில் உள்ளது. மூலவர் எழுந்த அருளியுள்ள தவவிமானத்தில் கிழக்கில் பெருமாளும், தெற்கில் தட்சிணா மூர்த்தியும், வடக்கில் பிரம்மனும் உள்ளனர். பிரதான மூர்த்தி தேவநாத பெருமாள். மூலவரான இவர் சங்கு சக்கரத்துடன் வலது கரத்தில் தாமரை மலரோடும் நான்கு முக வடிவாக (நெற்றிக்கண், ஹரி, அரண், நான்முகன்) நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சி அளிக்கிறார்.

மேலும் இவர் மகேந்திரபுர நாதராகவும், கிடந்த கோலத்தில் பள்ளிகொண்ட நாதராகவும் உள்ளார். இவருக்கு அச்சுதன் ஸ்திரஜோதிஷ், அனேக ஜோதிஷ், மேவுஜோதிஷ், மூவர் ஆகிய மூர்த்தி, அடியவருக்கு மெய்யன், தாச சத்தியன் என்ற பெயர்களும் உள்ளன.

பொதுவாக பெருமாள் கோயில்களில் உள்ள லட்சுமி, நரசிம்மர் சன்னதியில் நரசிம்மர் லட்சுமியை இடது தொடையின்மீது அமர வைத்திருப்பார். ஆனால் இத்தலத்தில் நரசிம்மர், தனது வலது தொடை மீது அமர வைத்து அருள்பாலிக்கிறார். தாயாருக்கு அம்புஜவல்லி,



அரும்புறு ஹாசினி, ஹேமாம்புஜவல்லி, பார்கவி, தரங்கமுக நந்தினி, செங்கமலத்தாயார், அலைவாய் உகந்த மகள் என்ற பெயர்களும் உள்ளன.

தாயார் தோற்றம்

ஒரு சமயத்தில் பிருகு மகரிஷி இந்த மலையின் மீது அமர்ந்து பிரம்மாவை நோக்கி தவம் இருந்தார். பிரம்மா காட்சி கொடுத்து, 'உமக்கு ஒரு மகள் உண்டாவாள். அவள் மூலம் நீர் நாராயணனை தரிசனம் செய்வீர்!' என்று சொல்லி அருளினார். பிருகு மகரிஷி தீர்த்தம் (தடாகத்தை) ஒன்றைக் ஏற்படுத்தி அங்கு பரமனை (விஷ்ணு) நினைத்து கடும் தவம் புரிந்தார். ஒருநாள் மகரிஷி கண் விழித்து பார்த்தபோது, தீர்த்தத்தில் ஆயிரம் இதழ்கள் கூடிய பொற்றாமரையில், மகாலட்சுமி குழந்தை வடிவமாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்து எடுத்து வந்து வளர்த்தார்.

அவள் வளர்ந்து பருவ நிலை வந்ததும், தேவநாதனையே விரும்பி மணம் செய்து கொண்டாள். பிருகுவின் மகளாக வளர்ந்தமையால் பார்கவி என்றும், பொற்றாமரை தோன்றியதால் ஹேமாம்புஜவல்லி என்ற பெயர் பெற்றாள். அவள் அவதரித்த தீர்த்தம் பூதீர்த்தம் என்று வழங்குகிறது. பார்கவியை விஷ்ணு தன் மார்பிலும், பிருகு மகரிஷியை தன் இடப்பக்கத்திலும் இருக்க செய்தார்.



புராணக்கதை

ஒரு காலத்தில் அகம்பாவம் பிடித்த தேவர்கள், அசுரர்களால் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டார்கள், தேவர்கள், தங்களைக் காக்கும்படி தேவகுருவாகிய பிரகஸ்பதியின் உபதேசப்படி ஔஷதாசலத்துக்கு பவந்து பரமனைக் குறித்து தவம் செய்தனர். மகாவிஷ்ணு அவர்களுக்கு உதவி புரிவதாக அனுக்கிரகம் செய்தார். இதைக் கண்ட அசுரர்கள், பிரம்மாவிடம் சரண் அடைந்தனர். அவர் 'சிவம் துணை கொண்டு யுத்தம் செய்யுங்கள்' என்று கூறினார்.

அதன்படி சிவனும் அசுரர்களுக்கு பக்கபலமாக நின்று, தன் சூலத்தால் தேவர்களைத் தாக்கினார். தேவர்கள் தாக்கப்பட்டு கஷ்டப்படுவதைக் கண்ட மகாவிஷ்ணு, தன் சக்கரத்தை ஏவினார். அது அசுரர்களைக் கொன்றதுடன் சிவன் அனுப்பிய சூலத்தையும் நாசமாக்கி அனைவரையும் விரட்டிச் சென்றது.

சிவன் வேறு வழியின்றி மகாவிஷ்ணுவை சரணடைய, சக்கரத்தை சாந்தமாக்கினார். மகாவிஷ்ணு மும்மூர்த்தியாகக் காட்சியளிப்பதாக கூறி, தன் திருமேனியில் பிரம்மா சிவன் இருப்பதைக் காட்டினார். இதனால் தேவர்களுக்கு தலைவனாக இருந்ததால் தேவநாதன் என்ற பெயர் பெற்றார். பிரம்மா மலைமேலும், சிவன் இத்தலத்துக்கு கிழக்கில் திருப்பாதிரிப் புலியூர் பாடலீஸ்வரராக இருந்து எப்பொழுதும் சேவித்து கொண்டு இருக்க வேண்டும் என்று கூறியது.

திருபுரசம்ஹாரத்திற்கு தனக்கு அருள் புரிய வேண்டும் என விஷ்ணுவிடம் சிவன் வேண்ட, விஷ்ணு தான் அம்பாக இருந்த அருள் புரிவதாக கூறினார். விஷ்ணுவே அம்பாக வருவதால் கர்வம் கொண்டு, திரிபுரங்களையும் தானே எரிக்கப் போவதாகக் கூறி ஆணவத்துடன் வில்லில் இருந்து (பாணம்) அம்பை விட்டான். சிவன் கர்வத்தை உணர்ந்த விஷ்ணு, பாணத்துடன் சிவனையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய் நடுக்கடலில் தள்ளினார். சிவன் தத்தளிப்பதைக் கண்ட பார்வதி, விஷ்ணுவைச் சரண் அடைந்தாள். விஷ்ணு, சிவனைக் காப்பாற்ற ஒரு சிறுவன் உருவத்தில் கடற்கரையில் நின்று கொண்டு குழல் ஊதினார். குழலோசையைக் கேட்ட சமுத்திரராஜன் அலைகளுடனே சிவனையும் கரை சேர்த்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாத பௌர்ணமியில் தேவநாதன் (விஷ்ணு) கடலாட தீர்த்தவாரி செல்வார். அப்போது கடலூர் பாடலீசுவரர் கடலில் இறங்கியவுடன் தேவநாதன் தானும் கடலில் இறங்கி, சிவனைக் கொண்டருளி ஆராதிப்பார். இது ஒவ்வொரு வருடம் நடக்கும்.

கருடனும் ஆதிசேஷனும்

ஒரு சமயம் மகாவிஷ்ணு தனக்கு தீர்த்தம் வேண்டுமென கருடனிடம் சொல்ல, கருடன் வேகமாக மேற்கே சென்றது. பத்துகாத தூரத்தில் ஒரு மகரிஷி தன் தவவலிமையால் பிரஜா நதியின் தீர்த்தத்தை தமது கமண்டலத்தில் அடைத்து வைத்துக்கொண்டு தவம் செய்தார்.

கருடன் அந்த கமண்டலத்தை உருட்டி விட, அதில் இருந்த தண்ணீர் வெளியே ஓடியது. அதைக் கருடன் தன் மூக்கினால் கிழிக்கப்பட்ட



கோடு வழியே தண்ணீரை வரும்படி சொன்னது. இதற்குள் மகரிஷி தவம் கலைந்து பார்த்தார். கோபம் கொண்டு கருடனைச் சபிக்க நினைத்தார்.

எந்த பரமனை (விஷ்ணு) குறித்து தவம் செய்கிறோமோ, அவருக்காக இந்த தீர்த்தம் செல்கிறது என்பதை உணர்ந்து சாந்தமானார். கருடன் தண்ணீருடன் அங்கு வருவதற்குள் விஷ்ணு, ஆதிசேஷனைப் பார்க்க, அடுத்த கணமே பாதாளத்திலிருந்த கங்கா தீர்த்தத்தை தன் வாளால் துளைத்து எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து தாகத்தைத் தீர்த்தான்.

கருடனுக்கு இது தெரிந்தும் ஆதிசேஷன் மேல் கோபம் கொண்டான். மகாவிஷ்ணு இருவரையும் சமாதானம் செய்து வைத்து, ஆதிசேஷன் கொண்டு வந்தது சேஷத் தீர்த்தம் என்றும், அது பலவித நோய்களைத் தீர்க்கும் சக்தி பெற்றது என்றும், அதிலேயே தனக்கு நித்தியமும் நிவேதனத்துக்கு வேண்டிய தளிகளைச் செய்ய வேண்டும் என்றார். கருடன் கொண்டு வந்த தீர்த்தம் கங்கையை விட மேலானது. அதையே தன் திருமஞ்சனத்துக்கு நித்தமும் உபயோகப்படுத்த வேண்டும் என்றார். இதைக் கேட்ட இருவர் மகிழ்ந்து வணங்கினர்.

சேஷ தீர்த்தம் கோயிலின் உள்ளே தெற்கு பிரகாரத்தில் கிணறாக உள்ளது. கருட நதி கோயிலுக்கு மேற்கே கெடில நதியாக செல்கிறது. ரிஷியின் சாபத்தினால் நதியின் தீர்த்தம் மழைக்காலத்தில் ரத்தம் போல் சிவப்பாக காட்சியளிக்கிறது.

ஒரு காலத்தில் பூமாதேவியும் மார்க்கண்டேயரும் அவுஷாதசலத்தில் தவம் புரிந்து பகவானைக் கண்டு களித்தனர். அவர்களுடைய பிரார்த்தனைபடி பரமன் எப்பொழுதும் அச்சாரூபி (உருவம்) இங்கேயே தங்கி சேவை சாற்றுகிறார். தேவர்களுக்கும், மகரிஷிகளும் வந்து பரமனைச் சேவித்து நவராத்திரி பிரம்மோற்சவத்தை நடத்தி வைத்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீ ஹயக்ரீவர்

பிரளய காலத்தில் உலகம் அழியும் சமயம், பிரம்மாவின் தூக்கத்தில் உதித்த அசுரர்கள் வேதங்களை பெண் குதிரையாக்கி பிரளய வெள்ளத்தில் அதால பாதாளத்தில் ஒளித்து வைக்க, அதை மீட்க மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் குதிரை முக (ஹயக்ரீவர்) பரிமுகப்பெருமாள் வேதங்களை மீட்டு வந்தனால், அவர் கல்வி ஞானத்திற்கு அதிபதியாக விளங்குகிறார்.

தேவநாத பெருமாள் கோயிலுக்கு எதிரில் 74 படிக்கட்டுகள் கொண்ட அவுடதகிரி என்னும் சிறிய மலை உள்ளது. இம்மலையில் உள்ள காட்டுக்கு சவுகந்திக வனம் என்று பெயர். இதில் மூலிகை மரங்களும் செடிகளும் உள்ளன. இங்குதான் தமிழகத்திலேயே ஸ்ரீ ஹயக்ரீவருக்கு முதன்முதல் கோயில் அமையப்பெற்றது.

இங்கு பெருமாள் பரிமுகம் கொண்டு ஸ்ரீ லட்சுமி தேவியுடன், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவராக தெற்கு நோக்கிக் காட்சி தருகிறார்.

வேதாந்த தேசிகர்


காஞ்சிபுரத்தை சார்ந்த தூப்பில் என்னும் ஊரில் அவதரித்த ஸ்ரீ வேதாந்த தேசிகர் இவ்வூரில் சுமார் 40 ஆண்டுகள் வசித்துள்ளார்.

இவர் கருட மந்திரத்தை உச்சாடனம் செய்ய, கருடன் காட்சி தந்து ஹயக்ரீவர் ஸ்லோகத்தை உபதேசித்து யோக ஹயக்ரீவரைத் தந்ததாகவும் அந்த ஸ்லோகத்தை சொல்லி சேவித்ததாகவும் தல வரலாறு கூறுகிறது.

இவர் ஹயக்ரீவர் தோத்திரம், தேவ நாயக பஞ் சாசத் அச்சுத சதகம், கருட தண்டகம், சுதர்சன அஷ்டகம், ஸ்ரீ ஸ்துதி, மும்மணி கோவை, நவரத்தின மாலை, பரம பதங்கம், விரோதி பரிகாரம் போன்ற கிரந்தங்களை எழுதியுள்ளார். தாயாரை சகலப்புவன பிரார்த்தனா காமதேனு என துதித்துள்ளார்.

வேதாந்த தேசிகர் மற்றும் அவர் ஆராதித்த ஹயக்ரீவரின் அச்சாமூர்த்தி ஸ்ரீ தேவநாதன் சன்னிதியில் உள்ளது.

அனுமன்



இலங்கைக்கு அனுமன் பர்வதமலையைக் கொண்டு சென்று அதில் சிறிதளவு இந்த மலையில் விழுந்தது. தான் கொண்டு வந்த மலையில் அடியில் தாம் இருக்க வேண்டும் என பிரார்த்திது வரம் பெற்றான். தமக்கும் அவ்வப்போது சேவை சாதிக்க வேண்டும் என பரமனிடம் வேண்டினான். அதனாலேயே மலை அடிவாரத்தில் ஹனுமான் கோயில் உள்ளது. இத்தகவல் புராணத்தில் உள்ளது.

பேறு பெற்றவர்கள்

இங்கு பிரம்மா, சிவன், இந்திரன், பூமாதேவி, பிருகு, மார்க்கண்டேயர், தத்தீசி முனிவர் எனப் பலரும் இத்தலத்தில் தவம் இருந்து ஸ்ரீதேவநாத பெருமாளை தரிசித்து வரம் பெற்றனர்.

விருத்திகா சூரன் — இந்திரன்

விருத்திகா சூரனால் துரத்தப்பட்ட இந்திரன் அவமானம் அடைந்து, அவுஷதா தலத்துக்கு ஓடி, அங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் உள்ள ஒரு தாமரை தண்டினுள் புகுந்து மறைந்து வாழ்ந்தான். இந்திரனைக் காண வேண்டும் என இந்திராணி பரமசிவன் உடன் பிரம்மாவிடம் சென்று முறையிட, பிரம்மா இந்திரன் இருக்குமிடத்தைக் கூற, அவுஷதா தலத்துக்கு வந்து தேவநாதனை துதித்து தவமிருந்தனர்.

இந்திரனுக்கு அனுக்கிரகம் செய்ய விரும்பினார் பரமன். அவர் அங்கே தவம் செய்து கொண்டிருந்த தத்தீசி என்ற மகரிஷியை வஜ்ராயுதமாக மாற்றி இந்திரனிடம் கொடுத்து, 'இதன் மூலம் விருத்திகா சூரனை வதம் செய்!' என்று அனுக்கிரகம் செய்தார். இந்திரன் அவ்வாறே சென்று விருத்திகா சூரனை வதைக்க, இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அவன் தேவநாதன் குறித்து தவம் செய்து அதனின்று விடுபட்டான்.

தீர்த்தம்

இத்தலத்தில் கருட பகவானால் கொண்டு வரப்பெற்ற கெடில நதியும், ஆதிசேஷனால் அமைத்த சேஷ கிணறும், பிரம்ம தீர்த்தம், பூதீர்த்தம் மற்றும் லட்சுமி தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்கள் உள்ளன.

தலவிருட்சம்

இங்கு உற்சவர், சிவன், பிரம்மா, விஷ்ணு என மூவரும் இணைந்த சாந்த சொரூபியாக விளங்குகிறார். அதனால் இத்தலத்தின் தலவிருட்சம் வில்வ மரம்.

மற்ற சன்னதிகள்

விநாயகர், ஸ்ரீ ராமர், ஸ்ரீ வேணு கோபாலன், சக்கரத்தாழ்வார், பள்ளி கொண்ட பெருமாள், ஸ்ரீ ராஜகோபாலன், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மன், வஹீந்திரபுரநாதன், ஆண்டாள், கருடாழ்வார், ஆழ்வார்கள், தேசிகன் என சந்நிதிகள் உள்ளன.

கல்வெட்டுகள்

இக்கோயில் பல்வேறு காலங்களில் அரசர்கள் பலரால் அவ்வப்போது கட்டப்பட்டு



புணருத்தானம் செய்யப்பட்டுள்ளது. துவாரபாலகரின் சிலைகளுக்கு அருகில் முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி 1070) மற்றும் விக்ரம சோழ தேவன் (கி.பி 1118 — 1135) இவர்களுடைய கல்வெட்டுகள் உள்ளன. இத்தலத்தில் 50 கல்வெட்டுகள் உள்ளன. தற்போதைய வடிவத்தில் உள்ள கோயில் இடைக்கால சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

மூன்றாம் ராஜராஜ சோழன் (1216 — 1256) முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (1251 — 1268) விக்ரம பாண்டியன், மூன்றாம் வீரபாண்டியன், விஜயநகர அரசர் அச்சுதர் தேவராயர் (1529 — 1542) மற்றும் கோப்பெரு சிங்கர் காலத்து கல்வெட்டுகள் உள்ளன. கோப்பெரு சிங்கன் காலத்தில் கோபுரம் கட்டப்பட்டது.

இக்கோயிலின் பிரகாரங்கள் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டதாக தெரிகிறது. பிரகாரத்தின் மேற்கு கூரையில் மீன்கள் உருவங்கள் பெருவிழாக்கள் பொறிக்கப்பட்டு இருப்பதை காணலாம்.

பூஜை — உற்சவம்

வைகானச — ஆகம முறைப்படி தினமும் 6 கால பூஜைகள் வைதீக ஆச்சாரியர்களால் விதிமுறைப்படி நடைபெறுகின்றன. ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிரதோஷம் சனிக்கிழமை தோறும் பெருமாள் புறப்பாடு. வெள்ளிக்கிழமைகளில் தாயார் உள் புறப்பாடு, பூரத்தில் ஆண்டாள் புறப்பாடு நடைபெறுகிறது.

திருவிழாக்கள்

சித்திரை மாதம் பத்து நாட்கள் ஸ்ரீதேவநாத ஸ்வாமிக்கும், புரட்டாசி மாதம் 10 நாட்கள் வேதாந்த தேசிகருக்கும், பிரம்மோற்சவங்கள் நடைபெறும். ஆடிப்பூரம் பகல்பத்து, இராபத்து, வைகுண்ட ஏகாதசி என 12 மாதங்களும் உற்சவம் நடந்து கொண்டிருக்கும்.

விஜயதசமி அன்று சரஸ்வதி தேவிக்கு ஹயக்ரீவர் உபதேசம் செய்தார். அதனால் இங்குள்ள ஹயக்ரீவரை வணங்கி படிப்பதைத் துவக்கினால் குழந்தைகள் கல்வி மற்றும் கலைகளில் சிறந்த விளங்குவர் என்பது ஐதீகம்! அதனால் ஒவ்வொரு விஜயதசமி அன்றும் லட்சுமி ஹயக்ரீவர் சன்னதியில் குழந்தைகளுக்கு வித்யாரம்பம் துவக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

பிரார்த்தனை

தேவநாதப் பெருமாளை வணங்குவோர், பெரிய பதவி, நிலைத்த செல்வம், நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள் ஆகியவற்றைப் பெறுவர். இத்தலத்தில் திருமணம் செய்வோர் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று பக்தர்களிடையே நம்பிக்கை இருப்பதால், முகூர்த்த நாட்களில் திருமணங்கள் நடந்த வண்ணம் இருக்கும்.

இத்தலம் துவாபர யுகத்திலும் இருந்துள்ளதாகவும், அதனால் இத்தலத்துப் பெருமாள் திருப்பதி பெருமாளுக்கு மூத்தவர் என்பது ஐதீகம்! திருப்பதிக்கு நேர்ந்து கொண்ட பிரார்த்தனைகள் இங்கு செலுத்தும் வழக்கம் உள்ளது.

திருப்பதி வெங்கடேச அஷ்டோத்ரதஸ நாமார்ச்சனையை இங்குள்ள பெருமாளுக்கு செய்யப்படுகிறது. கோயிலில் உள்ளே தெற்கு பிரகாரத்தில் உள்ள சேஷ குளத்தில் உப்பு, மிளகு, வெல்லம், போட்டு பிரார்த்தனை செய்தால் வியாதிகள் குணமாகும் என்பது ஐதீகம்!

கோயில் நேரம்

தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 வரை. ஆலய தொடர்புக்கு: 9 04142 287515

இருப்பிடம்:

கடலூருக்கு மேற்கு பண்ருட்டி செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)



# பணக்கார சிநேகிதி

## கீதா பென்னெட்

அவசரமாய் டிபனுக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தேன். நேரத்துக்கு எல்லாம் முடிந்தால் தான் அவர் வீடு திரும்பியதும் கோயிலுக்குப் போகலாம்.

என் மகன் கண்ணனுக்கு இன்றைக்கு நான்கு முடிந்து ஐந்து வயதாகிறது.

இவருடைய சம்பளத்துக்குத் தகுந்த வீக்கமாய்க் குறைந்த விலையில் துணி எடுத்து எதிர்க் கடை விட்டல் ராவ் கைவண்ணத்தில் அவனுக்கு டிராயர் தைத்திருந்தேன்.

வாசலில் நின்று கொண்டு அப்பாவுக்காகக் காத்திருந்த கண்ணன், பெரிய குரலில் இரைந்தான்.

“அம்மா, லதா மாமி வந்திருக்காங்க!”

அவன் குரலைத் தொடர்ந்து ஒலித்தது லதாவின் குரல்.

“டேய்ஞ்.டேய்! என்ன மாமின்னு கூப்பிடாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? அழகா ஆண்டின்னு கூப்பிடேன்”

“சரி லதா மாமி!” ரீ லதா சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

எப்படித்தான் நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் வருகிறாளோ? பிறந்த நாள் மட்டுமா? எங்களுடைய திருமண விழா! பண்டிகை நாட்கள்! எல்லா நாட்களிலும் தான்.

“கண்ணனுக்குப் பிறந்த நாள்” என்று நினைவுபடுத்த ஒரு செகரட்டரி போட்டிருப்பாள். அவளுக்கென்ன பெரிய பணக்காரி! மிலியனரான மில் முதலாளியின் மனைவி!

லதா கண்ணைப் பறிப்பது போல் தள தளவென்றிருந்தாள். அப்போது தான் டென்னிஸ் ஆடிவிட்டு வருகிறாள் போலும்! ரூஜ் போடாமலேயே மிகவும் சிவந்த கன்னங்கள். அவள் குடிக்கும் ஆப்பிள் ஜுஸ் நேரே கன்னங்களுக்கே போய் விட்டனவோ!

ஆனி ஃப்ரெஞ்சின் கைவண்ணத்தில் மிளிர்ந்த கால்கள். டைட்டாக அணிந்திருந்த வெள்ளை டென்னிஸ் உடை. கையில் மட்டையைச் சுழற்றிக் கொண்டு அவள் தானாய்ச் சமையலறைக்கும் வந்துவிட்டாள்

“அம்மா அம்மாஞ் லதா மாமி எனக்குப் பிறந்த நாள் பரிசு கொடுத்தாளே!” ரீ கண்ணனின் கையில் சின்னதாய் ஒரு பார்ஸல். அதன் மேல் குட்டியாய் ஒரு ரிப்பன் பூ! அவன் அதை அவசரமாய்த் திறக்க முயன்றான்.

எனக்கு ஆயாசமாய் வந்தது. எப்போதும் போல் சீப்பாய் ஒரு பரிசு கொணர்ந்திருப்பாள், பணக்காரச் சிநேகிதியாய் இருந்தால் என்ன? மனசு வந்து கை நிறையப் பணம் செலவழித்துக் குழந்தைக்குப் பரிசு கொடுத்தால் அவள் ஆஸ்தி கரைந்து விடுமா என்ன?

நான் நினைத்தது சரிதான்!

மிகச் சாதாரண ரெடிமேட் ஆடை!

இவளை யார் பரிசு கொடுக்கச் சொன்னார்கள்?

நான் அவளிடம் ஒன்றும் சொல்லாமல், காப்பியைக் கொடுத்தேன்.

அவள் சடசடவென்று பேசிவிட்டுப் போய் விட்டாள்.

அவள் அந்த மேனாட்டு இடதுபுற ஸ்டீயரிங் காரை ஒயிலாய் ஓடித்துக்கொண்டு ஓட்டியதைப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

பணம் இருக்கும் இடத்தில் நல்ல மனம் இல்லையே!

நான் ஏழைதான்! அதைச் சுட்டிக் காட்டவே இப்படிச் செய்கிறாளோ? என் கல்யாணத்துக்கு ஒரு சின்ன வாழ்த்துக் கடிதம் தான் கொண்டு வந்தாள். கண்ணனின் முதல் ஆண்டு நிறைவுக்கும் எளியதாய், சீப்பாய் ஒரு பரிசு! எனக்கும் அவளுக்கும் எத்தன் நாள் ரீ வருடப் பழக்கம். கல்லூரியில் பி. ஏ. படித்த நாட்களில் அவள் தான் “மிஸ் ப்ரின்னஸ்”. தினம் ஒரு காரில் வருவாள், தினம் ஒரு உடையில் வருவாள். டெனிம் ஜீன்ஸ், ஒரு நாள் வாயில் புடவை, ஒரு நாள் குட்டி ஸ்கர்ட், ஒரு நாள் மாக்ஸி என்று அவளைப் பார்க்க ஒரு கூட்டமே காத்திருக்கும். அதில் நான் மட்டும் என்ன ஒசத்தி? என்னை மட்டுமே அவள் சிநேகிதியாய் ஏற்றுக் கொண்டாள் என்று எத்தனை சக மாணவிகளுக்குப் பொறாமை?.

இருந்தாலும் இப்படி ஒரு பரிசு கொடுத்தாளே என்று எனக்குக் கோபம் ஆறவில்லை.

என் கணவர் வீடு திரும்பியபோது பொரித்து கொட்டினேன்.

அவர் எப்போதும் போல் மாறாத புன்னகையில் காட்சி தந்தார்.

“இதோ பார்! உன் சிநேகதி டென்னிஸ் மட்டையை இங்கேயே விட்டுட்டுப் போய் விட்டாள், நாளைக்கு இதைக் கொடுக்கிற சாக்கிலே நேரேயே கேட்டுடேன்.”

கேட்கத்தான் போறேன் மனத்துக்குள் சவால்




விட்டுக் கொண்டேன்.

மறுநாள் இவர் ஆபீசுக்குப் போன உடனேயே கண்ணனைத் தூக்கிக் கொண்டு லதாவின் பங்களாவுக்குப் போனேன்.

அது என்ன பங்களாவா! ஏதோ அரண்மனை மாதிய இருந்தது. ஒவ்வொரு அறையிலிருந்தும் மூக்கை நீட்டிக் கொண்டிருத்த ஏர் கண்டிஷன் பெட்டிகள்.

வேலைக்கார முத்துவுக்கு என்னைத் தெரிவுமாதலால், “வாங்கம்மா உட்காரும் கம்மா!” என்று என்னை வரவேற்பறையில் உட்கார வைத்தான்.

மாடியிலிருந்து பில நிமிடங்களில் வனதேவதை மாதிரி இறங்கி வந்தாள் லதா.

“மாடிக்கு வாயேன் கீதா! என் ரூமுக்குப் போய் உட்கார்ந்து பேசலாம். எத்தனை நாள் கழிச்சி வந்திருக்கே. முத்து, எல்லாருக்கும் காப்பி கொண்டாயேன்!”

சுவாதீனமாய் என்னைத் தன் அறைக்கு அழைத்துப் போனாள் லதா.

என் மனம் அந்தக் கேள்வியைக் கேட்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

அவள் கண்ணாடி எதிரே உட்கார்ந்து தன் குட்டையான கூந்தலை பிரஷ் செய்து கொண்டே சொன்னாள்:

“நேத்திக்கு நானே அப்புறம் உங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தேன்.”

அவள் கை விரைவாய் பிரஷ் பண்ணியது.

“பாரேன் கீதா! உன் கிட்டே ஒரு விஷயம் சொல்லனும்னு ரொம்ப நாளா நினைச்சிட்டிருக்கேன்.சொல்லட்டுமா?”

இப்போது அவள் முகத்தில் மாக்ஸ்—ஃபேக் டரை ஒற்றிக் கொண்டிருந்தாள்.

என்ன சொல்லப் போகிறாள்?



“எனக்கு நெருங்கிய சிநேகிதி ஒருத்தி, பேரைச் சொல்ல மாட்டேன். எனக்கு மனசுக்கு ரொம்பப் பிடிச்சவ, ஆனா பாவம் அவகிட்டே எங்களை மாதிரி பணம் கிடையாது. இல்லாட்டா என்ன? மனசு மட்டும் தங்கம். அவ வீட்டு ஃபங்க்ஷன் எல்லாத்துக்கும் நான் போவேன், பரிசுக் கொடுப்பேன், ஆனா சீப்பாத்தான் வாங்குவேன், ஏன் தெரியுமா? அதே மாதிரி என் வீட்டுக் கல்யாணத்துக்கும். பிறந்த நாளுக்கும் அவ வரனும், நான் ஏகப்பட்டதா பணத்தைக் கொட்டி அவ குழந்தைக்குத் தொட்டில்லும் அவளுக்குப் பட்டுப் புடவைன்னும் வாங்கித் தரலாம். ஆனா அதுவே நாளைக்கு எனக்குப் பரிசு கொடுக்கணும்னு அவளாலே அப்படிச் செலவழிக்க முடியுமா? லதா அவ்வளவு பெரிசாப் பரிசு கொடுத்தாளே நம்மாலே முடியலையேன்னு மனசு வருத்தப்படும், அல்லது கடன் வாங்கியாவது பரிசு கொடுக்கனும்னு தோணும். நான் என்சிநேகிதிக்கு நிறையக் கோபத்னதக் கொடுத்திருப்பேன், ஆனா அவளோட சினேகிதம் எனக்கு இல்லாது போகக் கூடாதுன்னுதான்ஞ்”



அவளை நான் மேலே பேச விடவில்லை..

“ஐ ஆம் ஸாரி லதா! உன்னைத் தப்பா நினைச்சதுக்கு என்னை மன்னிச்சுடு!”

என் கண்களில் நீர் நிறைந்தது.

“ஆமாம் கீதா! நேத்திக்கு என் டென்னிஸ் ராக்கெட்டை எடுக்க வந்தபோது நீ உன் கணவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன், நான் உன் கல்யாணத்துக்கு ஒரு வாழ்த்துக் கடிதம் மட்டும் கொடுக்காமல், ஆயிரம் ரூபாய்க்குப் பரிசு கொடுத்து இருந்தால் நீயும் என் கல்யாணத்துக்கு ஆயிரம் ரூபாய்க்குப் பரிசு கொடுக்கனும்னு நினைக்க மாட்டியா? அதுதானே முறை! என்னோட பணக்கார சர்க்கிள் சிநேகிதர் களை விட உன் சிநேகிதத்தைத்தான் நான் ரொம்ப உயர்வாய் மதிக்கிறேன் கீதா!”

அவள் தான் எவ்வளவு உயர்ந்த சிநேகிதி!


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# அறிவோம் தமிழர்

## எம் எம்.சி.ராஜா: கொண்டாடத் தவறிய ஆசான் !

**எம்**.சி.ராஜா 'ஒடுக்கப்பட்ட இந்துக்கள்' (The Oppressed Hindus) என்ற புத்தகத்தில் எழுதுகிறார்: 'கல்வி (என்பது) உரிமை எனும் கல்வியாக இருத்தல் வேண்டும்ஞ் ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்குக்கூட கட்டாயக் கல்வி தேவையா, அதுவும் குறிப்பிட்ட இனத்து ஆண், பெண்களுக்குத் தேவையா என்று விவாதிப்பது இன்றைய நிலைக்கு ஒவ்வாத வாதமாகும். தாழ்த்தப்பட்டோர் பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வித் திட்டம் தேவை. அவர்களுக்கு மதிய உணவும் வயிறார வழங்க வேண்டும். அத்தோடு அப்பிள்ளைகளின் சிறு கூலியால் வயிறு வளர்த்த பெற்றோருக்கு ஒருவித நிதி உதவியும் அரசாங்கம் செய்ய வேண்டும்!'

எம்.சி.ராஜா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் ஆரம்ப கால நிர்வாகிகளுள் ஒருவரான மயிலை சின்னத்தம்பி பிள்ளையின் மகன். சென்னை செயிண்ட் தாமஸ் மவுண்ட்டில் பிறந்தார். ராயப்பேட்டை வெஸ்லி மிஷன் பள்ளியிலும், சென்னை கிருத்துவக் கல்லூரியில் படிப்பை முடித்த எம்.சி.ராஜா, பின் அதே இடங்களிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். எளிய முறையில் கற்பிப்பது பற்றி ஆசிரியர்களுக்கு எம்.சி.ராஜா எழுதிய அளவை (லிஷீரீவீநீ ஜிமீஜ்மீ தீஷ்ஷீளீ) நூல், கற்பிக்கும் முறை தொடர்பாகத் தமிழில் வெளியான முன்னோடி நூல் எனக் கருதப்படுகிறது. மாணவர்களுக்காகச் சிறு சிறு இலக்கண நூல்களையும், நீதி நூல்களையும் எழுதியுள்ளார். ஆர்.ரங்கநாயகி அம்மாளுடன் இணைந்து. மழலையர் பாடல் நூலை, 'கிண்டர்கார்டன் ரூம்' என்ற தலைப்பில் வெளியிட்டார்.



தலித் விடுதலைக்குக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தும் வகையில் சென்னையில் பல இடங்களில் இரவுப் பள்ளிகளையும், விடுதிகளையும் தொடங்கினார். 'கல்வியின் மூலமாக தலித்துகள் வாழ்வில் வளர்ச்சியைக் காண முடியும்; அரசியல் அதிகாரத்தைப் பெற முடியும். எனவே, எம் மக்களுக்கு இலவசக் கல்வி கற்க அனுமதி தாருங்கள்' என ஆட்சி யாளர்களிடம் கோரிக்கை விடுத்தார். 1917—ல் தொடக்கக் கல்விக் குழு, 1919—ல் தொடக்கக் கல்வி மசோதாவுக்கான சட்டவரைவுக் குழு, உயர் கல்வி மறுசீரமைப்புக் குழு, சென்னைப் பல்கலைக்கழக செனட் எனப் பல குழுக்களில் பங்கேற்று கல்வி உரிமைக்காகப் போராடினார்.

1910—களில் அரசியலில் தீவிரமாகச் செயல்படத் தொடங்கிய எம்.சி.ராஜா, அயோத்திதாசரின் ஆதிதிராவிட மகாஜன சபைக்குப் புத்துயிரூட்டினார். 1916—ல் அதன் செயலாளராகப் பொறுப்பேற்று தமிழகம் மட்டுமல்லாமல் பெங்களூரு, மும்பை உள்ளிட்ட நகரங்களிலும் இலங்கையிலும் பரவிய கிளைகளின் செயல் திட்டத்தை வகுத்தளித்தார். 1917—ல் மாண்டேகுவையும், 1919—ல் செம்ஸ்போர்டையும் சந்தித்து, ஒடுக்கப்பட்டோருக்கான அரசியல் உரிமையைக் கோரி மனு அளித்தார். இதன் தொடர்ச்சியாக சென்னை மாகாண சட்ட மன்றத்தின்

# பெருமை

உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

## ம.சுசித்ரா

எம்.சி.ராஜாவின் தனிவாழ்க்கையில் தீவிரமான செல்வாக்கு செலுத்தியவர்களில் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் குறிப்பிடத்தக்கவர். இருவரும் இராயப்பேட்டையிலேயே வாழ்ந்தவர்கள். வெஸ்லி கல்லூரியில் சேர்ந்து படித்தார்கள். இருவருமே வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்த்தார்கள். அங்கே ராஜா முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை உள்ள பகுதியின் மேற்பார்வையாளர் ஆனார். திரு.வி.க. தமிழ்ப் பேராசிரியர். ராஜா 1916—ஆம் ஆண்டில் ஜஸ்டிஸ் கட்சியில் இணைந்து ரசியலில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். திரு.வி.க.வின் மனம் காங்கிரஸ் ஆதரவாளரானார். 'தேசபக்தன்' என்ற இதழை நடத்துவதற்காக அவர் கல்லூரிப் பணியை உதறியபோது, எம்.சி.ராஜா வேலையை விட்டுவிட வேண்டாம் என்று திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரை விலக்கினார். திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அதைப் பொருட்படுத்தவில்லை.



எம்.சி.ராஜா படிப்பு முடித்து வெஸ்லி பள்ளியில் ஆசிரியரானார். அக்காலத்தில் சென்னை ராஜதானியில் பள்ளி வகுப்புகளுக்குப் பாடமாக அமைந்த பல நூல்கள் ராஜாவால் எழுதப்பட்டவை. 1917—ல் ஆளுநர் பென்ட்லான்ட் பிரபுவால் ஆரம்பப் பள்ளிக் கல்விக்குழுவுக்கு நியமனம் செய்ப்பட்ட எம்.சி.ராஜா 1919—ல் ஆரம்பக் கல்வி மசோதாவிற்கான பொதுக்குழுவிலும் பணியாற்றினார். உயர்நிலைப்பள்ளி கல்வி மறுசீரமைப்புக்குழுவிலும் செயல்பட்டார். சாரணர் இயக்கத்திலும் ஈடுபட்டார்.

தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம், ஆங்கிலோ — இந்தியப் பள்ளிகள், தாய்மொழிக் கல்வி உரிமை, கல்விக் கொள்கையில் சமூக நீதி, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு நிலமும் வேலையும், சிறுபான்மையோர் பாதுகாப்பு, ஒடுக்கப்பட்டோர் பிரதிநிதித்துவம் என சட்ட மன்றத்தில் பல்வேறு விஷயங்களுக்காகவும் குரல் கொடுத்தார். 1922—ல் ஆதிக் குடிகளான பறையர், பஞ்சமரை அதிகாரபூர்வமாக, 'ஆதிதிராவிடர், ஆதி ஆந்திரர்' எனக் குறிப்பிட வேண்டும் எனத் தீர்மானம் கொண்டுவந்தார். எம்.சி.ராஜா தந்த அடையாளத் தாலேயே இன்றும் பட்டியல் வகுப்பினர் குறிப்பிடப் படுகின்றனர்.

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் மதிய




சார்ந்த புத்தகங்களைப் பிரசுரிப்பது உள்ளிட்ட கல்விசார் செயல்பாடுகளே இந்தச் சங்கத்தின் பிரதானக் குறிக்கோளாக முன்வைக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக் குழுவுக்கு இரு முறை (1924, 1927) நியமிக்கப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கோரிப் போராடி வெற்றியும் கண்டார். அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள் உருவாகக் காரணமாக இருந்தார்.

உணவுத் திட்டத்தை நீதிக் கட்சி 1920—ல் அறிமுகப்படுத்தியது. பிறகு, நிதிச் சுமையைக் காரணம் காட்டி பிரிட்டிஷ் அரசு இந்தத் திட்டத்தை நிறுத்த, 1960—களில் காமராஜர் தமிழகம் முழுவதும் மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் என்கிற வரலாறு மட்டுமே பரவலாக அறியப்படுகிறது. ஆனால், 1919 மார்ச் 29 அன்று பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் நல வாரியமாகத் தொழிலாளர் துறையை நிறுவியது. இதன் ஆலோசனை வாரிய உறுப்பினர்களாக கில்பர்ட் ஸ்லேட்டர், ராமானுஜசாரியார், எம்.சி.ராஜா இடம்பெற்றிருந்தனர். இதில் எம்.சி.ராஜாவின் வழிகாட்டுதலின்படி ஒடுக்கப்பட்ட குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட தொழிலாளர் பள்ளியில்தான் நீதிக் கட்சி அரசால் 1920—ல் மதிய உணவுத் திட்டம் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏழை பட்டியலினக் குழந்தைகள் பள்ளிகளை நோக்கிச் செல்வதில் பசி மிகப் பெரிய தடைக்கல்லாக இருப்பதால், அனைத்து அரசுத் தொடக்கப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று எம்.சி.ராஜா சட்டப் பேரவை கவுன்சிலில் 1922—ல் வலியுறுத்தினார்.

பள்ளி, கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மட்டுமல்லாது, நாட்டின் முதல் தலித் நாடாளுமன்ற உறுப்பினராக உயர்ந்தபோதும் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து எம்.சி.ராஜா பெரும் பங்காற்றினார். அனைத்திந்திய ஆதிதிராவிடர் மகாஜன சங்கம் 1928—ல் அவர் தலைமையில் நிறுவப்பட்டது. இரவுப் பள்ளிகளைத் திறப்பது, இலவச வாசகர் வட்டங்களை உருவாக்குவது, நூலகங்களை நிறுவுவது, அரசியல், சமூகம், அறிவியல், பொருளாதாரம், இலக்கியம்

## பிறவி ஆசிரியர்

1883 ஜூன் 17 அன்று சென்னை பரங்கிமலைப் பகுதியில் மயிலை சின்னதம்பி (எம்.சி.) ராஜா பிறந்தார். பிரிட்டிஷ் அரசால் 1922—ல் ராவ் பகதூர் பட்டம் வழங்கப்பட்ட எம்.சி.ராஜாவும் திரு.வி.க.வும் ராயப்பேட்டையில் வசித்தார்கள். இருவரும் வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்து பின்னாளில் அங்கேயே வேலைசெய்தார்கள். இருவரும் பிற்காலத்தில் அரசியல் தளத்தில் முரண்பட்டபோதும் நட்பை முறித்துக்கொள்ளவில்லை.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்தபோது படிப்பு போக கிரிக்கெட், டென்னிஸ் விளையாட்டுகளிலும் ராஜா ஜொலித்தார். தமிழ்நாட்டில் சாரணர் இயக்கத்தைத் தொடங்கியவர் இவரே. மேற்கொண்டு, சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்தார். தான் ஆசிரியர் பணிக்கான பயிற்சியைப் பெறும்போதே சக மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறையில் புது உத்திகளைக் கற்றுத் தந்தார். ‘திரு.ராஜா ஒரு பிறவி ஆசிரியர். அவரிடம் கல்வி கற்கும் பேறு பெற்றவன் நான். வகுப்பில் உள்ள கடைநிலை மாணவனும் அவர் சொல்வதைப் புரிந்துகொள்ள முடியும்... மாணவர்களிடம் கடுமையாகவோ கோபமாகவோ நடந்துகொள்ளாமல், அவர்கள் உயிர்த்துடிப்புள்ளவர்களாக விளங்குமாறு பார்த்தும்கொள்வார்’ என்று ‘இராவ் பகதூர் எம்.சி.ராஜாவின் வாழ்க்கையும் தேர்வுசெய்யப்பட்ட எழுத்துக்களும் உரைகளும்’ நூலில் ஜே.சிவசண்முகம்

பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## அம்பேத்கருடன் இணைந்த எம்.சி.ராஜா

அம்பேத்கருடன் தொடக்கத்தில் கடுமையாக முரண்பட்டார் எம்.சி.ராஜா. அம்பேத்கர் என்ற சொந்த முயற்சியினால் அரசியல் உரிமை பெற்றுத் தர வேண்டும் என்ற எண்ணத்தாலே எம்.சி.ராஜா அத்தகைய முடிவை எடுத்தார். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட தருணத்தை, இரு பெரும் ஆளுமைகள் ஒரே மாதிரியாக அணுக முடியாது" எனத் தன்




S.Begum Suhrawardy, P. Rajagopalachari and Mrs and Mr. Rao Bahadur M.C.Rajah in July 01, 1929 (left to right)

மாபெரும் ஆளுமையின் வருகை தலித் தரப்பில் மட்டுமல்லாமல், தேசிய அளவிலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. 1930—ல் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பு நழுவியதால், அம்பேத்கரிடம் முரண்பட்டார்.


இதனால் புணே ஒப்பந்தம், அம்பேத்கரின் இந்து மதத் துறப்பு அறிவிப்பு எனச் சில விவகாரங்களில் வரலாறு எம்.சி.ராஜாவை அம்பேத்கருக்கு எதிராக நிறுத்தியது. இத்தகைய முரண்கள் தலித் அரசியல் குழுக்களின் ஆரம்ப நாட்களிலிருந்தே தொடர்ந்ததைப் பார்க்க முடிகிறது. அம்பேத்கரின் நியாயமான போராட்டத்தை விரைவாகவே உணர்ந்த எம்.சி.ராஜா, தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். "புணே ஒப்பந்த விவகாரத்தில் நானே என்னை மன்னிக்க முடியாத அளவுக்குத் தவறு செய்துவிட்டேன்" என வருந்திய எம்.சி.ராஜா, "அம்பேத்கரே எங்கள் பிரதிநிதி" என முழங்கினார்.

1942—ம் ஆண்டு புணேவில் நடந்த அம்பேத்கரின் பிறந்த நாள் கூட்டத்தில் பங்கேற்ற எம்.சி.ராஜா, அவருடன் மனம்விட்டுப் பேசினார். அதன் பின்னர், கிரிப்ஸ் குழுவில் அம்பேத்கருடன் இணைந்து செயல்பட்டார். "தன் மக்களுக்குத் தன்னுடைய 'அறவுரை' இதழில் குறிப்பிடுகிறார் மறைந்த தலித் அறிஞர் அன்பு பொன்னோவியம்.

தமிழக அளவில் மட்டுமல்லாமல், இந்திய அரசியலிலும் தடம்பதித்த எம்.சி.ராஜாவைப் பற்றி இங்கு, இன்னும் முழுமையான வரலாற்று நூல்கள் எழுதப்படவில்லை. அவரது சட்ட மன்ற உரைகள், நாடாளுமன்ற உரைகள், மாநாட்டுத் தீர்மானங்கள், அறிக்கைகள், பங்களிப்புகள் என முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. இந்த அவல நிலையில் தலித் ஆய்வாளர் வே.அலெக்ஸ் கொணர்ந்த 'பெருந்தலைவர் எம்.சி.ராஜா சிந்தனைகள்—1' என்ற நூல் மட்டுமே கொஞ்சம் ஆறுதலாக உள்ளது. எம்.சி.ராஜாவை மறுகண்டுபிடிப்பு செய்து நினைவுகூர்வதன் மூலம், தமிழகத்துக்கு மாற்று அரசியல் வரலாறு கிடைக்கக் கூடும்!

உயர்கல்வித் திட்டத்துக்கு இணையான முக்கியத்துவத்தை ஆரம்பக் கல்விக்கும் ராஜா அளித்தார். 1917—ல் ஆரம்பப் பள்ளிக் கல்விக் குழுவில் நியமிக்கப்பட்டார். 1919—ல் ஆரம்பக் கல்வி மசோதாவுக்கான பொதுக் குழுவிலும் பணியாற்றினார். உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவிலும் செயலாற்றினார். சொல்லப்போனால்,

உயர்கல்வியைவிடப் பள்ளிக் கல்வியைச் சீரமைப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சீரமைத்திட நிதி ஒதுக்கீடு செய்யும் சட்ட முன்வரைவு மீது எம்.சி.ராஜா 1922 நவம்பர் 15 அன்று சென்னை



சட்டப்பேரவையில் ஆற்றிய உரையின் தமிழாக்கம், வே.அலெக்ஸ் தொகுத்த ‘பெருந்தலைவர் எம்.சி.ராஜா சிந்தனைகள்’ புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. 1922—லேயே கல்வி நிதி ஒதுக்கீட்டுக்காக வலுவாகக் குரல் எழுப்பினார் ராஜா. அதிலும், ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். “ஓர் ஆய்வுக்கூடத்தை நிறுவுவதற்கான நிதியைக் கொண்டு ஏழை எளிய மக்கள் கல்வி பெறுவதற்கு 100 ஆரம்பப் பள்ளிகளை நிறுவி அவற்றை நிர்வகிக்கவும் முடியும்” என்று பேசினார்.

சென்னையில் பல இடங்களில் இரவுப் பள்ளிகளைத் தொடங்கக் காரணமாக விளங்கினார். இலக்கணம், தத்துவம், தர்க்கம், உளவியல், அறவியல் ஆகிய பிரிவுகளில் பள்ளி, கல்லூரிக்கான பல பாடப் புத்தகங்களை எழுதினார். சென்னை ராஜதானியில் இளங்கலை வகுப்புகளுக்குப் பாடமாகப் பரிந்துரைக்கப்பட்ட பல நூல்களை இயற்றினார். அவர் எழுதிய, ‘நீதி மார்க்கக் கதைகளும் பாடல்களும்’ புத்தகத்தை, ‘சிறுவர்களும் சிறுமிகளும் வாங்கி வாசிப்பாரேல் எளிதிற் தமிழ் நடையை உணர்வார்கள் என்பது திண்ணம்’ என்று 1907 ஆகஸ்ட் 27 அன்று வெளியான ‘ஒரு பைசா தமிழன்’ இதழில் பண்டிதர் அயோத்திதாசர் குறிப்பிட்டிருக்கிறார். தலித் குழந்தைகளுக்குப் பாடசாலைகளின் நுழைவாயிலைத் திறந்து வைத்தவர்களில் முன்னோடி அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஆல்காட், சென்னையில் 1894—ல் ஐந்து ஆல்காட் பஞ்சமர் இலவசப் பள்ளிகளை நிறுவினார். “தேனாம்பேட்டையில் ஆல்காட் தொடங்கிய தாமோதர் பஞ்சமர் இலவசப் பள்ளியில் 1907—ல் 22 வயதான எம்.சி.ராஜா பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார். இதன் மூலம், அவருடைய ஆசிரியர் பணி இங்கிருந்துதான் தொடங்கியது என்பது தெரியவருகிறது. அப்போதே அங்கு படித்த தலித் மாணவர்களுக்கென பிரத்தியேகப் பாடத்திட்டத்தை ராஜா வகுத்தார்” என்கிறார் ஆய்வாளர் ஸ்டாலின் ராஜாங்கம்.

## நிலா பாட்டுக்குச் சொந்தக்காரர்


மேலே குறிப்பிட்டிருக்கும் புத்தகங்கள் தொடர்பிலான குறிப்புகள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. மூலப் புத்தகங்களை ஆய்வாளர்கள் தேடிவருகிறார்கள். அதேநேரம், எம்.சி.ராஜா முதலில் தனித்து, பிறகு ரங்கநாயகி அம்மையாரோடு இணைந்து 1930—ல் எழுதிய, ‘கிண்டர்கார்டன் ரூம்’ என்ற மழலையர் பாடநூல், சென்னை ரோஜா முத்தையா நூலகத்தில் கண்டெடுக்கப்பட்டு, 2013—ல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சிறுவர் இலக்கியக் கர்த்தாவாக எம்.சி.ராஜா பரிமளிப்பதைக் காண முடியும். அதிலும், ‘கை வீசம்மா கை வீசு’, ‘நிலா நிலா ஓடிவா’, ‘சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு’ உள்ளிட்ட பாடல்கள் இவர் எழுதியவை என்பது ஆச்சரியமளிக்கிறது.

கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும், மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மட்டுமின்றி அவர்தம் பெற்றோருக்கும் நிதி உதவி நல்கப்பட வேண்டும் என்று ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தீவிரமாகச் செயலாற்றியவர் ஆசிரியரும் அரசியலருமான எம்.சி.ராஜா. ஒரு நூற்றாண்டுக்கு முன்னமே முற்போக்கான கல்வித் திட்டங்களை முன்னிறுத்திய ஓர் ஆசானைக் கொண்டாடத் தவறியவர்களாக இந்த ஆசிரியர் தினத்தன்று நிற்கிறோம்!

அலமாரி

# புத்தக விமர்சனம்

## தமிழ் பயிற்றுமொழி கனவும் நனவும்




**ஆசிரியர்:**

முனைவர் சு.நரேந்திரன்


**வெளியீடு:**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்., சென்னை – 600 050.**

**விலை : ரூ. 340**


தமிழகத்தில் தமிழ் வழிக்கல்வி ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே மலர்ந்தது என்பதை நூலாசிரியர் முன்வைக்கிறார். தமிழ் வழிக்கல்வியின் வளர்ச்சி, இங்கிலாந்தில் இருந்து மெக்காலே வருகைக்குப் பின்னர் கல்வியில் ஏற்பட்ட புரட்சியை உரிய ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

மெக்காலேவின் வருகைக்குப் பின்னர் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள், கிறிஸ்தவர்களால் ஏற்பட்ட முன்னேற்றம், காங்கிரஸ் அரசின் கல்விக் கொள்கைகள், ஹிந்தி திணிப்பை எதிர்த்து திமுகவின் போராட்டம் போன்றவை சுருக்கமாக, அனைவருக்கும் புரியும் வகையில் கூறப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை எடுத்துரைக்கும் இந்நூலில், தமிழர்கள் அவசியம் படித்து அறிய வேண்டிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன.




# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## "புலிகேசிக்குத் தெரியுமா?" 18

மறுநாள் மாலை கண்ணபிரானுடைய வீட்டுக் கூடத்தில் ஆயனர், சிவகாமி, கமலி, கமலியின் மாமனார் ஆகியோர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். புலிகேசியும் மகேந்திர பல்லவரும் நகர்வலம் வந்தது பற்றியும், அவர்கள் வடக்குக் கோட்டை வாசலில் ஒருவரிடம் ஒருவர் விடைபெற்றுக் கொண்ட காட்சியைப் பற்றியும், புலிகேசி அக்கோட்டை வாசல் வழியாக வெளியேறியது பற்றியும் யோகி அசுவபாலர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். புலிகேசி காஞ்சிக்கு விஜயம் செய்த நாளிலிருந்து அந்த யோகி தமது யோக சாதனத்தை அடியோடு மறந்து நகரில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மேற்படி பேச்சுக்கு இடையிடையே அங்கே தவழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்த சின்னக் கண்ணன் அவர்களுடைய கவனத்தைக் கவர முயற்சி செய்தான். கமலியும் அவனுடைய நோக்கத்துக்குத் துணை செய்கிறவளாய், பேச்சை மறித்து, சின்னக் கண்ணனுடைய பிரதாபங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் அசுவபாலர் அவளை, "ஐயோ! பைத்தியமே! இப்படியும் ஒரு அசடு உண்டா?" என்று சொல்லும் தோரணையில் பார்த்துவிட்டு, மேலே தமது வரலாற்றைத் தொடர்ந்தார்.




எல்லாம் முடிந்ததும் சிவகாமி, "மாமா வாதாபிச் சக்கரவர்த்திதான் போய்த் தொலைந்துவிட்டாரே? கோட்டைக் கதவுகளை இனிமேல் திறந்துவிடுவார்கள் அல்லவா?" என்று கேட்டாள்.

"எல்லாம் நாளை மறுநாள் தெரிந்து விடும், அம்மா! எனக்கென்னவோ அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த வாதாபி சளுக்கனுடைய முகத்தில் பத்து நாளாக இருந்த முகமலர்ச்சியை இன்றைக்குக் காணோம். பல்லவரிடம் விடைபெற்று வெளியே போகும் சமயத்தில் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருந்தான்! அந்த ராட்சதன் என்ன செய்கிறானோ, என்னவோ?"

"அப்படி என்ன செய்துவிடுவான்?" என்று சிவகாமி கேட்டாள்.

"மறுபடியும் அவன் கோட்டையை முற்றுகை போடத் தொடங்கலாம். அல்லது கோட்டையைத் தாக்கிப் பிடிக்க முயலலாம்."

"அப்படியெல்லாம் செய்வார்களா, என்ன? இத்தனை நாள் இவ்வளவு சிநேகம் கொண்டாடிவிட்டு?" என்று சிவகாமி வியப்புடன் கேட்டாள்.

"தங்கச்சி! இது என்ன நீ கூட இப்படிக் கேட்கிறாயே? இராஜ குலத்தினருக்கு விவஸ்தை ஏது? இன்றைக்குச் சிநேகிதர்களாயிருப்பார்கள்; நாளைக்குக் குத்திக் கொள்வார்கள். இன்றைக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தியாவார்கள்; நாளைக்குப் போர்க்களத்தில் சண்டை போடுவார்கள்!" என்றாள் கமலி.

ஆயனர், அசுவபாலரைப் பார்த்து, "வாதாபி அரசருக்கு என்ன கோபமாம்? ஏதாவது

# 18 சபதம்

## கல்கி

தெரியுமா?" என்று கேட்டார்.

"சளுக்கனும் பாண்டியனும் சிநேகிதர்களாம். கொள்ளிடக் கரையில் இரண்டு பேரும், ரொம்ப உறவு கொண்டாடினார்களாம். சளுக்கன் இங்கே வந்திருக்கும் போது, மாமல்லர் பாண்டியன் மீது படையெடுத்துச் சென்றதில் இவனுக்குக் கோபம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் ஒரு அபிப்பிராயம் என்ன தெரியுமா?...." என்று அசுவபாலர் நிறுத்தினார்.

"என்ன சொல்லுங்களேன்?" என்றார் ஆயனர்.

"சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டு மயங்கிப் போய் வாதாபி அரசர் சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டாராம். பல்லவேந்திரர் மறுத்து விட்டாராம்! — அதனால்தான் புலிகேசிக்குக் கோபமாம்!" என்றார் அசுவபாலர்.

"அவன் நாசமாய்ப் போக! அவன் தலையிலே இடி விழ!" என்றாள் கமலி அழுத்தந் திருத்தமாக.

அப்போது, "ஆஹா! இவ்வளவு திவ்யமான ஆசீர்வாதம் யார் வாயிலிருந்து வருகிறது?" என்று ஒரு குரல் கேட்டதும், அனைவரும் திடுக்கிட்டு எழுந்து நின்று, குரல் வந்த பக்கத்தைப் பார்த்தார்கள். அந்தக் கம்பீரமான குரல் சின்னக் கண்ணனுடைய கவனத்தைக் கூடக் கவர்ந்து விட்டதாகத் தோன்றியது. அவனும் உட்கார்ந்தபடியே ஆவலுடன் குரல் வந்த திசையை நோக்கினான்.



வீட்டின் பின் வாசல் வழியாக உள்ளே வந்தவர் வேறு யாருமில்லை; மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.

"அசுவபாலரே! நீர் சொல்லிக் கொண்டிருந்த வதந்தி என் காதிலும் விழுந்தது. ஆனால் அது உண்மையல்ல; வாதாபிச் சக்கரவர்த்தி சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி என்னைக் கேட்கவில்லை. பின்னே என்ன சொன்னார் தெரியுமா? 'இந்தப் பெண்ணுக்கு என்னவோ இவ்வளவு பிரமாத மரியாதை செய்கிறீரே? என்னுடன் வாதாபிக்கு அனுப்பினால் சாட்டையினால் அடித்து நாட்டியம் ஆடச் சொல்வேன்' என்றார். அவ்வளவு ரஸிக சிகாமணி அந்த மூர்க்கப் புலிகேசி!" என்றார் சக்கரவர்த்தி. அப்போது அவருடைய கண்களில் உண்மையான கோபத்துக்கும் வெறுப்புக்கும் அறிகுறி காணப்பட்டது.

அப்போது சிவகாமி ஓர் அடி முன் வந்து

சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து, "பிரபு! அப்பேர்ப்பட்ட பரம ரஸிகரின் முன்னிலையிலே என்னை நாட்டியம் ஆடச் சொன்னீர்களே! அது தர்மமா?" என்று கம்பீரமாக கேட்டாள்.

சக்கரவர்த்திக்கா நாகநந்தி ஓலை கொடுத்து அனுப்பினார்? இது தங்களுக்கு எப்படி...?" என்று தயங்கினார்.



"அது தவறுதான், குழந்தாய்! புலிகேசியின் முன்னால் உன்னை நான் ஆடியிருக்கச் சொல்லக்கூடாதுதான்; ஆனால் நான் கண்டேனா? அஜந்தாவின் அற்புத வர்ண சித்திரங்கள் எவனுடைய இராஜ்யத்தில் உள்ளனவோ, அவன் இப்பேர்ப்பட்ட ரஸிகத் தன்மையற்ற மூர்க்கனாயிருப்பான் என்று நான் நினைக்கவில்லை.... ஆயனரே! ஒரு செய்தி கேட்டீரா? காஞ்சிக் கோட்டைக்கு வெளியே இத்தனை மாதம் சளுக்க சக்கரவர்த்தி தண்டு இறங்கியிருந்தாரல்லவா? ஒரு தடவையாவது மாமல்லபுரத்துக்குப் போய் அவர் பார்க்கவில்லையாம்! நான் கேட்டதற்கு, 'உயிருள்ள மனிதர்கள் இருக்கும் போது வெறும் கல் பதுமைகளை யார் போய்ப் பார்த்துக் கொண்டிருப்பது?' என்று விடை சொன்னார். இது மட்டுமா? 'அஜந்தாவிலே அப்படி என்ன பிரமாதமாயிருக்கிறது? சுவரில் எழுதிய வெறும் சித்திரங்கள் தான்?' என்றார். இப்பேர்ப்பட்ட மனுஷரிடந்தான் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரும் பொருட்டு நாகநந்தியின் ஓலையுடன் பரஞ்சோதியை நீர் அனுப்பி வைத்தீர்; உமக்கு அது ஞாபகம் இருக்கிறதா?" என்று மகேந்திர பல்லவர் ஆயனரை நோக்கிக் கேட்டார்.

ஆயனருக்கு அப்போது உண்டான அளவு கடந்த ஆச்சரியத்தை அவருடைய முகக் குறி காட்டியது. "பல்லவேந்திரா! உண்மையாகவா? வாதாபிச்

"எப்படித் தெரிந்தது என்றுதானே கேட்கிறீர்? ஓலையை நானே படித்துப் பார்த்தேன். ஆனால் நாகநந்தி ரஸிகர் இந்த மூர்க்கப் புலிகேசியைப் போன்றவர் அல்ல. அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா? 'சைனியத்துடன் சீக்கிரம் வந்து பல்லவ ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் நீ கைப்பற்றிக் கொள். சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்துவிடு!' என்று எழுதியிருந்தார். எப்படியிருக்கிறது, விஷயம்?...ஆயனரே? உம்முடைய அத்தியந்த சிநேகிதர் நாகநந்தியினால் இந்தப் பல்லவ இராஜ்யத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வருவதற்கு இருந்தது, தெரியுமா?" என்றார் சக்கரவர்த்தி.

ஆனால், ஆயனரோ சக்கரவர்த்தி கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கவனித்தவராகக் காணப்படவில்லை. வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார். 'ஆஹா! புத்த பிக்ஷு கொடுத்த ஓலை வாதாபிச் சக்கரவர்த்திக்கா?... அப்படியானால், அஜந்தா வர்ண இரகசியம் புலிகேசி மகாராஜாவுக்குத் தெரியுமா?' என்று தமக்குத் தாமே மெதுவான குரலில் சொல்லிக் கொண்டார்.

(சபதம் தொடரும்)


SAKTHI CASH & CARRY
245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
ఇడ్లీ దోస పిండి
இட்லி / தோசை மாவு
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# யோக

## யோகக்கலை– யோகாவின் வகைகள் அதன் பயன்கள்

தினமும் யோகா செய்வதால் ஏற்படும் அற்புத பயன்கள் !!

யோகாசனங்கள் செய்யும் போது நம்முடைய உடலை பல கோணங்களில் வளைத்து யோகா செய்வதால் நம்முடைய உடலானது நல்ல அழகான வடிவத்தை பெறுகிறது.

தினமும் யோகாசனம் செய்வதன் மூலம் நமக்கு ஏற்படக்கூடிய இதயம் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும். யோகா செய்பவர்களுக்கு இரத்த ஓட்டம் சீராகி, இதயம் பலம் பெறுகிறது. மேலும் நல்ல சீரான சுவாசம் கிடைப்பதோடு இதயம் சரியாக இயங்கி உடல்நலத்தை மேம்படுத்துகிறது. ஆயுளையும் நீட்டிக்கிறது.

மன அழுத்தம், பயம் மற்றும் படபடப்பிலிருந்து விடுவிக்கிறது. நாட்பட்ட நோய்களான ஒவ்வாமை, தூக்கமின்மை, உயர் இரத்த அழுத்தம், உடற்பருமன், சர்க்கரை நோய் முதுகுவலி போன்றவற்றிற்கு சிறந்த பலனளிக்கிறது.

உள்நிலையில் அமைதி, ஆனந்தம் மற்றும் நிறைவை வழங்குகிறது. இரைப்பையின் செயல்பாடு இயல்பாகிறது. அஜீரண கோளாறுகள் சீரடைகிறது.


தகவல் பரிமாற்றம் மற்றும் பிறருடன் பழகுவதில் மேம்பட்ட நிலை. மனத்தெளிவு, உணர்ச்சிகளில் சமநிலை மற்றும் உற்பத்தி திறன் மேம்படுகிறது. நாள் முழுவதும் ஆற்றல் மற்றும் விழிப்புணர்வுடன் இருக்க உதவுகிறது. தன்னம்பிக்கை ஏற்படுத்துகிறது.

தினமும் யோகா செய்பவர்களுக்கு நரம்பு மண்டலங்கள் பலம் பெறுகின்றன. தினமும் யோகாசனங்கள் செய்பவர்களுக்கு மூளை தொடர்பான பாதிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன.

நிஜமாகவே உடல் எடையை குறைக்க யோகா உதவுமா? அப்போ என்னென்ன ஆசனங்களை செய்யலாம்?

உடல் எடை அதிகரிப்பு என்பது உலக மக்களிடையே ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது. உடல் எடை குறைப்பிற்காக மக்கள் பல விதமான உணவு பழக்கங்களை மேற்கொள்கின்றனர். யோகா முறை உடல் எடையை குறைக்க உதவுகிறது. அதை பற்றி இப்போது பார்ப்போம்.

உண்மையில் யோகா முறையானது உடல் எடையை குறைக்க உதவுகிறது. ஆனால் உணவு மற்றும் உடற்பயிற்சியுடன் சேர்த்து யோகாவை செய்யும் போது மட்டுமே இது சாத்தியமாகும். எனவே அதிகமான உணவை எடுத்துக்கொண்டு யோகாவை முயற்சிப்பதால் உடல் எடையில் எந்த



# யோகம்

விதமான மாற்றத்தையும் நாம் பெற முடியாது.

போட், லெனோவா, சாம்சங், ஹெச்பி மற்றும் பல சிறந்த பிராண்டுகளின் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவலின் ஆஃப்பர்ஸ் — எலக்ட்ரானிக்ஸ் & ஆக்சஸரீஸ் இல் பெரும் சேமிப்பு.

உடல், மன ஆரோக்கியம்

உடல் வலிமையை அதிகரித்தல், நினைவாற்றலை மேம்படுத்துதல் போன்ற பல விஷயங்களுக்கு யோகா உங்கள் மனதுக்கும் உடலுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது. யோகாவில் பல வகைகள் உள்ளன. சிலர் தியானம் மற்றும் நினைவாற்றலை அதிகரிக்க கூடிய யோகா முறைகள் மீது அதிக கவனம் செலுத்துகின்றனர். இன்னும் சிலரோ உடல் வலிமை குறித்த யோகா முறைகள் மீது கவனம் செலுத்துகின்றனர்.

யோகா என்றால் என்ன?

யோகா என்பது உடல் மற்றும் மனம் இரண்டிலும்




யோகா உதவுகிறது. எனவே யோகா முறையானது பல வித ஆரோக்கிய நன்மைகளை உடலுக்கு அளிக்கிறது. எனவே உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் கண்டிப்பாக யோகா முறையை பின்பற்றலாம்.

யோகா ஒரு தொன்மையான உடற்பயிற்சி முறையாகும். இந்தியாவில் பல காலங்களாக யோகா முறையானது பயன்பாட்டில் உள்ளது. கவனம் செலுத்தக்கூடிய பயிற்சி முறை ஆகும். யோகா முறைகளில் சுவாச பயிற்சிக்கு முக்கிய பங்குண்டு. ஏனெனில் நமது சுவாச முறையானது உடலில் முழு ஆரோக்கியத்தோடு தொடர்புடையது ஆகும். யோகாவில் பல வகையான யோகா முறைகள் உள்ளன. அவை நமக்கு பல விதமான ஆரோக்கிய நன்மைகளை வழங்குகின்றன. அவற்றை இப்போது பார்ப்போம்.




யோகா நித்ரா

இது ஒரு முக்கியமான யோகா முறையாகும். இது உடல் தளர்வுக்கு உதவுகிறது. நமது உடல் உறுப்புகள், எலும்புகள், மூட்டுகள் போன்றவற்றின் தளர்விற்கு இது உதவுகிறது. தியான முறைகளில் யோகா நித்ரா முக்கியமான முறையாகும். இது மன அழுத்தம், பதட்டம் போன்ற அறிகுறிகளை குறைப்பதற்கும் தூக்கத்தை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

ஆனால் இது உடல் கலோரிகளை எரிக்காது. ஆனால் இது நினைவாற்றலை மேம்படுத்த உதவுகிறது. அதனால் உடல் எடை குறைப்பிற்கு இது உகந்ததல்ல.

சக்தி யோகா

உடலின் இயக்கத்தை சுவாசத்துடன் இணைக்கும் ஒரு யோகா முறையாக சக்தி யோகா உள்ளது. இந்த யோகா முறை வேகமாக செய்யக்கூடிய யோகா முறையாக உள்ளது.மேலும் இது பல வித முறைகளை கொண்டுள்ளதால் யோகாவை விரும்புவோருக்கு இது பிடித்த யோகா முறையாக இருக்கும். மேலும் இது அதிக கலோரிகளை எரிக்கவும் உதவுகிறது. இதனால் உடலின் எடை குறைப்பிற்கு சக்தி யோகா உதவுகிறது.

பிக்ரம் அல்லது ஹாட் யோகா

இந்த யோகா முறையானது பல வகைகளை கொண்டுள்ளது. மொத்தமாக இது 26 வகைகளை கொண்டுள்ளது. இது பிரத்யேகமாக சுவாச பயிற்சிக்கான யோகா முறையாக உள்ளது. இந்த பயிற்சியை செய்வதற்கு தனிப்பட்ட அறை தேவைப்படுகிறது. பயிற்சி செய்யப்படும் அறைகள் 105 டிகிரி பாரன்ஹீட் மற்றும் 40 சதவீதம் ஈரப்பதத்தை கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் இந்த முறையில் அதிகப்படியான வியர்வை வெளியாகிறது.

நமது யோகா முறையை முழுமையாக செய்ய இந்த அறை ஒழுங்குநிலையானது உதவுகிறது. மொத்தமாக இந்த யோகா முறைகள் 90 நிமிடங்கள் செய்யக்கூடியவை ஆகும். மேலும் இவை 300 முதல் 500 கலோரிகளை உடலில் எரிக்கின்றன. எனவே எடை இழப்பை விரும்புபவர்களுக்கு இது சரியான யோகா முறையாக இருக்கலாம்.

உடல் எடையை குறைக்க யோகா எவ்வாறு



உதவும்.

வழக்கமான உடற்பயிற்சியின் ஒரு பகுதியாக உடல் எடையை குறைப்பதற்கு யோகா முறை உதவுகிறது. ஆனால் சிலருக்கு இந்த யோகா முறைகள் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் எடை இழப்பு என வரும்போது இது உடல் கலோரிகளை குறைக்க அதிகமாக உதவுகிறது. ஆனால் உடல் எடையை குறைக்க யோகா மட்டுமே சிறந்த

உள்ளூரில் உள்ள யோகாசன பயிற்சி மையத்தை அணுகுவது உங்களுக்கு நல்ல துவக்கமாக இருக்கும். ஏனெனில் தனியார் பயிற்சி மையத்தின் மூலம் பொதுவான சுவாச பயிற்சிகள் மற்றும் அடிப்படை யோகா முறைகளை கற்றுக்கொள்ள முடியும். நீங்கள் ஏற்கனவே சுறு சுறுப்பாக இருக்கிறீர்கள். உங்கள் எடை இழப்பு திட்டத்தில் யோகாவையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள் எனில் உங்கள் உடற்பயிற்சியுடன் வாரம் இருமுறை




பயிற்சி என கூற முடியாது.

உடற்பயிற்சியானது யோகாவை விடவும் உடல் எடையை குறைப்பதில் அதிக பயனளிக்கலாம். ஆனால் யோகா உடல் எடையை குறைப்பதை தாண்டி பல வகை நன்மைகளை அளிக்கிறது.

2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில் ஆண்கள் 10 நாள் யோகா பயிற்சி செய்தனர். அதில் அதிக எடை கொண்ட ஆண்கள் எடை இழப்பு மற்றும் இதய நோய்களுக்கான அபாயம் குறைந்து காணப்பட்டனர். மேலும் 26 வயதை கொண்ட ஆண்கள் இந்த ஆய்வில் 1.9 கிலோ எடையை குறைத்திருந்தனர்.

மற்றொரு ஆய்வில் அதிக எடையுள்ள பெண்கள் மறுசீரமைப்பு யோகா முறையை மேற்கொண்டனர். 48 வாரம் இந்த யோகா முறை செய்யப்பட்டது. இந்த காலத்தில் அவர்கள் உடல் எடையை இழந்திருந்தனர். இந்த யோகா முறையில் தோலில் உள்ள அதிகப்படியான கொழுப்பை அவர்கள் இழந்திருந்தனர்.

எடை இழப்பு யோகாசனங்கள்

நீங்கள் யோகா முறைக்கு புதியவர் என்றால் யோகா முறையை செய்யலாம்.

ஒருவேளை யோகா முறைகள் உங்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்றாலோ அல்லது உங்கள் ஊரில் யோகா பயிற்சி மையங்கள் இல்லை என்றாலோ நீங்கள் ஆன்லைன் மூலம் இந்த பயிற்சியை பெற முயற்சிக்கலாம். ஆன்லைனில் அனைத்து வகையான யோகா குறித்தும் இலவச பயிற்சிகள் கிடைக்கின்றன.

யோகா நன்மைகள்

ஆரோக்கியமான உணவு மற்றும் ஆரோக்கியமான உடற்பயிற்சி செய்பவர்கள் யோகா முறையை முயற்சிக்கும்போது அது அவர்களுக்கு நன்மை பயக்கும். ஆனால் முக்கியமாக யோகா மன பக்குவம் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த அதிகமாக உதவுகிறது.

ஆன்லைனில் யோகா கற்க விரும்புபவர்கள் யூ ட்யூப் அல்லது யோகா கற்க உதவும் தளங்களை பார்வையிடலாம்




## 'இஞ்சி, பாதாம்' நன்மைகள்

'மாஸ்டர் ஒரு ஸ்பெஷல் இஞ்சி டீ போடுங்க' என்று தேநீர் கடையில் கேட்பவர் நீங்கள் என்றால் (அல்லது) வீட்டில் ஜின்ஜர் (இஞ்சி) டீ குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் நீங்கள் என்றால் நிச்சயம் இந்த கட்டுரையை வாசிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் நாம் உண்ணும் உணவின் பயன் தெரிந்தால் தான் நாம் அதனை பயன்படுத்துவது அதிகரிக்கும். இல்லாவிட்டால் துரித உணவுகள் நம் ஆரோக்கியத்தைக் கெடுத்து உடலை துன்புறுத்தும்.


தேநீர்(டீ)—க்கு அடிமையாகாத நாக்கே இல்லை எனலாம். உணவு இல்லாமல் கூட சில சமயம் இருப்பதுண்டு. ஆனால் டீ இல்லாமல் யாரும் அன்றாட வாழ்க்கையை நகர்த்த முடியாது. நம் உணவு முறையோடும், வாழ்வியலோடும் பழகிவிட்ட ஒரு பானம் தேநீர் (டீ) தான். அதிலும் அவரவர் ருசிக்கேற்ப தனித்தனி வகையான தேநீர் வகைகள். சிலருக்கு ஏலக்காய் டீ, சிலருக்கு இஞ்சி டீ, சிலருக்கு மசாலா டீ, சிலருக்கு கிரீன் டீ என்று அவரவர் உடல் நலக்கேடுகளுக்கேற்ப தேநீர் வகைகள் மாறுபடும். இருப்பினும் பலரும் அதிகம் பயன்படுத்தும் தேநீர் வகை 'இஞ்சி டீ' தான்.

பருவ நிலை மாறும்போதும், சளி, இருமல், தொண்டைக்கம்மல் ஏற்படும்போதும் சுடச்சுட ஒரு இஞ்சி டீ குடித்தால் பலருக்கும் ஆத்ம திருப்தி ஏற்படும். அத்துடன் தொண்டையை பற்றிய கபமும், மூக்கு நீர் ஒழுகல், உடல் வலி, உடல் சோர்வு ஆகிய சீசனல் வைரஸ் இவற்றால் உண்டாகும் குறிகுணங்களும் நீங்கி விடும். அந்தயளவுக்கு மருத்துவ குணம் வாய்ந்த ஆன்டி பையாடிக் தன்மையுடைய மூலிகைப் பொருளாக உள்ளது நாம் பயன்படுத்தும் இஞ்சி.

இஞ்சி—க்கு உள்ள மருத்துவ குணங்கள் பல. இஞ்சியினால் தலைவலி, தலைபாரம், மூக்கடைப்பு, உடல் வலி, இருமல், மூட்டு வலி, செரியாமை, வயிறு உப்பிசம் ஆகிய எண்ணற்ற நோய்நிலைகளைப் போக்கும் மருத்துவ குணங்கள் உண்டு. அதனைக் கடந்து இன்றைய மருத்துவ அறிவியல் ஆச்சரியப்படும் வண்ணம் இன்னும் பல நோய் நிலைகளை தடுக்கும் தன்மையும் இதற்குண்டு. அவை எல்லாம் ஒருபுறமிருக்க, நலம் பயக்கும் குடல்வாழ் கிருமிகளுக்கும், இஞ்சிக்கும் என்ன தொடர்பு? அதனால் என்ன நன்மை? என்று தெரிந்துகொள்வது அவசியம்.

ஒவ்வொருவர் குடலிலும் கோடிக்கணக்கான கிருமிகள் வாழ்கின்றன. அவற்றில் 10 சதவீதம் கிருமிகள் மட்டுமே நம் குடலை சார்ந்தவை. மீதமுள்ள 90 சதவீதம் கிருமிகள் வெளியுலகில் இருந்து நம் குடலை அடைபவை. அவற்றில் பலவகைப்பட்ட கிருமிகள் நம் குடலுக்கு நன்மைபயப்பதாக உள்ளதை இன்றைய அறிவியல் பல்வேறு ஆய்வுகளின் மூலமாக உறுதி செய்துள்ளது. அத்தகைய கிருமிகளில் நடக்கும் ஆராய்ச்சிகளும் ஏராளம்.

இந்த கிருமிகள் நம் உடலில் சகவாழ்வு புரிந்து, அதாவது நம் உடலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டப்படி நம் குடலில் சுமூகமாக வாழ்ந்து கொண்டு, நம் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்க கூடிய வகையில் உள்ளன. சித்த மருத்துவம் இதற்குத் தான், 'மூத்த தயிர் உண்போம்' என்கிறது. பிணிகள் அணுகாமல் காக்க தேரையர் சித்தர் கூறிய வரிகள் இவை.






மருத்துவர்
சோ.தில்லைவாணன்

ப்ரோபையாட்டிக் என்ற குடல் வாழ் நன்மைப் பயக்கும் கிருமிகளைக் கொண்ட தயிரை உணவில் சேர்க்க வலியுறுத்துகிறது சித்த மருத்துவம். இன்று அறிவியலில் இது தனிபிரிவாகி வளர்ந்து வருவது சிறப்பு. ஆனால், நாம் நலக்கேட்டின் போது, மருத்துவர் ஆலோசனை இன்றி, அதிகப்படியாக பயன்படுத்தும் ஆன்டிபையாட்டிக் மருந்துகள் அதிகம் சிதைப்பது இந்த குடல்வாழ்க்கிருமிகளைத் தான்.

நாம் ஒரு வாரம் எடுக்கும் ஆன்டிபையாட்டிக் எனும் கிருமிக்கொல்லி மருந்துகளால். நம் குடலில் நன்மை பயக்கும் கிருமிகளும் சேர்ந்தே பாதிக்கப்படுகின்றன. அதனால் ஏற்படும் இழப்பை சீர்செய்ய, மீண்டும் குடலை பழைய நிலைக்கு திருப்ப, கிட்டத்தட்ட ஓராண்டுகள் கூட ஆகலாம் என்கின்றன சமீபத்திய ஆய்வுகள்.

அப்படி என்ன நன்மை இருக்கு நம் குடலில் வாழும் நன்மை பயக்கும் கிருமிகளால்? என்று பலருக்கும் யோசிக்க தோன்றும். இந்த நன்மை பயக்கும் கிருமிகள் நம் உடலில் பல நொதிகளையும், நரம்பு மண்டலத்திற்கு அவசியமான சில ஹார்மோன்களையும் கூட உற்பத்தி செய்வதாக ஆய்வுகள் கூறுவது சிறப்பான ஒன்று.

இன்னும் சொல்லப்போனால் இன்று உலகையே அச்சுறுத்தும் சர்க்கரை வியாதி, இருதய நோய்கள், இன்சுலின் தடை, புற்றுநோய்க்கு காரணமாகும் நாட்பட்ட அழற்சி போன்ற பல தொற்றா நோய்களுக்கும், இந்த குடல்வாழ் கிருமிகளுக்கும் கூட நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. இதனை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கணித்திருந்த நம் சித்த மருத்துவ முன்னோர்கள் ‘ஆறு மாதத்திற்கு ஒரு முறை பேதி மருந்து’ எடுக்க வலியுறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்டிபயாடிக் மருந்துகள் மட்டுமல்லாமல், அதிக சர்க்கரை சத்துள்ள உணவும், அதிக கொழுப்பு சத்துள்ள உணவும் கூட இந்த குடல் வாழ் கிருமிகளை பாதிக்கக்கூடியது. ஆக, பல்வேறு நோய்களில் இருந்து தடுத்துக்கொள்ள இந்த நன்மை பயக்கும் குடல் கிருமிகளை பாதுகாப்பது அவசியமாகின்றது. அதற்கு பயன்படும் முக்கிய மூலிகையாக இருப்பது இந்த இஞ்சி தான். அதுமல்லாது மஞ்சள், லவங்கப்பட்டை, வெந்தயம்,கிராம்பு போன்ற பல எளிய மூலிகைப் பொருட்கள் கூட அந்த வரிசையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.




‘சோகோல்’ என்ற இஞ்சியில் உள்ள வேதிப்பொருள் குடல்வாழ் கிருமிகளை காக்கும் தன்மைக்கு முக்கிய காரணமாக உள்ளது. இன்னும் பல்வேறு மூலிகையில் உள்ள பாலிபீனால் போன்ற வேதிப்பொருள்கள் குடல்



கிருமிகளுக்கு நன்மை செய்யும் நண்பர்களாக உள்ளன.

இஞ்சி நம் குடலில் நன்மை பயக்கும் லாக்டோபாசில்லஸ் மற்றும் பிஃபிடோபாக்டீரியம் ஆகிய கிருமி இனங்களின் வளர்ச்சியை அதிகரிக்கிறது என்கின்றன சமீபத்திய ஆய்வுகள். மேலும், இது அடிப்படையில் ஒரு பிரீ—பயாடிக் போல செயல்படுகிறது. அதாவது நன்மை பயக்கும் குடல் கிருமிகள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மை கொண்டதாக உள்ளது.

மொத்தத்தில் நோய்கள் அண்டாமல் காத்துக்கொள்ள இன்றைய நவீன மருத்துவம் கூறும் மாற்று வழி குடலை பராமரித்துக் கொள்வது. இந்த கருத்தையே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சித்த மருத்துவம் கூறியுள்ளது வியக்கத்தக்கது.

எனவே, தேநீரில் மட்டுமல்லாது உணவில் கூட அதிகம் இஞ்சி வேரை சேர்த்துக் கொள்வது பல நோய்களின் ஆதார வேரை அடியோடு நீக்கும். குடல்வாழ் கிருமிகளுக்கும், குடலுக்கும் நன்மை பயக்கும். இது தொற்றா நோய்கள் இல்லாத சமூகத்திற்கு வழிவகுக்கும் எளிய பாரம்பரிய பானம். பயன்படுத்தி பயனடைவோம்.

## பாதாம் சாப்பிட்டால் இவ்வளவு நன்மைகளா?

பாதாமில் இதய ஆரோக்கியத்திற்கான நன்மைகள் அதிகம் உள்ளன. பாதாம் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் நிறைந்தவை.

நீங்கள் தினமும் பருப்புகள்(nuts) சாப்பிட வேண்டும். நீங்கள் தொடர்ந்து உட்கொள்ள வேண்டிய ஆரோக்கியமான பருப்புகளில் பாதாம் ஒன்றாகும். தினமும் பாதாம் சாப்பிடும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது உங்கள் ஆரோக்கியத்திற்கு பல்வேறு வழிகளில் நன்மை பயக்கும்.

பல இந்திய வீடுகளில் ஊறவைத்த பாதாம் பருப்புடன் தங்கள் நாளைத் தொடங்குவது ஒரு வழக்கமாக உள்ளது. பாதாம் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் ஏராளம்.

1. இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது

பாதாமில் உங்கள் இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் பண்புகள் உள்ளன. வைட்டமின்








ஈ, மெக்னீசியம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் பாதாமில் இருப்பதால் அவை இதயத்திற்கு உகந்தது ஆகும். பாதாம் சாப்பிடுவதால் இதய நோய்கள் வருவதைக் கட்டுப்படுத்தலாம் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2. வைட்டமின் ஈ நிறைந்தது

வைட்டமின் ஈ உங்கள் ஆரோக்கியத்திற்கு சில அற்புதமான நன்மைகளை வழங்குகிறது. இந்த வைட்டமின் ஈ உங்கள் தோல் மற்றும் முடிக்கு நல்லது. இது ஒரு சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்றியாகும், இது சேதமடைந்த செல்களை சரிசெய்ய உதவுகிறது.

3. ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம்

உயர் இரத்த அழுத்தம் என்பது ஒரு தீவிரமான ஆரோக்கியமற்ற உடல்நிலை ஆகும். ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த ஆரோக்கியமான உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. பாதாமில் உள்ள மெக்னீசியம் ரத்த அழுத்தத்தை சீராக்க உதவும்.

4. ஆரோக்கியமான எடையை பராமரிக்கலாம்

பாதாம் ஒரு ஆரோக்கியமான உணவு. ஒரு சில பாதாம் பருப்புகளை சாப்பிடுவதால், உங்களை நீண்ட நேரம் பசி எடுக்காமல் வைத்திருக்கும் மற்றும் குறைந்த கலோரிகளை கொண்டுள்ளதால், இது ஆரோக்கியமான எடையை பராமரிக்க உதவும்.

5. நீரிழிவு நோயாளிகளுக்கு நல்லது

நீரிழிவு நோயாளிகளுக்கும் பாதாம் ஒரு ஆரோக்கியமான உணவு. இயற்கையாகவே ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைக்க பாதாம் உதவும் என்றும் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீரிழிவு நோயாளிகள் இதய நோய்க்கான அதிக ஆபத்தில் உள்ளனர். இதை பாதாம் மூலம் கட்டுப்படுத்தலாம்.

ஒரு நாளைக்கு எத்தனை பாதாம் சாப்பிட வேண்டும்?

6 முதல் 8 பாதாம் கொட்டைகளை வரை சாப்பிடலாம், என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். ஊறவைத்த பாதாம் பருப்பில் நன்மை அதிகம். அவற்றை இரவு முழுவதும் ஊறவைத்து காலையில் சாப்பிடலாம். வறுத்த மற்றும் உப்பு சேர்க்கப்பட்ட பாதாம் பருப்புகளைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

பாதாம் கொட்டைகளில் நன்மைகள் இருந்தாலும், அதை மருத்துவரிடம் ஆலோசனை மேற்கொண்டு உட்கொள்வது சிறந்த ஆலோசனையாக கருதப்படுகிறது.

# உரையாடல்

## உரையாடலும் உறவாடலும்

உரையாடலும் உறவாடலும் மனித வாழ்வின் இன்றியமையாத செயல்பாடுகள். மனிதர்களால் மட்டுமே இயலும் செயல்பாடுகள். இந்த இரண்டு வகையான செயல்பாடுகளுமே மனித வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்த உதவுபவை.

இதில் உறவாடலில் வார்த்தைகளுக்கான தேவை குறைவாகவோ சில நேரங்களில் இல்லாமலோ கூட இருக்கலாம். ஆனால் உரையாடல் வார்த்தைகளைக் கொண்டே அமையும்.


இவை மேற்கொள்ளப்படும் இடங்களை ஒட்டி ஆழமானதாகவோ மேம்போக்கானதாகவோ அமையும். மனித சமூகத் திரளில் நாம் புழங்கும்போது ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய நேரம், அவர்களோடு நமக்குள்ள நெருக்கம், தேவை போன்ற காரணிகள் இவற்றைத் தீர்மானிப்பதாக அமையும்.

ஒரு திருமணத்துக்குச் செல்கிறோம். அங்கு நமக்கு அறிமுகமான பலரும் வந்திருக்கின்றனர். அனைவருடனும் நம்மால் பேசிக்கொண்டிருக்க இயலாது. கிடைக்கும் நேரத்தில் திருமணத்தில் கலந்துகொண்டு நம் கடமையை நிறைவேற்றவே நேரம் போதுமானதாக இருப்பதில்லை. அது போலவே பலரும் இருக்கும் இடத்தில் ஒரு சிலருக்கு மட்டும் முக்கியத்துவம் தரவேண்டியதாக அமைந்துவிடும். அவ்வளவு பெரிய மனிதத் திரளிலும் நாம் நம்மையறியாமலே திறமையாக செயல்படுகிறோம்.

அறிமுகமான அனைவருக்கும் ஒரு புன்னகையை அளித்து விடுவோம். ஓரிருவருடன் சில வார்த்தைகள் பேசுவோம். சிலருடன் கையை அசைத்து நலமா என நாம் வினவ அவர்களும் தமது கையை அசைத்து நலமே என்பர். அது போலவே மற்றவர்கள் நம்மைக் கேட்க நாம் சைகையால் பதிலளிப்போம். நமக்கிருக்கும் நேர நெருக்கடி, அங்குள்ள சப்தமான சூழலில் இவைதான் சாத்தியம்.

இது போலவே தினமும் பணிக்குச் செல்லும்போது எதிர்ப்படும் நண்பர்களைக் கண்டுகொண்டவாறே சிறு புன்னகையுடன் கடப்போம். சிலர் வணக்கம் செய்ய நாமும் வணக்கம் செய்துகொண்டே கடப்போம். இவ்வாறான செயல்பாடுகள் உறவாடலில் அடங்கும். அதாவது இவர்களது நட்பும் உறவும் நமக்கு வேண்டும். அதனை அவ்வப்போது புதுப்பிப்பதற்கான வாய்ப்புகளாக இந்த எதிர்ப்படல்கள் பயன்படுகின்றன.

ஒரு கட்டத்தில் அவர்களோடு உரையாடவேண்டிய தேவை ஏற்படும்போது நம்மை நாம் அறிமுகம் செய்துகொள்ளவேண்டிய தேவையைத்தவிர்க்கவும், அவர்கள் நம்மை மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ளவும் இவை உதவும். இவ்வாறு சந்திக்க வாய்ப்பில்லாத நேரங்களில் நமக்கு நெருக்கமானவர்களோடு குறிப்பிட்ட கால இடைவெளியில் தொலைபேசி மூலம் பேசி தொடர்புகளை புதுப்பித்துக்கொள்ளலாம். ஒரு சமயம், நமக்கோ அவருக்கோ ஏதாவது ஒரு



# உயர்வோம்!


முனைவர்

**என். மாதவன்**

உதவி தேவைப்படும்போது தயக்கமின்றி ஒருவரை ஒருவர் கேட்க இது உதவியாக இருக்கும்.

அடுத்து நமது குடும்பம். இங்கே உறவாடலும் நடைபெறும்; உரையாடலும் நடைபெறும். ஆனால் தேவையான அளவுக்கு மட்டுமே உரையாடல் அமையும். உதாரணமாக ஒருவர் கடைக்குக் கிளம்புகையில் தேவையான பொருட்கள் குறித்த உரையாடல் இருக்கும். ஓரிரு பொருட்கள் தேவைப்படும் நிலையில் வாய்மொழியாக சொல்லப்படும். தேவையான பொருட்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பட்டியல் தரப்படும்.

குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் எந்த அளவுக்கு அதிகப் புரிதல் உள்ளதோ அந்த அளவுக்கு




குறைவான வார்த்தைகளே உரையாடலில் தேவைப்படும். பண்டிகை நாட்களில் வேறு சிலரும் இணையும் நிலையில் உரையாடலின் நீளம் மிகும். பொதுவாக வாழ்க்கை அனுபவங்களைப் பகிரும் நேரங்களாக அவை அமையும். மகிழ்ச்சியும் குதுகலமும் நிறைந்ததாக அந்த உரையாடல்கள் அமையலாம். உறவாடுதல் யாவும் உரையாடுவதிலிருந்தே அமையும். கொண்டாடும் உறவுகள் என்னவகையானாலும் அவை மலர்வதற்கும் வளர்வதற்கும் தொடர்வதற்கும் உறவாடுவோருக்கிடையிலான உரையாடலே அடிப்படையாக அமைகிறது. இணக்கமான உரையாடல்கள்தான் நெருக்கமான — இறுக்கமான உறவுகளுக்கு வழிவகுக்கும். ஒருவரின் உரிய மதிப்பிற்கோ, உயரிய மானத்திற்கோ கீறல்களை ஏற்படுத்தும்வகையில் உரையாடல்கள் உரசல்களாக அமையுமெனில் மலர்ந்த உறவுகள் வளர்வதற்கோ தொடர்வதற்கோ வாய்ப்பில்லாமல் போகும்.

இருவருக்கிடையிலான தனி உரையாடல்களாயினும், பிறரின் முன்னிலையில் நிகழும் பொது உரையாடல்களாயினும் அவை பிறரை பெருமைப்படுத்தும் வகையிலும் ஊக்கப்படுத்தும் வகையிலும் அமைவது, நல்ல உறவுகள் மலர்வதற்கும், மலர்ந்த உறவுகள் வளர்வதற்கும், வளர்ந்த உறவுகள் தொடர்வதற்கும் ஏதுவாக அமையும். அவ்வாறின்றி, அவை பிறரைச் சிறுமைப் படுத்துவதாகவோ, காயப்படுத்துவதாகவோ அமையுமெனில் உண்மை உறவுகள் மலர்வதற்கு ஒருபோதும் இடமிருக்காது. அதாவது, உண்மையாகவும் உளப்பூர்வமாகவும் உறவுகள் அமைவதற்கு உறவாடுவோருக்கிடையில் நிகழும் உரையாடல்கள் இணக்கமாகவும் இனிமையாகவும் அமைதல் இன்றியமையாததாகும்.

ஒருவர் தான்சார்ந்த குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பண்பாடு



போன்றவற்றின் அடிப்படையில் தன்னுடைய உரையாடல்களையும் உறவாடல்களையும் தீர்மானித்துக்கொள்கிறார். அவ்வாறு தீர்மானிக்கப்படும் ஒருவரின் உரையாடல்களும் உறவாடல்களும் அவர் சார்ந்த சூழல்களின் உள்ளும் புறமும் நிலவும் முரண்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கின்றன. முரண்களில் நட்புமுரண், பகைமுரண் ஆகிய இரு வகை முரண்கள் உண்டென்பதால் அவற்றின் அடிப்படையில்தான் உரையாடல்களும் உறவாடல்களும் அமையும். இவ்வாறான, முரண்களிலிருந்தே நட்புறவையும் பகை உறவையும் தீர்மானிக்க இயலும். பெரும்பாலும், நட்புமுரண்களைத் தீர்மானிப்பதிலும் நட்புறவுகளை அடையாளம் காண்பதிலும்தான் தவறுகள் நேர்ந்துவிடுகின்றன.

முரண்களைப் பிரித்தறியும் புரிதல்களைப் பொறுத்தே உரையாடல்களும் உறவாடல்களும் அமைகின்றன. போதிய புரிதல்களின்மையே நட்பு முரண் களையும் பகை முரண்களாகக் கருதும் பிழைகள் நேர்கின்றன. பொதுவாக, முரண்கள் இடம், காலம், பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் தம்முடைய நிலைகளில் மாறுபடும். அதாவது, நட்பு முரண்கள் எப்போதும் நட்பு முரண்களாகவே இருப்பதில்லை. அவை, இடம், பொருள், காலம் போன்ற வற்றிற்கேற்ப மாறுபட்டு பகை முரண்களாகவும் விளங்கலாம். அதேபோல பகை முரண்கள் மாறுபட்ட சூழல்களில் நட்பு முரண்களாகவும் விளங்கலாம்.


முன்னிறுத்தப்படும் முதன்மை முரண்பாடுகளைப் பொறுத்தே நட்பு முரண், பகை முரண் ஆகியவற்றைப் பிரித்தறியமுடியும். முரண்பாடு களில், உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டியவை, நீண்டகாலச் செயல் திட்டங்களின் அடிப்படையில் தீர்வுகாணப்படவேண்டியவை என வகைப்படுத்தி அறியும் நிலையிலிருந்துதான் உரையாடல்கள் அமையும். இத்தகைய புரிதல்கள் இல்லா நிலையில், உரையாடல்களின் போக்குகள் இணக்கமாகவும் வெற்றிகரமாகவும் அமைவதில்லை.

அமைப்பாக்க நடவடிக்கையில் உடன்பணியாற்றுவோருக்கிடையில் இவ்வாறான புரிதல்கள் மிகவும் இன்றியமையாததேவையாகும். அமைப்பின் நலன்கள், மக்களின் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வரையறுக்கப்படும் உடனடி இலக்கு மற்றும் நெடுங்கால இலக்குகளைக் கொண்டே அடிப்படை முரண்களையும் முதன்மை முரண்களையும் வகைப்படுத்திட இயலும். பல்வேறு வகையிலான அடிப்படை முரண்களும் அவற்றின் அடிப்படையில் அவ்வப்போது எழும் சிக்கல்களும் உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய அல்லது முதலில் தீர்வுகாணவேண்டிய முரண்களை உருவாக்கும். அவற்றை முதன்மை முரண்கள் என அறியலாம்.

குடும்பம் உள்ளிட்ட சமூகம், பொருளியல், அரசியல், பண்பாடு போன்ற தளங்களில் நிலவும் முரண்கள் மற்றும் சிக்கல்களில் உடனடியாகத் தீர்வுகாண இயலாதவையே அடிப்படை முரண்கள் என்றும், அவற்றில் எவ்வகை முரண்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறதோ அதுவே முதன்மை முரண்பாடு என்றும் புரிந்து கொள்ளலாம்.

இது அமைப்பு மற்றும் மக்கள் நலன்களைச் சார்ந்தே தீர்மானிக்கப்படும். அதாவது, அமைப்பின் இலக்கு, அதனடிப்படை யிலான அடிப்படை முரண்கள், அவற்றில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய முதன்மை முரண்கள், அவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும் நட்பு முரண்கள், பகை முரண்கள் போன்ற யாவற்றையும் புரிந்துகொள்வதும் தீர்மானிப்பதும் அமைப்பாக்க நடவடிக்கையில் களப்பணியாற்றுவோரின் கடமையாகும். இத்தகைய புரிதலும் தீர்மானிக்கும் திறனும் இல்லையேல், பெரும்பாலும் தனிநபர்களுக்கிடையிலான உரையாடல்கள்

தற்குறியான குறுகிய பார்வை கொண்டவையாகவும் அமைப்பு மற்றும் மக்கள் நலன்களுக்கு எதிரானவையாகவும் அமையும். குறிப்பாக, நட்பு முரண்களையே பகை முரண்களாக அணுகும்




நிலை உருவாகும். இதனால், குழு முரண்களும் மோதல்களும் விளையும்.

வெற்றிகரமான உரையாடல்களுக்கும் உறவாடல்களுக்கும் தம்மைச் சுற்றி நிலவும் முரண்களைப் 'புரிந்துகொள்ளுதல்' என்பது எவ்வளவு இன்றியமையாததோ அதேபோல அவற்றை எவ்வாறு கையாளுவது என்னும் 'அணுகுதல்' என்பதும் மிகமிக இன்றியமையாததாகும். உள்ளது உள்ளபடி ஒன்றைப் புரிந்துகொள்வதோடு அதனை எவ்வாறு வெற்றிகரமாக அணுகுவது அல்லது எதிர்கொள்வது அல்லது செயற்படுத்துவது என்பதுதான் முதன்மையான தேவையாகும். அதாவது, வெற்றிகரமான செயற்பாட்டுக்கு பக்குவமான அணுகுமுறைதான் அடிப்படையாக அமையும். அவ்வாறு பக்குவமான அணுகுமுறை இல்லாத எதுவும் இறுதி இலக்கை எட்டும் வகையில் வெற்றிகரமாக அமையாது.

இன்றைய தொலைக்காட்சி யுகத்தில் இப்படிப்பட்ட உரையாடல் குறைந்து வருவது கவலைக்குரிய விஷயமே. நம் வீட்டிற்கு ஒருவர் வருகிறார் என்றால் நாம் முதலாவதாக செய்யவேண்டியது நமது வீட்டின் தொலைக்காட்சிப் பெட்டியை அணைப்பதுதான். அல்லது குறைந்தபட்சம் அதன் ஒலியையைவது முற்றிலும் குறைப்பது. இது விருந்தினர்கள் மகிழ உதவும். அது போலவே நமது கைப்பேசியையும் தொலைவில் வைத்துவிட்டு உரையாடுவது நல்லது.

பள்ளிகளில் எவ்வளவுக்கெவ்வளவு உறவாடும் வாய்ப்பு ஆசிரியருக்கும் மாணவருக்கும் வாய்க்கிறதோ அந்த அளவுக்கு உரையாடலின் நீளமும் புரிதலும் மிகும். அதாவது புரிதலின் தன்மையை ஒட்டி உரையாடல் நீளவோ குறையவே செய்யும். ஆனால் அதிக மாணவர்கள் உள்ள வகுப்பறையில் உரையாடலை ஒழுங்குபடுத்துவது ஆசிரியர்களுக்கு சவாலான பணியாகும். இது போன்ற நேரங்களில் மாணவர்களிடையே குழு உரையாடல் நடைபெற ஏற்பாடு செய்யலாம்.

இது ஆசிரியர்களின் பணிப்பளுவைக் குறைப்பதோடு, மாணவர்கள் இயல்பான மொழியில் உரையாட வாய்ப்பளிக்கும். இது மாணவர்கள் பயமின்றி கற்றலில் முன்னேற்றம் அடையவும் உதவும். அறிமுகமில்லாதோரிடமும் அவ்வப்போது சிறு சிறு உரையாடல்கள் நிகழக்கூடும். ஓரிடத்திற்கு வழி கேட்க, குறிப்பிட்ட எண் பேருந்து வருமா என்பதை அறிய போன்றவை இப்படிப்பட்டவை.

உரையாடல்கள் பல நேரங்களில் விவாதங்களுக்கும் இட்டுச் செல்லும். உரையாடல் எப்போது விவாதமாக மாறுகிறதோ அப்போதே விவாதிப்பவர் தன்னிலை மறக்காமல் தனது தரப்பு நியாயங்களை எடுத்து வைக்கலாம். இப்படிப்பட்ட நேரங்களில் உரையாடுவோரில் யாராவது ஒருவருக்காவது விட்டுக்கொடுக்கும் மனநிலை வேண்டும்.

ஒரு கட்டத்தில் நட்பில் விரிசல் வருமென்றால் ஒவ்வொருவருக்கும் தனது கருத்தை வைத்துக்கொள்ளும் உரிமை உண்டு என்ற வகையில் உரையாடலை முடித்துக் கொள்ளலாம். நல்ல உறவாடும் நபர்களாகவும் உறவுகளின் மதிப்பை உணர்ந்தவர்களாகவும் உள்ளோர் மத்தியில் விரிசல் உருவாவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருக்கும்.

எது எப்படி இருந்தாலும் உரையாடலும் உறவாடலும் மனித குலத்திற்கு மட்டுமே கிட்டியுள்ள அற்புதமான வாய்ப்பு. இவை இரண்டுமே மனிதர்களின் வெற்றிக்கான படிக்கட்டுகள். இவை எந்த அளவுக்கு பொருள் பொதிந்ததாக அமைகிறதோ அந்த அளவுக்கு அவை தனிமனித உயர்வுக்கும் அதன் மூலம் சமூக உயர்வுக்கும் பயன்படும்.

# தமிழ் 2022

## நற்றமிழரின் நாடித்துடிப்பு

### JANUARY




### FEBRUARY




### MARCH




### APRIL




### MAY




### JUNE




### JULY




### AUGUST




### SEPTEMBER




### OCTOBER




### NOVEMBER





### DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat the Best!
Eat Fresh!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers